# பிழைக்கும் வழி

வித்யா விஹாரிணியும் சேர்ந்தது.

## PRACTICAL LIFE.

WITH WHICH IS INCORPORATED THE VIDYA VIHARINI.

ஜி. எ. வைத்யராமன், பி. எ., பத்ராதிபர்

G. A. VaidyaRaman, B.A., EDITOR.

புஸ்தகம் 5. Vol. 5. | ப்ரமாதீசஹு ஆவணிமீ, AUGUST 1913. | ஸஞ்சிகை 8. No. 8.


## Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, economics, story, biography, citizenship, and popular, scientific and technical education.

'Practical Life' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | *Inland.* Rs. A. P. | | *Foreign.* Rs. A. P. |
|---|---|---|---|
| Per annum ... | 4 0 0 | ... ... | 6 0 0 |
| Single copy ... | 0 6 0 | ... ... | 0 8 0 |
| Sample copy ... | 0 2 0 | ... ... | 0 3 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | |
|---|---|---|
| 1 Page | ... 5 0 0 | per month. |
| ½ do | ... 2 8 0 | do |
| ¼ do | ... 1 4 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors**:—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. Vaidya Raman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

## பிழைக்கும் வழி.

முக்யமாய் விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில், பொருளாதாரம், கதை, ஜீவ்ய சரித்ரம், ப்ரஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான ஒரு மாஸாந்தரத் தமிழ்ப்பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள், மாணுக்கர்கள், இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'பிழைக்கும் வழி'யை வாங்கிவருகிறுர்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | | அந்ய நாடு. |
|---|---|---|---|
| வருஷம் 1க்கு ... | 4 0 0 | ... | 6 0 0 |
| தனிப்ரதி ... | 0 6 0 | ... | 0 8 0 |
| மாதிரி காபி ... | 0 2 0 | ... | 0 3 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | |
|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | 5 0 0 |
| ½ பக்கத்திற்கு | ,, ,, | 2 8 0 |
| ¼ பக்கத்திற்கு | ,, ,, | 1 4 0 |

வ்யாஸம்எழுதுகிறவர்கள்கவனிக்கவேண்டியவை

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானுலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை கிருபநேயர்கள் அறியவேணும்.

ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3, & 4, சுங்குராம செட்டித் தெருவு, ஜார்ஜ் டவுன்,
மதராஸ்.

## PRIZE ESSAY COMPETITION
## வ்யாஸங்களுக்கு வெகுமதிகள்.

1913-ம் வருஷம் ஜுலைமாஸம் முதல் நமது பத்ரிகையில் ஒரு வ்யாஸப் போட்டி நடத்தப்பட்டு வருகிறது. எந்த விஷயத்தைப் பற்றி வ்யஸம் எழுதவேண்டும் என்பதை ஒவ்வொரு ஸஞ்சிகையிலும் குறிப்பிடுவோம். சந்தாதாரர்கள் மட்டும் இந்தப் போட்டியில் சேரலாம். வ்யாஸங்களை ஸுலபமானதும் தெளிவானதுமான தமிழ் நடையில் எழுத வேண்டும்.

ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரே பக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். ஒவ்வொரு வ்யாஸமும், நமது பத்ரிகையில் $2\frac{1}{2}$-பக்கம் அதாவது 4000 எழுத்துகளுக்கு மேல்போகக் கூடாது. ஒப்புக்கொள்ளப்பட்ட வ்யாஸங்களில் முதல்தரமானதை எழுதியவருக்கு ஐந்து ரூபாய் பரிசு கொடுக்கப்படும்.

ஒப்புக்கொள்ளப்பட்ட மற்ற வ்யாஸங்களில் எவைகளையாவது ப்ரசுரிக்கும் பக்ஷத்தில் அவைகளுக்கும் நமது பத்ரிகையில் வெளியாகும் மற்ற வ்யாஸங்களைப்போல் வழக்கப்படி பக்கம் ஒன்றுக்கு ஒரு ரூபயாக ஸம்பாவனை செய்யப்படும். வ்யாஸங்களைத் தராதரம் பார்ப்பதில் பத்ராதிபருடைய தீர்மானம் முடிவானது.

அக்டோபர்மாஸத்துக்கு வ்யாஸம் எழுதுவதற்கு விஷயம்.

நூறுரூபாய் முதல் போடக்கூடிய ஏழைஸ்த்ரீ எந்தத்தொழிலைச்செய்தால் அதிகலாபம் கிடைக்கும்?

[கணக்கு விவரங்களோடு எழுதவேண்டும்.]

வ்யாஸங்களை அக்டோபர்மீ 30உக்குள் அனுப்பிவிடவேண்டும். அந்தத் தேதிக்குப் பின் அனுப்பப்படும் வ்யாஸங்கள் வ்யாஸப் போட்டிக்கு அங்கீகரிக்கப்படமாட்டா.

பத்ராதிபர்.

## SPECIAL ARTICLES.
## விசேஷ வ்யாஸங்கள்.

### THE JULY PRIZE ESSAY COMPETITION.
### ஜுலைமாஸத்து வ்யாஸப்போட்டி விஷயம்.

சென்ற வைகாசிமாஸத்து ஸஞ்சிகையில் ஜுலைமாஸத்துப் போட்டிக்காக "நமது விவஸாயிகள் ஏழைகளாயிருப்பதற்குக் காரணங்கள் என்ன?' என்னும் விஷயத்தைப்பற்றி எழுதவேண்டுமென்று குறிப்பிட்டிருந்தோம். அந்த விஷயத்தைப்பற்றி சிலரே வ்யாஸம் எழுதி அனுப்பி யிருக்கிறார்கள். இன்னம் பலர் எழுதமுன்வராதது விஸனிக்கத்தக்கது.

அனுப்பப்பட்ட வ்யாஸங்களில், கர்நூல் பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண்ட் அக்கௌண்டெண்டாகிய மிஸ்டர் பி.வி.வாமனமூர்த்திராவ் அவர்கள் எழுதிய வ்யாஸமே மற்றெல்லா வ்யாஸங்களையும்விட சிறந்ததா யிருக்கிறது. ஆகையால் அவருக்கே ஐந்துரூபாய் பரிசு அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த வ்யாஸத்தை வேறு பக்கத்தில் ப்ரசுரித்திருக்கிறோம். மற்ற வ்யாஸங்களில் பிரான்மலை கே. முத்துவையப் பிள்ளை எழுதிய வ்பாஸம் எழுதிப்போகிறமட்டில் கோர்த்தியாயிருக்கிறது. அவர் சொல்லும் காரணங்களாவன:—

(1) ஸரியானபாசனம் இல்லாதது.

(2) சாஸ்த்ரோக்தமான எரு சேகரிக்கத் தெரியாதது.

(3) நல்லவிதைகளை வைத்துக்கொள்ளாதது.

இவருடைய வ்யாஸத்தில் சில பாகங்களை ப்ரசுரிக்க இந்தமாஸம் ஸஞ்சிகையில் இடமில்லாததால் இன்னொரு ஸஞ்சிகையில் ப்ரசுரிப்போம். ப்ரசுரித்தபின் அவருக்கு ஸம்பாவனை அனுப்பப்படும்.

திருநெல்வேலி ஜில்லா கடயத்திலுள்ள கோமதிநாயக வாத்யார் எழுதியனுப்பிய வ்யாஸத்தில் பின்வரும் காரணங்கள் கவனிக்கத் தக்கவை:—

(1) பெரிய குடித்தனக்காரர்கள் ஸொந்த ஸாகுபடிசெய்யாமல் குத்தகைக்கு விட்டுவிட்டு வேறிடங்களுக்குச் சென்று வஸித்து நிலங்களைப்பற்றிக்கவலை கொள்ளாமலிருப்பது.

(2) விவஸாயிகள் லாபம் தரக்கூடிய வெவ்வேறு பயிர்களை ஸாகுபடிசெய்யாமல் ஒரே பயிரை ஸாகுபடி செய்தல்.

(3) காட்டிலாகா நிர்ப்பந்தத்தால் காடுகளில் ஆடுமாடுகள் மேய்க்க முடியாமலும், விவஸாயத்துக்கு வேண்டிய இலை தழைகளும் மரங்களும் வெட்ட முடியாமலும் கஷ்டப்படுவது.

மற்றவர்களுடைய வ்யாஸங்களில் விசேஷமான காரணங்களும், யோசனைகளும் இல்லையாதலால் அவற்றைக் குறிப்பிடவில்லை. ப்ரசுரிக்காத வ்யாஸங்களைத் திரும்பப் பெறவேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பினால் வ்யாஸங்கள் அனுப்பப்படும்.

இந்த வ்யாஸப் போட்டிக்கு ஸ்வல்ப சந்தாதாரர்களே வ்யாஸம் எழுதியனுப்பினதுபோலல்லாமல், மற்ற வ்யாஸப்போட்டிகளுக்கு அநேகர் வ்யாஸம் எழுதியனுப்புவார்கள் என்று எண்ணுகிறோம்.

பத்ராதிபர்.

## WHY ARE OUR AGRICULTURISTS POOR?

BY
P. V. VAMANAMURTIROW
*Accountant, P. W. D., Kurnool.*

### நமது விவஸாயிகள் ஏழைகளாயிருப்பதற்குக் காரணங்கள் என்ன?

இது அடியில் கண்டவிஷயங்களுக்கு ஸம்பந்தப்பட்டதாயிருக்கிறது:—

(1) உழவு விஷயம்.

(2) கால்நடைகளின் தீவனமும் மேய்ச்சலும்.

(3) பூமிகளுக்கு எரு இடுவது.

(4) விதைதான்யங்களைத் தெரிந்தெடுப்பது.

(5) விதை விதைப்பதும், நாற்று நடுவதும்.

(6) க்ராமக்கணக்குமணியகாரர்களின் ஸ்திதி.

(7) ஸெட்டில் மெண்டில் நிலத்தீர்வை ஜாஸ்தி செய்வதும், ஸர்க்கார் கிஸ்து கட்டும் விஷயத்தில் கஷ்டமும்.

(8) அளக்கும்படிகளில் பெரியதாயிருந்தவைகளை சிறியதாய்ச் செய்தது.

(9) வருஷாந்தர ஜமாபந்திச் செலவு.

(1) உழவு விஷயம்:—இத்தேசத்தில் ஸாதாரண நாட்டுப்புறத்து விவஸாயிகளில் அனேகர் குரும்பாடுகளைப்போல் ஒன்றையும் கவனியாமல் தங்கள் முனனோர்கள் நாள் முதல் பழகிவந்த கலப்பைகளையே வைத்து உழுது வருகிறார்கள். ஸர்க்கார் ச்ரேஷ்டமான (Swedish Plough &c) அன்யதேசங்களில் வழங்கிவரும் கலப்பைகளைக்காட்டி அதைவாங்கி உபயோகித்து வரும்படி சொன்னால் உபயோகப்படுத்துகிறதில்லை. ஏன்? அதுகெட்டுப் போனால் அதை ரிபேர் செய்ய வேலையாட்கள் தங்கள் க்ராமத்தில் இல்லையென்ற பயத்தால்தான். ஆகையால் உழவுமாடுகளுக்கு கஷ்டமில்லாமலும் விவஸாயிகளுக்கும் கஷ்டமில்லாமலும் பூமியை ஆழமாய் உழும்படியான இந்தியாவிலேயே வழங்கிவரப்பட்ட கலப்பைகளில் எது ச்ரேஷ்டமோ அதைக்காட்டி அந்தமாதிரிகலப்

பையைக்கொண்டு பூமிகளை உழும்படி ஏற்பாடு செய்தால் ப்ரயோஜனமுண்டு. இது ஏற்படாத வரையில் பொதுவாய் விவஸாயிகளுக்கு இந்த விஷயத்தில் அபிவ்ருத்தியும் லாபமும் இல்லை. ஏதோ சில விடத்தில் மட்டும் பணக்காரர்களாய் இருப்பவர்கள் மாத்ரம் தங்கள் பூமிகளை உழும் விஷயத்தில் அபிவ்ருத்தி அடைந்திருக்கிறார்கள். மற்றவர்களின் ஸ்திதி முன்போலவே வ்ருத்தியில்லாமலிருக்கிறது.

(2) கால்நடைகளின் தீவனமும், மேய்ச்சலும்.—முன்காலங்களில் கால்நடைகள் மேய்வதற்கு ஊர்மந்தை, கானல்கள், படுகைபூமிகள், புறம்போக்குபூமிகள், தருசுபூமிகள் ஏராளமாயிருந்தன. ஊர்மந்தையின் விஸ்தீரணம் ஸாதாரணமாய் பைமாஷ்காலத்தில் இருந்ததைவிட இப்போது ஏறக்குறைய ஒவ்வொரு க்ராமத்திலும் குறைந்துவிட்டது, கானல்கள் ரிஸர்வுசெய்யப்பட்டன. படுகைபூமிகள் மராமத்து இலாகாதார்கள் வசமாய்விட்டன. அனேக புறம்போக்கு பூமிகள் ஸர்க்கார் தருசுக்கு மாற்றி ஸாகுபடிக்கு வந்து விட்டன. இன்னும் சில புறம்போக்குகள் கானல் புறம்போக்குக்கு மாற்றிவிடப்பட்டன. தருசுபூமிகளோ ஏகதேசம் எல்லாம் ஸாகுபடிக்கு வந்து விட்டன. ஆகையால் கால்நடைகள் மேயும்படியான பூமிகள் நாலாபக்கத்திலும் குறைந்துவிட்டன. கால்நடைகள் ஏதாவது தப்பித்தவறி கானலிலாவது படுகை பூமியிலாவது மேய்ந்தால் க்ரிமினல் தரப்பில் ப்ராஸிக்யூஷன் செய்யப்பட்டு தண்டம் விதிக்கப்படுகிறது. இப்படிக் கால்நடைகளின் மேய்ச்சல் விஷயத்தில் நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டு விட்டபடியால் விவஸாயிகளுக்கு இந்தவிஷயத்தில் செலவு அதிகம் நேரிட்டிருக்கிறது.

இன்னொருகாரணம் விவஸாயிகளின் அறியாமையே. அது யசாதேனில் நாட்டுப்புறங்களிலும் இன்னும் கொஞ்சம் பாகம் தவிர ஏறக்குறைய எல்லாவிடங்களிலும் கால்நடைகளுக்கு போடும் தீவனங்களில் ஏகதேசம் பாதிபாகத்தை கால் நடைகள்கழித்து விடுகின்றன. தட்டுகளை கத்தரிக்காமல் அப்படியே போடுவதினாலும் அல்லது $1, \frac{1}{2}$ முழநீளத்துக்கு கத்தரித்து போடுவதினாலும் இப்படி சேதம் நேரிடுகிறது. $1, 1\frac{1}{2}$ அங்குல நீளத்துக்குக் கத்தரித்துப்போட்டால் கொஞ்சங்கூட சேதமாகமாட்டாது. 6 மீ த்துக்கு வரப்பட்டதீவனம் ஒரு வருஷத்துக்குவரும். அனேக இடங்களில் இந்த விஷயத்தில் அபிவ்ருத்தி அடையவில்லை. ஆகையால் மேய்ச்சல் விஷயத்திலும் தீவனவிஷயத்திலும் விவஸாயிகளுக்கு செலவு ஜாஸ்தியாயிருக்கிறது. இந்தசெலவு குறைவாகிறவரையில் விவஸாயிகளின் ஸ்திதி ஹீனஸ்திதியே. இதினாலேயே அனேக குடிகள் கால்நடைகளைவைத்துக்கொள்ளாமல் தங்கள் பூமிகளை கூலிமாடுகளைக்கொண்டு உழுதும் பயிர்களுக்கு தண்ணீர் இறைத்தும் வருகிறார்கள்.

(3) பூமிகளுக்கு எரு இடுவது.—2-வது விஷயத்தைப்பற்றிஎழுதியிருக்கிற பாராவில்கண்டபடி கால்நடைகளை வைத்துக்காப்பாற்ற சக்தியில்லாத விவஸாயிகளுக்கு எருவும் இல்லை. விலைக்கு வாங்கிப் போடவேண்டி யிருக்கிறது. தவிர முன்காலங்களில் கானல், படுகை, புறம்போக்கு, தருசுபூமிகளிலிருந்து தழை தாம்புகள் தாராளமாய்க் கொண்டுவந்து எருபோடுவார்கள். இப்போது அதற்கும் வழியில்லை க்ரயத்துக்கு வாங்க வேண்டி யிருக்கிறது. இந்தபாபத்திலும் விவஸாயிகளுக்கு முன் காலத்தைவிட இந்தக்காலத்தில் செலவதிகம்.

(4) விதைதான்யங்களைத் தேரிந்தெடுப்பது.—ஒவ்வோரு பூமியிலும் மாஸூல அறுவடை செய்யும்போது ச்ரேஷ்டமான பெரிய கதிர்களாயும் அதிக மணிகள் பிடித்திருப்பனவாயும் உள்ள கதிர்களைப் பொறுக்கி எடுத்து, அவைகளிலும் கெட்டியாயும் பருமனுயும்உள்ளதான்

யங்களை மாத்ரம் எடுத்துக்கொண்டு அவைகளை விதைத்தால் பயிரும் நல்லதாய் வளரும். நல்ல மாஸூலும் கிடைக்கும். ஏறக்குறைய அனேக இடங்களில் இம்மாதிரி செய்வதே கிடையாது. இம்முறையை அனுஸரித்தாலொழிய விவஸாயிகளுக்கு லாபமும் கிடைக்காது. அவர்களின் ஸ்திதி தேரவுமாட்டாது.

(5) விதைவிதைப்பதும் நாற்று நடுவதும்.—இந்தமுக்யமான விவஸாய விஷயத்தில் தொன்றுதொட்டு வழங்கிவரும் வழக்கத்தையே விவஸாயிகள் அனுஸரித்து ஒரு ஏகராவுக்கு எவ்வளவு தான்யம் விதைக்க வேண்டுமோ அதைவிட அதிகஜாஸ்தி அளவுள்ள தான்யத்தை விதைக்கிறார்கள். இதனால்பயிர்கள் அடர்த்தியாய் வளர்ந்து ஜாஸ்திமணி பிடிக்காமல் போய் விடுகிறது. மாஸூலில் குறைவு நேரிடுகிறது. மேலும் நாற்றுகளை நடும்போதும் 7,8 நாற்றுகளை சேர்த்து நடுகிறார்கள். இதனாலும் பயிர்கள் அடர்த்தியாய் வளர்ந்து ஜாஸ்தி மணி பிடிக்காமல் மாஸூல் குறைவு நேரிடுகிறது. விவஸாய டிபார்ட்மெண்டார் சொல்லும் முறைப்படி ஒருஏகராவுக்கு பழயவழக்கப்படி விதைக்கும் அளவைக் காட்டிலும் குறைந்த அளவுதான்யம் விதைப்பதாலும், பழய வழக்கமாகிய கொத்துகொத்தாய் அதாவது 7, 8 நாற்றுகளை ஒன்றாகச்சேர்த்து நடுவதைக்காட்டிலும் ஒற்றை நாற்றாக நடுவதாலும் ஜாஸ்தி கதிர்களும் ஜாஸ்திமணிகளும் பிடித்து மாஸூலும் ஜாஸ்திகாணுகிறது. இந்த புது முறைகளை சில இடங்களில் மாத்ரம் அனுஸரித்து விவஸாயிகள் லாபம் அடைகிறார்கள். பெரும்பான்மையோர் பழய வழக்கத்தையே அனுஸரித்து வருகிறார்கள். அதனால் அவர்களுக்கு லாபமில்லை.

(6) க்ராமக் கணக்கு மணியகாரர்களின்ஸ்திதி. முன்காலத்தில் கணக்கு மணியகாரர்கள் பணக்காரர்களாயும், செல்வாக்குள்ளவர்களாயும் ஜாஸ்தி ஸர்க்கார் கந்தாயம் செலுத்துகிறவர்களாயும் இருந்தார்கள், அவர்களுக்கு ஊழிய இனங்களும் ஸர்க்காரில் விடப்பட்டிருந்தன. அவர்களுக்கு ஸர்க்காரிலிருந்து ஏதாவது உத்தரவு வந்தால் அந்த உத்தரவுப்படி தங்கள் க்ராமத்தில் அமுல் நடத்த சக்தியிருந்தது. விவஸாய விஷயமாய் அவர்களுக்கு உத்தரவு வந்தாலும் அந்தப்படி அமுல்நடத்துவார்கள். இப்போதோ ஊழிய இனங்கள் பலவிதமாய் அவர்களுடைய கைவிட்டுப்போய் விட்டன. க்ராம உத்யோகஸ்தர்களுடைய பரீக்ஷை வந்தபின்னிட்டு நியமனம் செய்யப்பட்ட அனேக கணக்கர்களுக்கு ஸர்க்கார் கந்தாயமே கிடையாது. அனேக மணியகாரர்களுக்கு பேருக்குமாத்ரம் ஸர்க்கார்க் கந்தாயமிருக்கிறது. ஆகையால் அவர்களுக்கு ஸர்க்கார்ச் சம்பளம் வந்தால் காலக்ஷேபம் உண்டு. அதுவும்போதாது. சம்பளமில்லாவிட்டால் கஷ்டந்தான். அல்லாமலும் அப்படிப்பட்ட கணக்கு மணியகாரர்கள் விவஸாயிகளின் செலவின்பேரில்தான் காலக்ஷேபம் செய்து வருகிறார்கள். இவர்களால் விவஸாயிகளுக்கு ஒருவித ஸஹாயமும் கிடையாது. த்ரவ்ய நஷ்டமே யொழிய லாபமில்லை.

(7) ஸெட்டில் மெண்டில் நிலத்தீர்வை ஜாஸ்தி செய்வதும் ஸர்க்கார் கிஸ்து கட்டும் விஷயத்தில் கஷ்டமும்:—அங்கங்கே சிலபூமிகளைத் தவிர மற்றெல்லா பூமிகளிலும் பைமாஷ்காலத்தில் ஒரு ஏகராவுக்கு என்னமாஸூல் கிடைக்குமோ அதைவிட குறைவாகஇப்போதுகிடைக்கிறதேயொழிய ஜாஸ்தியில்லை. ஜாஸ்தி மாஸூல் இல்லாமல் போனாலும் ஜாஸ்தி தீர்வை மாத்ரம் ஏற்பட்டிருக்கிறது. தீர்வை ஜாஸ்தியான காரணத்தால் தான்யங்களின் விலையும் ஜாஸ்தியாய் விட்டது. தான்யங்களின் விலை ஜாஸ்தியாய் விட்டதால் மறு ஸெட்டில்மெண்டில் தீர்வை ஜாஸ்தியாகிறது. இதனால் விலை

இன்னுமதிகரிக்கிறது. இதனால் பொது ஜனங்களுக்கும் விவஸாயிகளுக்கும் செலவு அதிகம் ஏற்படுகிறது. ரயத்வாரி பூமிகளின் தீர்வை ஸெட்டில்மெண்டுதோறும் ஜாஸ்தி செய்யாமல் சாச்வதமாக தீர்வை ஏற்பட்டால் விவஸாயிகளின் ஸ்திதி கொஞ்சம் வ்ருத்தி அடையும். தான்யத்தின் விலை ஜாஸ்தியாய் விட்டதால் விவஸாயிகளுக்கு ஸர்க்கார் கந்தாயம்போக ஜாஸ்தியாய் வரும்படி கிடைக்கிறதென்று சொல்லலாம். இப்படி கிடைப்பது வெகு ஸ்வல்பமாயிருக்கப்பட்ட பணக்காரர்களுக்கு மாத்ரமே யொழிய மற்றவர்களுக்கல்ல. ஸாதாரண ஸ்திதியிலிருக்கிற விவஸாயிகளில் அநேகர் ஒரு தான்யத்தை ஜாஸ்தி விலைக்கு விற்று ஜாஸ்தி விலையுள்ள மற்றொரு தான்யத்தை தங்கள் க்ரஹக்ருயத்த்திற்கு வாங்கி வருகிறார்கள். அப்படி இருக்க அவர்களுக்கு ஜாஸ்தி வரும்படி ஏது? இல்லவே இல்லை. இருக்கிறதாகத் தோன்றுகிறது. தீர்வை மாத்ரம் முன்னிருந்ததைவிட இப்போது ஜாஸ்தி செலுத்துகிறார்கள். அதனால் அவர்களுக்கு செலவுக்குப் பணமில்லாமல் கடனாளிகளாகிறார்கள். இதுவுமல்லாமல் கிஸ்து கட்டும்போது அவர்கள் படும் கஷ்டம் சொல்லி முடியாது. நாட்டுக்கோட்டைசெட்டிகளிடமாவது பாங்கிலாவது அல்லது வேறு இடத்திலாவது வட்டிக்குப் பணம் கடன் வாங்கிச் செலுத்தி தான்யத்தை ஹீனக்ரயத்துக்குவிற்று கடன் கட்டுகிறார்கள். சிலர் மாஸூல் அறுவடையாவதற்கு முன்னமே அந்த மாஸூலின்பேரில் கடைக்காரர்களிடமிருந்து அட்வான்ஸ் வாங்கி கிஸ்து செலுத்தி மாஸூல் அறுவடையான பின்னிட்டு ஹீனக்ரயத்துக்கு மாஸூலை அட்வான்ஸ் கொடுத்த கடைக்காரர்களுக்கு விற்று வருகிறார்கள். இக்காரணங்களால் நாளாவட்டத்தில் கடன் ஜாஸ்தியாய் கடன் கட்ட வழியில்லாமல் பூமியைவிற்று விடுகிறார்கள். இதைப்பற்றி ரிஜிஸ்ட்ரேஷன் டிபார்ட்மெண்டில் பரிசோதித்தால் ஜாஸ்தி பூமி விற்பனையாயிருக்கிறதென்று பரிஷ்காரமாய்த் தெரியவரும்.

(8) அளக்கும்படிகளில் பெரியன வாயிருந்தவைகளை சிறியனவாய்ச் செய்தது. *—பெரியன வாயிருந்தபடிகளை அடிக்கடி சிறிய படிகளாக மாற்றுவது வ்யாபாரிகளுக்கு அனுகூலமே யொழிய மற்றவர்களுக்கல்ல. முன் பெரிய படியில் ரூபா 1-க்கு 5 படி தான்யம் விற்றிருந்தால் நாளா வட்டத்தில் வ்யாபாரிகள் சின்னப்படியில் 5 படிக்குக்கொண்டு வந்து விடுகிறார்கள். இதனாலும் விலை ஜாஸ்தியாகிறது. விலை ஜாஸ்தியின் நிமித்தம் விவஸாயிகளுக்கும் பொதுவாய் எல்லா ஜனங்களுக்கும் செலவு ஜாஸ்தியாகிறது.

(9) வருஷாந்தர ஜமாபந்திச் செலவு:—ப்ரதி வருஷமும் ஜமாபந்திகாலங்களில் ஜமாபந்தி ஆபீஸரும், ஹுஸூர் தாலூகா உத்யோகஸ்தர்களும், தலாயத் ஸேவகர்களும், அவர்களோடு வரப்பட்ட பரிவாரங்களும் முகாம் செய்யுமிடங்களிலெல்லாம் ஸப்ளை செய்யவேண்டி இருக்கிறது. இந்த விஷயத்தில் சில விடங்களில் தாசில்தாரவர்களுடைய அனுமதியின்பேரிலும் சிலவிடங்களில் மாமூல் வழக்கத்தை அனுஸரித்தும் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் கணக்கு மணியகாரர்களிடமிருந்து வரிவஸூல் செய்து வருகிறார்கள். இப்பேர்ப்பட்ட வழக்கம் கூடாதென்று ஸர்க்கார் உத்தரவு காகிதத்தில் மாத்ரம் இருக்கிறதே ஒழிய நடவடிக்கைக்கு இதுவரையிலும் வரவில்லை. கணக்கு மணியகாரர்களுக்கு வரிகொடுத்துவர சக்தியில்லையாதலால் அவர்கள் விவஸாயிகளிடத்தில் வரிவஸூல் செய்கிறார்கள். இப்படி வஸூல்செய்யும்போது செலவுபணம் என்றும் (அதாவது ஜமாபந்தி கச்சேரியில் நேரிடும் செ

*இந்த விஷயம் நன்குவிளங்க வில்லை.—ப. ர.

லவு) சேர்த்து வஸூல் செய்கிறார்கள். இது உண்மையான விஷயம். இதில் ஸந்தேகமில்லை. இந்த கெட்ட வழக்கத்தினால் விவஸாயிகளுக்கு உண்டாகும் கஷ்டமும் பணநஷ்டமும் சொல்லி முடியாது. இதுவுமல்லாமல் இதர டிபார்ட்மெண்டு ஆபிஸர்கள் க்ராமங்களில் முகாம் செய்யும் போதும் ஸப்ளை விஷயமாய் க்ராமமணியகாரர்களும் அவர்களை அனுஸரித்து விவஸாயிகளும் பணநஷ்டம் அடைகிறார்கள். இதைப்பற்றி இன்னும் விவரிக்க இடம் போதாது.

இத்யாதி காரணங்களினால் பல விதத்திலும் விவஸாயிகளுக்கு விவஸாய விஷயத்தில் அபிவ்ருத்தி இல்லாமலும் விவஸாயத்தில் வரும் வரும்படியை மீறி செலவு நேரிட்டிருக்கிறபடியினாலும் அவர்கள் நாளுக்கு நாள் ஏழைகளாய்ப் போய்விடுகிறார்கள். மாட்சிமை தங்கிய ஜார்ஜ் சக்ரவர்த்தி அவர்கள் இந்தியா ஜனங்களின் அபிவ்ருத்தியைப்பற்றி கண்ணோக்கம் வைத்திருப்பதால் மேற்கண்ட ஸகலகுறைகளும் நாளாவட்டத்தில் நிவர்த்தியாகுமென்று நம்புகிறேன். எல்லாம் சுபகரமாகவே நடக்க வேண்டுமென்று கடவுளாகிய ஸத்ய வஸ்துவை ப்ரார்த்திக்கின்றேன்.

பி. வி. வாமன மூர்த்தி ராவ்.

---

## RAISING BAMBOO

BY

T. P. SUBBARAYAR.

### மூங்கில் பயிர் செய்யும் விதம்.

பூத்த மூங்கில் கொத்துகளின் அடியில் நன்றாய்க் கூட்டி சுத்தம் செய்து வைத்திருந்தால், அதின் முற்றிய அரிசிகளுதிரும். அவைகளைச் சேர்த்து வைத்திருந்து வெயிலில் காய வைத்து நன்றாய்ப் பதர்களைப் போக்கி விட்டு, மேடு பள்ள மின்றி புழுதியான சிறு பாத்திகளில், அவ்வித்துகளைக் கலக்கவிதைத்து, சாம்பல் குப்பையை விதை தெரியாமல் மூட்டம் போட்டு, அதின்மேல் பாத்தியினீரம் காயாமலும், காற்றோட்டம் குறையாமலும் இருக்கும்படி தழை முதலியவற்றால் மூடித் தண்ணீர் பாய்ச்சிவரவேண்டும். முளைத்து முளை வெளிவந்து 2, 3, அங்குலம் உயரும் வரை பாத்தியில் தண்ணீர் தேங்கி நிற்காமலிருக்கும்படி நீர் பாய்ச்சி வரவேண்டும். பாத்தியில் நீர்ப்பசை ஸதாயிருக்கவேண்டும். 4 அங்குலம் உயர்ந்த பிறகு, 3, 4, நாட்களுக்கொருதடவை தண்ணீர் பாய்ச்சி வந்தால் போதும். வெயிலதிகம் எரிக்கும் காலத்தில் இந்தவிதம் செய்யவேண்டும். மழை காலமாயும், இபற்கையில் நீர்க் கசிவுள்ள பூமியாகவுமிருக்கு மிடமானால் தேவையில்லை.

மூங்கில்செடிகள் மூன்று அடி உயரமுயர்ந்தவுடன் அவைகளை வேர்கள் அறாமல் பிடுங்கி, ஆற்றோரம் படுகைகளிலோ, நீர்வளம் நிறைந்த வேறிடங்களிலோ கற்கள் நிறைந்து கெட்டியாயிராத பூமியில் ஸம சதுரமான அரைகஜம் நீள அகல ஆழக்குழிகளில் மூங்கில் செடிகளை வேருடன் குச்சிகளில் அரையடியும் புதைபடும்படிவைத்து மண்ணிட்டு மூடி, வெயிலால் வாடிப் போகாதபடி குடலைகளைக்கொண்டு மூடித் தண்ணீர்விட்டு வரவேண்டும். இப்படிக் கன்றுகள் வைப்பதற்கு வடகிழக்குப் பருவ மழை காலமே ஏற்றது. இவைகள் 10, 12, 15, அடியுயரும் வரை விஸ்தாரமாய்ப் பக்கங்களில் சாய்ந்து நிழலைத் தாராதாகையால், இத்தோப்பின் கீழ் கேழ்வரகு, வாழை முதலிய ஸாகுபடிகளையும் செய்து வருவதற்கு தடையில்லை

வெட்டிய குழிகளில் நான்கு குச்சிகளுள்ள செடிகளை பாத்தியில் வைத்தாலவர் இரண்டு மூன்று வருஷங்களுக்குள் கொக்கொன்று 15, 20, கம்புகள் புடைத்து முளைத்து வ்ருத்தியடையும். அதன்பிறகே அவைகளின் முட்களை வெட்டிவிட வேண்டும். 5, 6, வருஷங்

களுக்குப் பிறகு முற்றிய மூங்கில்களை உப யோகத்திற்கு வெட்டி யெடுத்துக் கொண்டு, மூங்கில் கள்நெருங்கிப்போகாதிருக்கச் செய்ய வேண்டும். மழையினால் கரைந்து கொத்து களின் அடிவேர்கள் வெளியே தெரிந்தால், கொத்துகளைச்சுற்றி, 3 அடி விட்டு, மண்ணால் ஓரடி உயரம் அணைபோட வேண்டும்.

ஒவ்வொரு கொத்துக்கும் இடையில் காலடி 20 இல்லாவிட்டால், மூங்கில்கள் வளர வளர நெருக்க முண்டாகி மூங்கில்கள் வெடியாது போய்விடும்.

மூங்கிற் கொத்துகள் பூத்து அதின் விதை கள் விழுந்து தன்னிச்சையாய் முளைத்து உயர்ந்திருக்கும் கன்றுகளை யெடுத்து மேலே சொல்லியபடி செய்யின், செடிகள் பழுதா காமால் வளர்ந்து பயனைத்தரும். இப்படிச் செய்யப்பட்ட மூங்கில் கொத்துகள் தான் நீண்ட ஆயுளைக்கொண்டனவாக 70 வருஷங் கள் வரையில் பயனைத்தரும்.

முதிர்ந்த கொத்துகளிலிருந்து வேர்கள் கெடாது 4 அடி நீளம் வெட்டி கட்டைகளை விட்டு எடுத்து வைத்துப் பயிர் செய்யப் படும் கொத்துகள் நீண்ட ஆயுளுடனிரா. 20, 30 வருஷங்களுக்குள் நசித்துப் போய் விடும். ஆகையால் தீர்க்காயுஸுடனிருக்கும் படிக்கே செய்வது தான் ஸரி.

தஞ்சாவூர் ஜில்லா கும்பகோணம் தாலூக்கா விலும், மாயவரம் தாலூக்காவிலும் மூங்கில் கள் அதிகம். ஐயம்பேட்டையில் பலர் இம் மூங்கில் பதியன்களை விலைக்குப் பல விடங் களுக்கனுப்புவதுண்டு.

மூங்கிலில் பல வர்ண பேதமுள்ளவைக ளிருக்கின்றன. சென்னையிலுள்ள "ஆர்டி அக் ரிகல்சரல் கார்டனில்" மூங்கில்களின் பேதங் களைப் பார்க்கலாம்.

இந்தியர்கள் வெகுவாய் பயனைத்தரும் மூங் கில்களை யநாதரவு செய்து ஸகலவித உபயோ கங்களுக்கும் விலைகொடுத்து வாங்கி யுபயோ கிப்பது ஸரியாகாது. ஒரு பெரிய குடித்தனக் காரனுக்கு 10 மூங்கிற் கொத்துகளிருப்பின் வருஷந்தோறும் கொத்து வைத்த 5, 6, வரு ஷங்களுக்குப் பிறகு 50, 60 ரூபாய் லாபம் தரும். கும்பகோணம், மாயவரம் பக்கங்களி லேயே ரூ 1-க்கு 3, 4 மூங்கில்கள் கிடைப்ப தரிதாகும்.

இம்மூங்கிலைப்பற்றி யறிந்த மேதாவிகள் சொல்லும் இதன் பயனும், வ்ருத்தி செய்யச் சொல்லும் முறைகளும் அதிகமிருக்கலாம். நானறிந்த வரையில் எழுதியதைப் புறக்கணி யார்களென்னும் துணிவாலெழுதி விடுத்தேன்.

தி. ப. ஸுப்பராயர்.

---

## BACTERIA AND MILK.

### பாக்டீரியாவும் பாலும்.

தற்காலத்தில் முக்யமாய் பெரியபட்டணங் களில் வேண்டிய பால் அகப்படாமல், கண்ட ஜலம்விட்டுக்கலந்த பாலையும், மாவுகரைத் த பாலையும், ஸுகாதாரக்குறைவான இடங் களில் கறந்தபாலையும் உபயோகிப்பதால் பல வித "ட்யூபர்கலாஸிஸ்" போன்ற ச்வாஸாசயத் தைப்பற்றிய வ்யாதிகளும் இன்னு பல துன் பங்களும் உண்டாகி அவைகளால் அனேக குழந்தைகளும் ஜனங்களும் மாளுகிறார்கள். ஆகையால் பாலைப்பற்றிய மட்டில் எவ்வளவு ஜாக்ரதை எடுத்துக்கொண்டாலும்அது ஜாஸ் தியாகாது. பாலும், இன்னம் உலகத்திலுள்ள எல்லா வஸ்துக்களும் கெடுவதற்கும் மாளுவ தற்கும் பாக்டீரியவே முக்யகாரணமாகும்.

### பாக்டீரிய.

பாக்டீரியா என்பவை நுட்பமான ஜீவராசி கள். அவைகள் தாவரவர்க்கத்தைச் சேர்ந்த வைகள். உலகத்தில் அவைகளில்லாத இட மில்லை. அவைகளெந்த இடத்திலும் எல்லாப் பொருள்களின் மேலும் ஒட்டிக்கொள்ளும்

தன்மையுள்ளவைகள். ஜலம், ஆகாயம், இவைகளிலும் உள்ளன. இவைகளைப்பொது வாய் வ்யாதிகளை உற்பத்திசெய்யும் பாக்டீரியா வென்றும், அப்படிச்செய்யாதவை யென்றும் இரண்டு வகுப்பாகப் பிரிக்கலாம். இவைகள் பெருகுவதற்கு ஸௌகர்யங்கள் வாய்ந்து விடும் பக்ஷத்தில் அபரிதமாய்ப் பெருகிவிடும். இப்படி ஒரு பாக்டீரியாவிலிருந்து 24-மணி நேரத்துக்குள் ஸுமார் 1 கோடியே 70 லக்ஷம் பாக்ட்ரீயாக்கள் உண்டாவதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். ஸூர்ய வெளிச்சம், நெருப்பு, சில த்ராவகங்கள், இவைகளால் மேற்சொன்ன பாக்ட்ரியாக்கள் மாண்டு போகக்கூடும். செத்த பிணங்களும், கெட்டுப்போன பதார்த்தங்களும் அழுகுவதும், உரங்கள் பயிருணவாகமாறுவதும், பால் தயிராகத்தோய்வதும், சாராயம் நாளாக நாளாக காரம் ஏறுவதும், இன்னும் பதார்த்தங்களில் இவை போன்ற மாறுதல்கள் ஏற்படுவதும் பாக்டீரியாக்களின் வேலையால்தான். நல்ல பாலில் எவ்வளவு பாக்டீரியா இருக்கலாமென்பதையும், எப்படி இவைகள் பாலில் சேர்ந்து பாலைக் கெடுக்கின்றன என்பதையும், அப்படி யுண்டாகும் கெடுதலை எப்படித் தடுக்கலா மென்பதையும், பற்றி, ஸமீபத்தில் ஆராய்ச்சிகள் செய்து அவைகளைப்பற்றிய விவரங்களை வெளியிட்டிருக்கிறார்கள். அவைகளின் ஸாராம்சத்தை கீழே தருகிறோம்.

மாட்டைத்தேய்த்தல்.

ஓர் நாள் ஸாயந்தரத்தில் பால் கறப்பதற்கு ஒரு மணி நேரத்திற்குமுன் மாடு தேய்க்கப்பட்ட பிறகு கறந்தபாலை சோதித்துப் பார்த்ததில், ஒரு க்யூபிக் ஸெண்டிமீடர், அதாவது $\frac{1}{16}$ கன அங்குலம் அளவில் 2,464 பாக்டீரியாவும், மறு நாட்காலை, அதாவது பசுவைத் தேய்த்து 14-மணி ஸாவகாசத்திற்குப்பின் கறந்தப் பாலில் 9,827 பாக்டீரியாவும் இருந்தன. மாட்டைத் தேய்க்காமலே கறந்தபாலில் 1,25,000 பாக்டீரியா இருந்தன. இதனால் பசுவைத் தேய்ப்பதால் நூற்றுக்கு 98 பாக்டீரியா குறைந்து போகின்றன வெனத்தெரிகிறது.

மடியைத் துடைத்துக் கறத்தல்.

மாட்டைத் தேய்ப்பதோடு மடியைத் துடைத்து விட்டு பசுக்களைக் கறந்ததில் பாக்டீரியாக்கள் அதிகமிருந்தன. பால் கறக்க முக்கால்மணிக்கு முன் ப்ருஷ் செய்ததில் அநுகூலமொன்றையும் காணோம். மடியை ப்ருஷ் செய்வதால் அதிலிருக்கும் அழுக்கு நெகிழ்ந்து பால் கறக்கும்பொழுது பால் பாத்ரத்தில் பாலில் விழுந்து விடுவதால் மடியை ப்ருஷ் செய்வது குணமான முறையல்ல.

மடியை அலம்புதல்.

மடியை ஸோப்பால் தேய்த்துக் கழுவி பிறகு பால் கறந்ததில் $\frac{1}{16}$ கன அங்குல பாலில் 1,125 பாக்டீரியாதானிருந்தன. இதனால் மடியைலம்புதல் ப்ருஷ் செய்வதினும் ச்லாக்யமெனத்தெரிகிறது.

காற்றிலுள்ள பாக்டீரியா.

பால் கறக்கும்பொழுது மாடுகளுக்குத் தீனி போடுவதாலும், தேய்ப்பதாலும், சாணம் முதலியவைகளை அப்புறப்படுத்துவதாலும் பாலில் பாக்டீரியா ரொம்பவும் அதிக மாகின்றன,

கறந்த பாலை உடனே பனிக்கட்டியில் வைத்துக் குளிரச் செய்தும், தானாகவே குளிரவிட்டும் பார்த்ததில் முந்தியமுறை அநுஷ்டிப்பதில் பாலிலுள்ள பாக்டீரியாகுறைகின்றன. இரண்டு மாட்டின் பாலில், ஒன்றை உடனே 50 டிக்ரீ பாரனைட் தர்மாமிடர் படிக்குக் குளிரச்செய்தும், மற்றொன்றை தானாகவே 64 டிக்ரிக்குக் குளிரும்படி விட்டும், 24-மணி ஸாவகாசத்திற்குப்பின் பரிசீலனைசெய்து பார்த்ததில் $\frac{1}{16}$ கன அங்குலப்பாலில், முந்தியதில் 128,000 பாக்டீரியாவும் பிந்தியதில் 8,74,000 -ம்இருந்தன.

பசு மந்தையிலுள்ள பல பசுக்களின் பாலைக் கறந்ததும் சோதித்துப் பார்த்தபொழுது ஸராஸரி $\frac{1}{16}$ கன அங்குலப் பாலில் 47,900 பாக்டீரியா இருந்தன. இப்படி பட்டணங்களில் கறந்த பாலை சோதித்துப் பார்த்ததில் இரண்டு பங்கு அதிகமாக பாக்டீரியா இருந்தன.

நல்ல பால் கிடைக்கவேண்டுமானால் அடியிற் கண்டபடி செய்ய வேண்டும்.

(1) முதல் கறந்த பாலை உபயோகிக்கக் கூடாது.

(2) பசுக்களை ப்ரதி தினமும் தேய்க்க வேண்டும். கறப்பதற்கு முன் மடியைக் கழுவ வேண்டும்,

(3) பால் கறப்பதற்கு ரொம்ப நாழிகைக்கு முன்னேயே பசுவுக்கு தீனி முதலியவைகளைத் தின்னப்போடவேண்டும். சாணத்தை அப்புறப்படுத்தவேண்டும். இப்படிச் செய்வதால் மாட்டுக் கொட்டடியின் ஆகாயத்திலுள்ள பாக்டீரியா அதிகமாவதில்லை. பாலிலும் பாக்டீரியா அதிகப்படுவதில்லை.

(4) மாட்டுக் கொட்டடியை தினமும் இரு முறை சுத்தம் செய்ய வேண்டும். தரையை ஜலம் விட்டு நன்றாய்க் கழுவ வேண்டும்.

(5) மாட்டுக் கொட்டடியில் ஏதேஷ்டமாய் வெளிச்சமும் காற்றோட்டமும் இருக்கவேண்டும்.

(6) பால் கறப்பவர்கள் கறக்கும் பொழுது சுத்தமான ஆடைகள் தரித்திருக்கவேண்டும். ஒவ்வொரு பசுவையும் கறக்கும் முன்னும் பின்னும் அவர்கள் கைகளை நன்றாய்க் கழுவ வேண்டும்.

(7) கறந்த பாலை கொட்டடியிலே வைக்கப்படாது. உடனே சுத்தமாயும் குளிமையாயுமிருக்கும் 'டெயரி'(பால்வைக்கும் இடம்)க்குக் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டும். அங்கே அதை 50 டிக்ரிக்குக்குளிரச்செய்யவேண்டும்.

(8) பால் கறக்கும் பாத்ரத்தை நீராவியில் பிடித்து சுத்தமாக்கவேண்டும். அதைப் பால் கறக்கும் பொழுதே கொட்டடிக்குக் கொண்டு வரவேண்டும். அதிக நேரம் சும்மா அது கொட்டடியிலிருப்பது கூடாது.

சுத்தமாக்க நீராவியில் கறக்கும் பாத்ரத்தைப் பிடிக்க வேண்டும். இப்பாத்ரத்தை குளிர்ந்த ஜலத்தால் அலம்பவும் கூடாது; துணி கொண்டு துடைக்கவும் கூடாது. அப்படியே ஜலம் வடியும்படி கவிழ்த்து வைக்க வேண்டும். பாத்ரத்தை அழுக்கு குட்டைகளால் துடைப்பதால் பாக்டீரியா அதிகமாகும்.

## FACTORIES AND WORKERS IN INDIA.

### இந்தியாவில் பாக்டரிகளும் தொழிலாளிகளும்.

ஸமீபத்தில் வெளியான கணக்குகளால் 1910-ம் வருஷத்தில் இந்தியாவில் ஸர்க்காருக்கும், ஸ்தலஸ்தாபனங்களுக்கும் ஸொந்தமாக 98 பாக்டரிகள் இருந்தனஎன்று தெரியவருகிறது. இவற்றில் அச்சு யந்த்ரசாலைகள் 16. ரெயில்வே வொர்க்ஷாப்புகள் 16. கால்வாய் இஞ்சினியரிங்வொர்க்ஷாப்புகள், 10. ராணுவ ஸம்பந்தமான ஆயுத சாலைகளும் பாக்டரிகளும் அநேகம் இருந்தன.

யந்த்ரங்கள் வேலை செய்வனவும், கம்பெனிகளுக்கு ஸொந்தமானவுமான பாக்டரிகள் 2834 இருந்தன. இவைகள் 1909-ம் வருஷத்தில் 2023 தான் இருந்தன. பாக்டரிகளில் முக்யமானவைகளின் விவரங்களைக் கீழே குறிப்பிடுகிறோம்.

| பாக்டரிகளின் விவரம். | ஸங்க்யை |
|---|---|
| பருத்திக் கொட்டை எடுக்கும் யந்த்ரங்களும், ப்ரெஸ்களும் | 1390 |
| பஞ்சாலைகள் | 236 |
| அரிசி மில் | 215 |
| ஜுட்ப்ரெஸ் | 138 |
| மரமறுக்கும் மில்லுகள் | 101 |

| | |
|---|---|
| இரும்பு, பித்தளை வேலைகள் | 90 |
| ரெயில்வே வொர்க் ஷாப் | 65 |
| ஜூட்மில்லுகள் | 59 |
| மாவு மில்லுகள் | 37 |

பருத்தித்தொழில் ஸம்பந்தமான பாக்டரிகள் முக்யமாய் பம்பாயில்தான் இருக்கின்றன. ஜூட் கைத்தொழில் ஸம்பந்தமான பாக்டரிகள் வங்காளத்தில் அதிகமாயிருக்கின்றன. அரிசி மில்லுகளும், மரமறுக்கும் மில்லுகளும், வெகுவாய் பர்மாவில் இருக்கின்றன. பருத்திக்கொட்டை பெடுக்கும் யந்த்ரசாலைகளும், ப்ரெஸுகளும் சில காலமாக பின் வருகிற கணக்குப்படி, அதிகமாயிருக்கின்றன.

| | |
|---|---|
| 1906 | 969 |
| 1907 | 1066 |
| 1908 | 1183 |
| 1909 | 1208 |
| 1910 | 1390 |

யந்த்ரங்களைக்கொண்டு வேலை செய்யாத பாக்டரிகள் 565, இவற்றில் ஜூட்ப்ரெஸுகள் 28, அச்சு ப்ரெஸுகள் 11.

யந்த்ரங்களால் நடத்தப்படும் பாக்டரிகளிலும், மற்ற பாக்டரிகளிலும் தினஸரி வேலை செய்த பேர்களின் ஸங்க்யை ஸராஸரி 1908-ம் வருஷத்தில் 951,100; 1909-ம் வருஷத்தில் 984, 232; 1910-ம் வருஷத்தில் 1014,241 ஆகும்.

பாக்டரிகளில் வேலை செய்த ஸ்த்ரீகளின் ஸங்க்யை 115,540; சிறுவர்கள் 52,026; மொத்த வேலையாட்களில் நூற்றுக்கு 32பேர்வங்காளத்திலும், நூற்றுக்கு 29 பேர் பம்பாயிலும் வேலைசெய்தார்கள்.

இந்தியாவில் முதல் முதலில் பஞ்சாலை 1851-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. 1879-80-ம் வருஷம் முதல் 1883-4ம் வருஷம் வரையில் உள்ள ஐந்து வருஷத்துக்கு ஒரு வருஷத்தில் ஸராஸரி 63 பஞ்சாலைகள் இருந்தன. அடுத்த 5 வருஷத்தில் 93 இருந்தன. பிறகு, 127;156; 195; பிறகு 218 ஆக அதிகரித்தன. 1909-10-ம் வருஷத்தில் 241 பஞ்சாலைகள் இருந்தன. 1910-11-ம் வருஷத்தில் 250 பஞ்சாலைகள் இருந்தன.

மொத்தம் பருத்தி மில்லுகளில் 105 மில்லுகளில் நூல் நூற்றலே நடந்து வந்தது. 19 மில்லுகள் நெசவு தொழிலையையே நடத்தி வந்தன. மற்ற மில்லுகளில் நூல் நூற்றலும், நெசவும் ஆகிய இரண்டும் நடந்து வந்தன. 1910-11-ம் வருஷத்தில் மொத்தம் செலுத்தப்பட்ட மூலதனம் 18 கோடியே 75 லக்ஷம் ரூபாய்க்குச் சற்று அதிகமாயிருந்தது. 34 பருத்தி மில்லுகளை ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகள் வைத்து நடத்தாமல் ப்ரைவேட் கம்பெனிகள் வைத்து நடத்துகின்றன.

## STORY AND BIOGRAPHY.

## கதையும் ஜீவ்ய சரித்ரமும்.

### HON, BLE Dr. RASH BEHARI GHOSH.

### ஆனரபிள் டாக்டர் ராஷ் விஹாரி கோஷ்.

ஸமீபத்தில் வங்காளத்தின் ப்ரமுகர்களிலொருவராகிய டாக்டர் ராஷ் விஹாரிகோஷ் தாம் ஸம்பாதித்த த்ரவ்யத்தில் 10 லக்ஷம் ரூபாயை ஸர்வகலாஸங்கத்துக்கு நன்கொடையாகக் கொடுத்து,நம்நாட்டின் தேசரீதிக்குத் தகுந்தபடி அது மேலும் மேலும் சீரும் சிறப்பும் பெற்றோங்க அவசியமான சாஸ்த்ரப் படிப்புகளைக் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்யும் படிக்குக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

இவ்விதமாய் தர்மம் செய்த ப்ரபு யாரென்றும், அவர் வரலாறு எப்படியென்றும் அறிந்துகொள்ள யாருக்குமே ஆவலாயிருக்கும். பத்

ரிகைகளில் இவ்வுத்தமரைப்பற்றி ச்லாகித்து எழுதப்படுகிறது.

தற்காலத்தில் இந்திய மாதாவின் சிறந்த புதல்வர்களுக்குள் டாக்டர் ராஷ்விஹாரி கோஷ் ஒருவர். இவர் பொங்கும் தேசாபிமானமும், அபாரமான மனோ சக்தியும், ஊர்ஜிதமான ஸ்வயேச்சையும், ஆழ்ந்த கல்வியும், நுட்ப ஆராய்ச்சியும், உண்மையான உணர்ச்சியும் எல்லாம் ஒன்று கூடி உருவெடுத்ததுபோல் விளங்குகிறார். இவர் சென்ற பத்து வருஷகாலமாக தேச நன்மைகளை முற்படுத்தும் பொருட்டு பலவித பொதுநல முயற்சிகளில் தலையிட்டு உழைத்துவருவதால் இந்தியாதேசம் மூலை முடுக்குகளில் கூட இவரைப்பற்றி ஸாமான்யர்களும் கேள்விப்பட்டிருப்பார்கள்.

இவர் முன்னமே பலவிதப் பொதுக்காரியங்களால் அடைந்திருக்கும் புகழ்மாலைக்கு நூதன மலர்கள் சேர்த்துக்கொண்டே வருகிறார். இவர்போல ஸத்புத்ரர்கள் பலரிருப்பார்களானால் நம்தேசம் ஸ்வல்ப காலத்துக்குள் புனர் ஜன்மம் அடைந்துவிடும். இவரிடம் முன் யோசனையும் கடமையின் உணர்ச்சியும் குடிகொண்டிருக்கின்றன. இவருடைய சரித்ரமானது படிப்போரின் மனதில் பதிந்து அவர்களின் நோக்கத்தைப் புனிதமாக்கப் போதுமானது.

வங்காள மாகாணத்தைச் சேர்ந்த பர்ட்வான் ஜில்லாவிலிருக்கும் டோரிகோனா என்னும் க்ராமத்தில் 1845-ஆம் வருஷம் டிஸம்பர்மீ 23உயில் ஜகபந்தகோஷுக்கு ஸீமந்த புத்ரனாய் நமது ராஷ்விஹாரி கோஷ் பிறந்தார். இவருக்கு 68-வதுவயஸு நடந்துகொண்டிருக்கிறது. நமது தேசாபிமானத்தலைவர்களுள் வயது முதிர்ந்த அநுபோகசாலி. நமது பெரிய கிழவராகிய தாதாபாய்நௌரோஜிக்கு அடுத்த படியில் இவர்தான். தாதாபாயிக்கு இப்போது 88 வயதாகிறது. ஆகவே கோஷ் தாதாபாயிக்கு 30 வயது சிறியவர். கோஷைப்போன்று ஸமவயதும், கல்வித்திறமையும், செல்வாக்கும் உள்ளவர் பம்பாய் நகரத்திலுள்ள ஸர் பிரோஷ்ஷா மேடா. கோஷின் ஜனனகாலத்தில் நம் தேசமானது ஈஸ்ட் இந்தியா கம்பெனியாரால் ஆளப்பட்டது. இவருக்கு 12-ஆம் வயதில் காலஞ்சென்ற விக்டோரியா மஹாராணியார் நம் தேச நிர்வாகத்தைத் தாமே வகித்து, நமக்கு ப்ரிட்டிஷ் ப்ரஜைகளையொப்ப ஸகல ஸ்வதந்த்ரங்களையும் காலக்ரமத்தில் அளிப்பதாக வாக்களித்து 1858-ஆம் வருஷத்தில் சாச்வதசாஸன மொன்றைப் பஹிரங்கப்படுத்தினார்கள். இதைத்தான் இந்தியர்களனைவரும் தங்களுக்குக் கிடைத்த சாச்வத ஸ்வதந்த்ரப்பட்டயமென இன்றும் கொண்டாடுகிறார்கள். இந்த விசேஷ ஸம்பவ காலமானது கோஷின் மனதில் ஆழ்ந்து பதிந்திருக்கவேண்டுமென்று தோற்றுகிறது. இவருக்குராஜபக்தி அதிகமாயிருப்பதற்குக்காரணமிதுவாயிருக்கலாம்.

கோஷின் குடும்பம் கேவலமானதுமல்ல, உயர்ந்ததுமல்ல, நடுத்தர அந்தஸ்துள்ளது. இவர் தந்தை கூடியவரையில் மரியாதையாகக் காலக்ஷேபம் செய்து வந்ததாகத் தெரிகிறது. தந்தை தன் மகனுக்குச் செய்யவேண்டிய கடமை கல்வி கற்றுக்கொடுத்து அவைக்களத்தில் முன்னிற்கச் செய்தலாம். ஜகபந்த கோஷ் தம் கடமையை எப்படி முழுமையும் நிறைவேற்றினாரோ, அப்படியே ராஷ்விஹாரி கோஷும் மகன் தந்தைக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்தார். ராஷ்விஹாரி கோஷைப்பெற்ற தந்தை என்ன புண்யம் செய்தாரோ என்று உலகமே சொல்லுகிறது. மேலும், சான்றோனெனத் தன் மகனைப் பலர் புகழக்கேட்கும்படியான பாக்யம் கோஷின் தாய்க்கு வாய்த்தது. பெற்

ரோரிருவரும் ஸந்தான ஸம்பத்துக்குத் தகுந் தாப்போல் தீர்க்காயுளுள்ளவர்களாயுமிருந்தது பூர்வ ஜன்ம பூஜாபலனே யாகும். கோஷின் இளமைப் பருவத்தைப் பற்றி விசேஷமா கச்சொல்வதற்கு நமக்குத்தெரியாவிட்டாலும் அவர் பாங்கூர் என்னும் பட்டணப்பாட சாலை யில் படித்து வந்ததாகவும், 1860ஸூ டிஸம் பர் மீ"த்தில் நடந்த கல்கத்தா யுனிவர்ஸிடி யின் மெட்ரிகுலேஷன் பரிக்ஷையில் தேறின தாகவும் தெரிகிறது. இவருக்கு 15-வது வய திலேயே ப்ரதமக்கல்வி பூர்த்தியானதைக் கவ னிக்கும்பொழுது கோஷுக்குச் சிறு ப்ராய முதலே படிப்பில் மிகுந்த அக்கரையும் தீவிர மும் இருந்ததாகத் தெரிகிறது. இதை யறிந்த அவரின் உபாத்யாயர்கள் அவர் க்ரமமாய் அடு த்த வருஷம் மெட்ரிகுலேஷன் பரிக்ஷைக்குப் போகவேண்டியிருந்தாலும், அவர் படித்த பள் ளிக்கூடத்திலிருந்து பரிக்ஷைக்கு போக ஒரு வன் கூட இல்லாததால், கோஷை யனு ப்பினார்கள். அவர் பரிக்ஷையில் தேறி பள்ளிக்கூடத்தின் கௌரவத்தைக்காப்பாற்றி னூர்.

உயர்தரப்படிப்புக்காக கல்கத்தா சென்று ப்ரஸிடென்ஸி காலேஜில் சேர்ந்து முறையே எப். ஏ, பி. ஏ., பரீக்ஷைகளில் முதன்மையா கத் தேறினுர். மேலும், 1866 ஆம் வருஷத் தில் எம். ஏ. பரிக்ஷையில் முதல்தரமான கௌரவங்களோடு தேறினுர்.

இவர் காலேஜில் வாசித்து வருங்காலத்தில் பரிக்ஷைக்கு வேண்டிய புஸ்தகங்களை வாசிப்ப தோடுகூட ப்ரஸித்திபெற்ற ஆங்கில க்ரந்த கர் த்தர்களின் நூல்களை ஏராளமாய் வாசித்து வந் தார். இது காரணத்தால் இவருக்கு பொதுக் கல்வியிலும் ஆங்கில பாஷா ஞானத்தி லும் விசேஷப்பயிற்சி யுண்டாயிற்று. இளமை யிலேயே இவருக்கு உழைப்பினுல் உண்டான அஸ்திவாரப்படிப்பு பிற்காலத்தில் எதுவாயி னும் அதை ப்ரபலமாய் நடத்து வதற்கு ஏற்ற தாய் அவ்வளவு பலமாயிருந்து வருகிறது.

பொதுவித்யாப்யாஸத்தில் கரை கண்ட இவர் ஜீவனுர்த்தமான தொழிலை உத்தேசித்து சட்டக் கலாசாலையில் சேர்ந்துபடித்து 1867ம் வருஷத்தில் பி. எல். பரிக்ஷையில் தேறினுர். இவருக்கு 100 ரூ பெறுமான தங்கப் பதக்க மொன்று பரிசாகக் கிடைத்தது. கௌரவச் சட்டப் பரிக்ஷையில் 1871 ஆம் வருஷம் இவர் தேறின போதிலும், டாக்டர் ஆப் லாஸ் என்ற உயர்தரச் சட்டப்பட்டம் இவ ருக்கு 1884ஆம் வருஷத்தில் தான் கிடைத் தது. ஆயினும் 1867 ஆம் வருஷத்திலேயே ஆனரபிள் மிஸ்டர் ஜஸ்டிஸ் த்வாரகநாத் மித் தர் வக்கீலா யிருந்தகாலத்தில் அவரிடம் அப் ரெண்டிஸாக இருந்து அனுபோக ஞானம் பெ ற்றார். வழக்கப்படி ஆரம்பத்தில் சில வருஷ காலம் இவருடைய 'ப்ராக்டிஸ்' மெதுவாயிருந் தது. வரவர இவருடைய பொதுக் கல்வி யின் பயிற்சியும், புத்தி நுட்பமும், கேஸ் நட வடிக்கையில் புலப்படவும் 'ப்ராக்டிஸ்' வ்ருத்தி யாயிற்று. தற்காலம் கல்கத்தா ஹைகோர்ட் டில் உள்ள ப்ரபலமான வக்கீல்களுக்குள் ளே வரும்படியிலாகட்டும், விவகார ஸாமர் த்யத்திலாகட்டும், சட்ட நுட்பத்திலாகட்டும், கல்வித் திறமையிலாகட்டும், வாக் சாதுர்யத்தி லாகட்டும் இவர் எவருக்கும் குறைந்தவரல்ல.

கலாசாலைகளில் வெகு மும்மரமாய்ப்படிப் பவர்களில் அநேகர் ஒரு தொழிலில் அமர்ந்த தும், தாம் கற்ற கல்வியை மறந்து பணம் தேடு கிறவழியையே பெரிதாக பாவித்து வாழ்வார் கள். பணம் ஸம்பாதிப்பதற்காகக் கல்வியைக் கற்பது மேலான நோக்கமல்ல. கோஷுக்கு கல்விதான் முக்ய நோக்கம். இவர் ஒழிவு நேரங்களை மேன்மேலும் பயிற்சி அடைய விரும்பிபலதேசசட்ட திட்டங்களையும் ந்யாய ஸ்தலங்களின் தீர்மானங்களையும் படிப்பதில்

கழிப்பார். இவருக்கு சட்டத்தில் இருக்கும் அபார ஞானத்தை அறிந்து யுனிவர்ஸிடியார் இவரை 1875-ஆம் வருஷத்தில் டாகூர் சட்ட ப்ரொபஸர் வேலைக்கு நியமித்தார்கள். இது காரணமாக அருமையான சட்ட க்ரந்தமொன்று கோஷ் வெளிப்படுத்த நேர்ந்தது. ஆங்கிலேய சட்டங்களிலெல்லாம் ஸ்தாவர ஸொத்து அடமான விஷயமான சட்டங்கள் மிகவும் சிக்கலுள்ளவைகள்; அதிநுட்பமான விவகாரங்களுக்கு இடம் தருவன; ஸந்தேக மறத் தெளிவதற்குக் கஷ்ட ஸாத்யமானவை. இவைகளை சட்டப் பரிக்ஷைக்குப் படிப்பவர்களுக்குத் தெள்ளத் தெளிய போதிக்கவேண்டிய கடமை கோஷுக்கு ஏற்படவும், அப்போதப்போது நூல்களை ஆராய்ந்து ப்ரஸங்கங்களுக்குத் தயார் செய்யவும், கடைசியில் இந்த ப்ரஸங்கங்களெல்லாம் திரட்டி புஸ்தக ரூபமாய் ப்ரசுரிக்கப்பட்டன. இப்புஸ்தகத்தைப் படித்தால்கோஷின் நுட்பமான சட்ட ஞானம் நன்ருய்ப் புலப்படும். இந்த புஸ்தகத்தின் உதவியைக் கொண்டுதான் இத்தேசத்தில் சட்டமாய் வழங்கிவரும் ட்ரான்ஸ்பர் அப் ப்ராபர்டி ஆக்ட் (பராதீனம்செய்வதைப் பற்றிய சட்டம்) ஏற்பட்டது.

வக்கிலாக இவருக்கு அப்பீல் தரப்பில் தான் அதிகம் ப்ராக்டிஸ். அதிலும் தற்காலம் கல்கத்தா ஹைகோர்ட் அப்பீல்தரப்பில் இவருக்குள்ள ப்ராக்டிஸ் த்வாரக நாத்மித்ருக்கு பிறகு யாருக்குமே கிடையாது. இவருக்கு அனுவச்யமாகப் பேசுவதில் சற்றும் ப்ரியமில்லை. சட்ட நுட்பங்களை எடுத்துச் சொல்வதென்ருல் இவருக்கு ரொம்ப ஸந்தோஷம். வாக் தோரணையும் சாதுர்யமும் அமைந்திருப்பது விசேஷத்தினும் விசேஷம். இவருடைய 'ஆர்கு மெண்டுகளைக்' கேட்பதில் ஜட்ஜ்களுக்கு ஸந்தோஷம்.

வக்கிலாக ப்ராக்டிஸ் செய்ய ஆரம்பித்து 10 வருஷங்களுக்குப்பின் இவருக்கு கௌரவங்கள் மேலும் மேலும் வந்துகொண்டிருந்தன. பி. எல். பரீக்ஷகர்களிலொருவராய் இவரைத் தேர்ந்தெடுத்தார்கள். இரண்டு வருஷங்களுக்கெல்லாம் கல்கத்தா யுனிவர்ஸிடி பெல்லோவாக நியமனமாயிற்று. பிறகு ஸிண்டிக் மெம்பருமானுர். இது பெல்லோவாயிருப்பதைக்காட்டிலும் கௌரவமானது. 1891 ஆம் வருஷத்தில் இவர் சட்ட ஸபை மெம்பரானுர். சட்ட ஸபை மெம்பராயிருப்பது பற்றி 'ஆனரபிள்' என்ற அடைமொழி இவர் பெயருக்கு முன்பூஷணமாய்ச்சேர்ந்து நிற்கிறது. சட்ட ஸபையில் இந்திய கடன் மசோதா, சிறுவழக்குக்கச்சேரி மசோதா, கைதிகளின் சட்டத் திருத்தமசோதா, இந்திய ஸ்டாம்ப்மசோதா, க்ரிமினல் ப்ரொஸிஜர் கோடின் திருத்தமசோதா முதலியவைகளை ஆராய நியமனமான கமிட்டிகளில் இவர் ஒருமெம்பராயிருந்து செய்த வேலைகளை கவர்ன்மெண்டார் நன்கு மதித்து 1896ஆம் வருஷத்தில் ஸி. ஐ. இ என்ற கௌரவப்பட்ட மளித்தார்கள்.

1891ஆம் வருஷத்தில் ஏஜ் அப் கன்ஸெண்ட் என்ற மசோதா சட்டஸபையில் வாதிக்கப்பட்டபொழுது, இதை வங்காளத்திலுள்ள பெரும்பான்மையோர் ஆக்ஷேபித்தார்கள். தேசாசார வ்யவகாரங்களில் கவர்ன்மெண்டார் தலையிட்டு சட்டம் செய்வது கூடாதென்று எடுத்துச் சொல்லப்பட்டது. இருந்தாலும் ஆனரபிள் கோஷ் மசோதாவை ஆதரித்துப் பேசி சட்டமாக்கிவைத்தார். இதனுல் 10 வயதுக்கு முன்பெண்களுக்குப் புருஷருடைய சேர்க்கை தடுக்கப்பட்டிருந்த பழைய விதி மாறி 12 வயதுக்கு முன் கூடாதென்கிற புது விதி ஏற்பட்டது. பால விவாகத்தினுல் விளையும் தீங்குகளை ஒருவாறு இது தடுக்கிறதென்பதை எல்லாரும் ஒத்துக்கொள்ளவேண்டும். மேலும் சட்டஸபையில் இவரே இரண்டு

புதிய மசோதாக்களை ப்ரேரித்தார். ஒருவனுடைய ஸொத்து கோர்ட்டிக்ரிப்படி ஏலமாய் விட்டாலுங் கூட ஏலத்தேதியிலிருந்து 30 நாள்களுக்குள்ளாக ஏலத் தொகையுடன் 100-க்கு 5 வீதம் ஜாஸ்தி தொகைகட்டி ஷ ஏலத்தை ரத்துசெய்வித்து ஸொத்தை மீட்டுக்கொள்ளலாமென்பது ஒரு மசோதா. இது கடனாளிகளுக்கு எவ்வளவோ அனுகூலமல்லவா? மற்றொன்று, ஒரு குடும்பத்துக்குப் பாத்யப்பட்ட பொது வீட்டில் அந்யன் வந்து ப்ரவேசிக்காமல் தடுக்கும் பொருட்டு, அந்த வீட்டின் எந்த பாகத்தையாவது அந்யன் ஒருவன் விலைக்குப் பெற்றால், இதரபாகஸ்தரில் யாரேனும் அந்த அந்யனுக்கு அவன் கொடுத்த க்ரயத்தொகையைச் செலுத்தி அந்த பாகத்தை மீட்டுக்கொள்ளலாமென்பது. இது குடும்ப வாழ்க்கையின் நன்மையைக்கருதிய மசோதா. இவைகள் கவர்ன்மெண்டாரால் அங்கீகரிக்கப்பட்டு சட்டமாயிருக்கின்றன. இது மாதிரி பொதுஜன க்ஷேமலாப சட்டங்களைச் செய்வதிலும் திருத்துவதிலும் உழைத்திருக்கிறார். ஸிவில் ப்ரோஸீஜர்சட்டத்தைத்திருத்துவதுஸாமான்யமான வேலையல்ல. இதில் கோஷ் மிகவும் ச்ரமப்பட்டு உழைத்தார். சட்ட ஸபையில் இவருக்குக் கிடைத்திருக்கும் மதிப்புக்குக் காரணம் விஷயங்களைப் பூசி மெழுகாமல் நிர்த்தாக்ஷண்யமாய்ப் பேசுவதாகும். 1907-ஆம் வருஷத்தில் வைஸ்ராய் சட்ட ஸபையில் ராஜ நிந்தனை மீட்டிங்குகளைத் தடுக்கும் பொருட்டு ஒரு சட்டம் கொண்டுவரப்பட்ட காலத்தில், அது அவச்யமில்லையென்றும், கூடவே கூடாதென்றும் ஆக்ஷேபித்துப் பேசிய பேச்சுப் மிகவும் தீரமானது. இவர் பேச்சு செல்லாமல் வ்ருதாவாய்ப் போயிற்றென்றாலும் இவர் பேச்சு நிகரற்றதென்று எவரும் ஒத்துக்கொள்கிறார்கள். இந்தவிதமான பேச்சு இங்கிலண்ட் பார்லிமெண்ட் போன்ற ஸபைகளில் கேட்கக்கூடிய விசேஷமான ப்ரஸங்கமென்று ச்லாகித்துச்சொல்லப்படுகிறது. அவர், "தேசத்தில் ராஜ விச்வாஸம் குறைவுபட்டிருந்தால் இந்த சட்டம் அனாவச்யம். குறைவுப்பட்டிருக்குமானால் அதற்கு ராஜாங்க நடவடிக்கைகளில் ஏதோ சில பிசகுகள் காரணமாயிருக்கவேணும். அந்தப் பிசகுகளை சீர்திருத்தாமல் இப்படிப் பட்ட சட்டத்தினால் ஜனங்களின் ஸாதாரண ஸ்வதந்த்ரங்களுக்குப் பங்கமுண்டாக்குவது ஸரியல்ல." என்று வாதித்தார். அதே ஸந்தர்ப்பத்தில் "இந்த சட்டத்துக்கு ராஜ நிந்தனையைத் தடுக்கிற சட்ட மென்கிற பெயரை மாற்றி ராஜ நிந்தனையான மீட்டிங்குகளைத் தடுக்கவும் ரகஸ்யத்தில் ராஜ நிந்தனையைப் பெறுக்கவும் ஏற்படலான சட்டம் என்று திருத்திக்கொள்வது யுக்தமாய்த் தோன்றுகிற"தென்று ஹாஸ்யமாய்ச் சொன்னார்.

இவருடைய பேச்சுகள் கம்பீரமானவை. கவிச்ரேஷ்டர்கள் காவ்ய ச்ரேஷ்டர்கள் முதலியோர்களின் க்ரந்தங்களை இவர் ஸாங்கோபாங்கமாய்க் கற்றுத் தேர்ந்தவராகையால் இவர் பேசும் பேச்சுகளில் அந்த ச்ரேஷ்டர்களின் பதப்ரயோகங்களும், வாக்சாதுர்யங்களும் இயற்கையா யமைந்து விளங்கும். தேர்ந்தவித்வான்கள் இவர் பேச்சைக் கேட்டால் ஆங்கில பாஷையில் இவருக்குள்ள பாண்டித்யத்தைப் புகழ்மலிரார்கள்.

இவர் 1903 - ம் வருஷம் வரையில் பொது நலக் கார்யங்களில் கலக்காமல் புஸ்தகசாலையிலேயே வாழ்ந்து வந்தாரென்று சொல்ல வேண்டும். சில வருஷங்களாக பொதுக் கார்யங்கள் அடைந்து வரும் மாறுதல்கள் இவரை வெளியே இழுத்து விட்டன போலும். நமது வைஸ்ராயாயிருந்த லார்ட் கர்ஸன் 1903 ஆம் வருஷம் கல்கத்தா யுனிவர்ஸிடி கான்வகேஷன் ஸமயம் செய்த ப்ரஸங்கத்தில் இந்தியர்களைப் பொய்யர்களென்று வீண் பழி சுமத்திப் பேசி எல்லார் மனஸை

யும் புண்படுத்தினர். தேசமெல்லாம் அவர் பேச்சைக் கண்டனம் செய்யக் கூட்டங்கள் கூடின. அப்பொழுது கல்கத்தா டவுன் ஹாலில் கூடிய மீட்டிங்குக்கு ஆனரபிள் டாக்டர் கோஷ் தலைவராயிருந்து நாகரீகமான மொழிகளால் கர்ஸனை குத்தாமல் குத்தி சொல்லாமல் சொல்லிக் கண்டனம் செய்தார்.

இதற்குப் பிறகு 1906 ஆம் வருஷத்தில் 22-வது காங்க்ரஸ் கூடியபொழுது இவர் வரவேற்புக் சமிட்டியின் சேர்மனாக இருந்தார். இப்பொழுதுதான் அவர் முதல் முதல் காங்க்ரஸில் கலந்தார். எதிலும் தீர்க்காலோசனை செய்து தலையிடுவதும், தலையிட்ட பின் குற்றம் குறைவுகளின்றி ஸம்பூர்ணமாய் ஆராய்வதும் பெரியோர்களின் குணம். இம்மாதிரி கோஷ் காங்க்ரஸில் கலந்த நாள் முதல் அவருக்கு அதில் அபிமானம் அதிகரித்து அதன் நடவடிக்கைகளில் அக்கரை ரொம்ப உண்டாயிற்று. அடுத்த வருஷம் ஸூரத்தில் கூடிய காங்க்ரஸுக்கு ப்ரஸிடெண்டாக இவர் தேர்ந்தெடுக்கப் பட்டார். அங்கே அபிப்ராய பேதம் காரணமாக உண்டான குழப்பத்தால் காங்க்ரஸ் நடவடிக்கை தடைப்பட்டுப் போயிற்று. பிறகு அடுத்த வருஷத்தில் அதாவது 1913 ஆம் வருஷத்தில் சென்னையில் காங்க்ரஸ் கூடிய பொழுது கோஷே தலைமைவகித்து ஸபையை சிறப்பாய் நடத்தினர்.

தேசாபி வ்ருத்திக்குஸாதனமான எக்கார்யங்களுக்கும் த்ரவ்ய ஸஹாயம்செய்துதேகச்ரமும் எடுத்துக்கொள்வார். ஸ்வதேச முயற்சியில் கலந்த காரணத்தால், அநேக மாணக்கர்களை பரிக்ஷைக்கு போகக் கூடாதென்று யுனிவர்ஸிடி யார் தடுத்துவிட்டதால், இவர்கள் நன்மைக்காக நேஷனல் கௌன்ஸில் ஆப் எடுகேஷன் என்ற ஸ்வேதச ஸர்வகலா ஸங்கம் ஸ்தாபிதமாக இவர் மிகவும் உதவி செய்தார். ஒரு தீக்குச்சி சாலையை ஸொந்தமாக ஸ்தாபித்து நடத்தி வருகிறார். ஸமீபத்தில் கல்கத்தாயுனிவர்ஸிடி லெக்சரர்களா யிருந்த பாரிஸ்டர் ரஸுல்போன்றவர்களை ராஜாங்க ஸம்பந்தமான முயற்சிகளில் கலந்தவர்களென்று தள்ளிவிட்ட காரணம் ஸரியானதல்லவென்று அபிப்ராயம் இருந்து வருகிறது. திறமையிலும் கல்வியிலும் இங்க்லீஷ்காரர்களுக்கும் யாதொரு தாழ்வுமில்லாமல் இந்தியர்களில் ச்ரேஷ்டமானவர்களா யிருப்பவர்களைக்கூட சிலஸமயங்களில் கவர்ன்மெண்டார் ஸரியாய் நடத்துவதில்லை என்ற எண்ணத்தோடுதான் போலும் கோஷவர்கள் ஸமீபத்தில் கல்கத்தாயூனிவர்ஸிடி காலேஜ் அபிவ்ருத்திக்கு மேல்சொன்ன விஷயமாக 10 லக்ஷம் ரூபாயை நன் கொடையாக கொடுக்கும்பொழுது சில நிபந்தனைகளை ஏற்படுத்தி யிருக்கிறார். இதில் இந்தியர்களுக்கு சாஸ்த்ரக் கல்வி ஞானத்தைப் பரவச்செய்யவேண்டு மென்பது தம்மபிப்ராயமென்று சொல்கிறார். 10 லக்ஷம் ரூபாயை நூற்றுக்கு 4 வட்டி கிடைக்கும்படி போட வேண்டு மென்றும், 4 ப்ரொபஸர் ஸ்தானங்கள் ஏற்பாடு செய்து அதற்கு இந்தியர்களையே நியமிக்கவேண்டு மென்றும் சொல்லியிருக்கிறார். இத்யாதி கார்யங்களால் அவர் எவ்வளவு உண்மையான தேசாபிமானி என்று தெரிகிறது. வெறும் பேச்சுப் பேசி கார்யத்தில் பூஜ்யமா யிருப்பவரல்ல கோஷ். இவர் போன்று அந்தரங்க பக்தியும் உண்மையுமுள்ள பிள்ளைகள் நம்பாரத மாதாவுக்கி ருப்பார்களானல் நம் தேசம் அதி சீக்ரத்தில் நல்ல நிலைமைக்கு வந்துவிடும்.

கோஷ் இல்லற வாழ்க்கையில் பாக்யமுள்ளவரல்ல வென்று தோற்றுகிறது. இவர் இருமுறை விவாகம் செய்து கொண்டாராயினும், இரண்டு தாரங்களும் தப்பிவிட்டன. ஸந்தான பாக்யமில்லை. இவர் தற்சமயம் கல்கத்தாவில் தியேட்டர் ரோட்டில் தனிமையான பங்க்ளாவில் வஸிக்கிறார். அலுவலில்லாத நேரங்களில் அவரைப் புஸ்தக சாலையில் தான் காணலாம். எப்பொழுதும் புஸ்தகமும் கையுமே. இரவில் அதிக நேரம் வாசிப்பது வழக்கம். இவருக்கு வயது முதிர்ந்தும் தேக ஸௌக்யமும் மனேல்லாஸமும் குடிகொண்டிருக்கின்றன. இவர் இங்க்லண்ட ஜெர்மனி முதலியதேசஸஞ்சாரம் செய்திக்கிருஈர். அவர் சீர்திருந்திய ஹிந்துவாயினும் ஜனங்கள் எவ்வளவு விரும்புவார்களோ அவ்வளவு மட்டுமே வெளியில் காட்டிக் கொள்வார். மிக்க ஜாக்ரதையும் முன் யோசனையுமுடையவர். ஸாதாரணமாய் அவர் தரிப்பது தேசாசார ஹிந்து உடைகள். இவர் அனேக காலம் ஜீவித்திருந்து தேச க்ஷேமாபி வ்ருத்திக்கு வேண்டிய ஸஹாயங்களை மேலும் மேலும் செய்ய அவருக்கு தீர்க்காயுளையும் நல்ல மனதையும் கடவுள் கொடுப்பாராக.

# SELECTIONS.
# விசேஷத்திரட்டு.

## BENEFITS OF INSURANCE.
## இன்ஷுரன்ஸால் உண்டாகும் பயன்.

இல்லற வாசிகளாக இருப்பவர் ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டிய அத்யாவசியமான விஷயங்கள் இரண்டுள. அவைகள் பெரும்பாலும் ஐரோப்பியரால் கைக்கொள்ளப்பட்டு வருவதால், அவர்கள் எவ்வளவு குடிகேடராயிருந்தபோதிலும், அவர்களுக்குப் பிற்காலத்தில் அவர்கள் மனைவி, மக்கள், ஒருவாறு க்ஷேமமாய் வாழுகின்றனர்.

அவையாவன:—

(1) தற்காலத்திற்கடுத்த க்ஷேம நிதிகள் அநேகம் உலகத்தில் இருக்கின்றன. அவைகளில் செழிப்பாய் ஓங்கி வளரும் கம்பெனிகளிலே ஒன்றில் தனக்குக் கிடைக்கும் வருஷாந்தர வரும்படியில் ஆறில் ஒரு பாகத்தைச் செலுத்தி வருவதாக ஏற்பாடு செய்தபின் மட்டுமே விவாகஞ் செய்ய நினைக்கவேண்டும்.

(2) இவ்விதமாய் ஐரோப்பியர்களுக்குள் ஒருவன் ஓர் பெண்ணைத் தனக்கு விவாக மனைவியாகும்படி கேட்கும் போது, அவள் கேட்கும் இரண்டு முக்கியமான கேள்விகள் எவையெனில், (1) உன் தொழிலென்ன? (2) உன் ஜீவனை எவ்வளவுக்கு இன்ஷுர் (Insure) பண்ணிவைத்திருக்கிறாய்? அதாவது உனக்குப் பிற்காலம் உன் குடும்பம் க்ஷேமமாய் வாழும் பொருட்டு என்ன ஏற்பாடு செய்திருக்கிறாய்? என்பவைகளே. இந்த இரண்டு கேள்விகளுக்கும் அவன் கொடுக்கும் விடை தன்னுடைய குலத்திற்கும் அந்தஸ்திற்கும் பொருந்தினால் மட்டுமே அம்மாது விவாகஞ் செய்ய உடன் படுவாள்.

நம்முடைய தேசசகோதரர்களும் இவ்விஷயத்தை நன்றாய் ஆராய்ச்சி செய்து, ஒவ்வொரு வாலிபரும் மனைவி மக்களுடையவர்களும் தம்முடைய உயிரை இன்ஷுர் (Insure) பண்ணினால் அவன் மனைவி மக்களுக்குத் தரித்திரமேயில்லை. இவ்விதமாய் நமது நண்பர்கள் யாவத்திராளும் செய்வார்களாயின், ஒரு தலை முறையிலேயே நமது பரதகண்ட வாசிகள் செழிப்படைவார்களென்பது திண்ணம்.

ஆனால், ஷை சம்பெனிகளில் போட்டு வரும் பணத்தை நாமே சேர்த்து வைக்கக் கூடாதாவென்று சிலர் நினைக்கக்கூடும். சமுசாரத்திலுள்ள அநேக தொல்லைகளை மேற்கொண்டு அப்படித் தவறாமற் பணஞ் சேர்ப்பது மிகவும் துர்லபம். அப்படிச் சேர்த்தாலும் அகஸ்மாத்தாய்ச் செலவுகள் நேரிடும். அன்றியும் மேற்கூறிய வண்ணம், காயம் நிலையில்லாதது பற்றி பணம் சேர்க்க ஆரம்பித்த இரண்டொரு வருஷங்களுக்குள் காலம் சென்றால் நமது எண்ணம் ஈடேறாமற் போகுமல்லவா? ஆனது பற்றி ஷை கம்பெனிகளில் சேர்ந்து நாம் பின்னுக்குச் சேர்த்து வைக்க விரும்பிய முழுத்தொகையையும் நாம் கோரியவர்களுக்கு எச்சமயத்திலும் கிடைக்கத்தக்க ஏற்பாடு செய்து பிற்காலத்தைப் பற்றிய கவலை நீங்கி ஜீவிப்பதற்கிடமாகும்.

அதிக வரும்படியுள்ளவர்களுங்கூட மேற்கூறிய காரணங்களால் ஷை கம்பெனிகளில் சேர்வது நலம். அதன்றியும், அவரவர்கள் அந்தஸ்துக்குத் தக்கபடிச் செலவிட வேண்டியது பற்றியும், அப்படிச் செலவிட்டால் கிரமமாகப் பணம் சேர்த்து வைக்க அனுகூலிகளாகாதது பற்றியும், தங்களுக்குப் பின்பும் அவ்வந்தஸ்திற்கு யாதொரு குறைவும் நேரிடாமல் தமது மனைவி மக்களையும் பாதுகாக்கும் பொருட்டும், வருஷாந்தரம் சொற்பத் தொகையைக் கட்டித் தங்கள் குடும்பத்திற்கு விசேஷ ஆஸ்தியைத் தேடிவைப்பது உத்தமமல்லவா?

தாம் மிகுதியாக வைக்கக் கூடிய தொகையை அப்போதைக்கப்போது தக்க இடத்தில் வட்டிக்குப் போட்டால் பின்னுக்கு உதவாதா வென்று சிலர் நினைக்கக்கூடும். ஆனால், நமது வாழ்நாள் நீடித்திருக்குமென்பதற்கு என்ன உறுதி யுண்டு? ஆதலால், ஷை கம்பெனிகளில் சேர்ந்தால் எக்காலத்திலும் ஓர் பெருந் தொகை கிடைப்பது நிச்சயம். அதிக காலஞ்சென்று உயிர் துறந்தாலும் நாம் கட்டி வந்த பணத்திற்குத் தக்க வட்டியும் கிடைக்கும்.

வேறு சிலர் வியாபாரஞ் செய்து பொருள் சேர்க்க எண்ணுவது முண்டு. ஆனால் இதில் காலக்கிரயங்கள் பேதப்படுவதாலும் சரக்குகள் கெட்டுப்போவதாலும் கடன் கொடாத வியாபாரம் இல்லை யாதலால் கடன் கொடுத்த சரக்குக்குப்பணம் வராதுபோவதாலும் வியாபாரத்தை நடத்த நமக்கு உதவியாக வைத்திருக்கும் ஆட்களின் அயோக்கிய நடத்தைகளினாலும் வியாபாரத்தில் நஷ்டப்படுகிறது தெரிந்த விஷயமே. அவை

களில் பெரும் பாலுமுள்ள கஷ்ட நஷ்டங்களை யோசிக்கு மிடத்து ஷை கம்பெனிகளில் சேர்ந்து அந்தியத்தில் ஓர் பெருந்தொகை கிடைப்பதை உறுதியாக்கி வைப்பது உத்தமமல்லவா ? ஆதலால் க்ஷேம நிதியையே கைப்பற்றக் கருதுவது உசித மென்று உறுதியாய்ச் சொல்லக்கூடும்.

மிகவும் ஏழையாயிருந்த ஒரு குடும்பத்தான் அகஸ்மாத்தாய் காலஞ் சென்று விட்டால் அவனது பிள்ளைகளும் பெண்டீரும் எக்கெதி யடைவார்கள்? பிள்ளைகளுக்குக் கல்விக் கேது வில்லாமற் போகும். மனைவியும் காலக்ஷேபத்திற் கேதுவில்லாமல் தனது கற்பாபரணத்தைக் காப்பாற்றற் கேதுவில்லாமற் போகிறதல்லவா ? ஆகையாலும் ஒரு மனிதனுக்குத் திடீரென்று தேகஜாட்டியமாகி அந்தியம் சமீபித்ததென்று தெரிகிறபோது, அடடா! என்ன செய்கிறது? நமது பெண்டு பிள்ளைகளுக்கு ஆதாரம் நாம் யாதும் தேடிவைக்காமற் போனேமே! அவர்கள் கதியாதாகுமோ! என்று அச்சமயத்திலுள்ள பிராண சங்கடத்தோடு ஷை சமுசாரக் கவலையுங் குடிகொண்டு எள்ளளவேனும் சமாதான மின்றி தங்கள் குடும்பங்களைப் பரிதபிக்க விட்டுத் தேகவியோகமாகிறது சகஜமாயிருக்கிறபடியாலும், இப்பெருந் தீமைகட்கு இடங்கொடாது இதை வாசித்துணரும் புத்திமான்களாகிய ஒவ்வொருவரும் தம்மால் கூடியதொகைக்கு ஷை கம்பெனிகளில் சேர்ந்து கவலை யொழிந்திருப்பது அத்தியாவசியம்.—ஆப்பிரிக்கன் வர்த்தமானியில் ஆர். என் முதலி.

---

## YERUKKAM LEAF MANURE.

### எருக்கம் தழை எரு.

சிலவிடங்களில் எருக்கந்தழையை நெல் வயல்களுக்கு எருவாக உபயோகிக்கிறார்களென்பது வாஸ்தவமே. ஆனால் அது மிகவும் உபயோகமுள்ள தழை எரு என்பது அனேக இடங்களில் தெரியாது. ஏனென்றால், அவ்வூர்களில் அனேக மைல் தூரத்திலிருந்து கொளுஞ்சி, ஆவிரைத் தழைகளைக் கொண்டுவந்து நன்செய் நிலங்களுக்கு உபயோகிக்கிறார்கள். அவ்வூர்களிலேயே காடாய் அடர்ந்து வளர்ந்திருக்கும் எருக்கஞ் செடிகளின் தழைகளை வெட்டி உபயோகிப்பதில்லை.

இப்படி எருக்கந்தழையை எருவாக உபயோகிக்காமல் விட்டு வைத்திருக்கும் இடங்கள் சொஞ்சமல்ல; எல்லா ஜில்லாக்களிலும் காணலாம். மழைகாலத்தில் எருக்கந்தூர்கள் தழைத்து வளர்ந்து பூக்கும் தருணத்தில் அந்தத் தழைகளை வெட்டி நன்செய்களுக்குப் போடலாம். அனேக ஊர்களில் இப்படி உபயோகிக்காமலிருப்பதையும், மஞ்சள் புள்ளிவிழுந்த ஓர்வித பச்சைவிட்டில்கள் ஆயிரக்கணக்காய் உண்டாகி அந்த எருக்கன் இலைகளைத் தின்றுவிட்டுக் கிளைகளைக் குச்சி குச்சிகளாக நிற்க விடுவதையும் நாம் அனேக வருஷங்களாய்ப் பார்த்திருக்கிறோம். திருநெல்வேலிஜில்லா நாங்குநேரித் தாலுகாவில் சமுத்திரக்கரையோரத்திலுள்ள விஜயாபதி, எருக்கந்துறை முதலான அனேக கிராமங்களிலுள்ள புன் செய்க் காடுகளிலிருந்து ஆயிரம் வண்டிப்பாரமுள்ள எருக்கந் தழைகள் வெட்டிக்கொண்டு வரலாம். என்றாலும் அங்கும் சுற்றுப்பக்கங்களிலுமுள்ள நன்செய் நிலங்களுக்கு தழையெருவேண்டுமானால் தொலைதூரங்களிலிருந்து ஆவிரைத்தழையும் கொழுஞ்சித்தழையும் கொண்டுபோகிறார்கள். இவ்விதமாய்க் கிருஷிகரால் சரியானபடி உபயோகிக்கப்படாத எருக்கங்காடுகள் ஒவ்வொரு ஜில்லாவிலு மிருக்கின்றன.

சில விடங்களிலுள்ள கிருஷிகர் எருக்கந்தழையை நாற்றங்கால்களுக்குமட்டும் உபயோகிக்கிறார்கள். எருக்கந்தழையானது எளிதில் அழுகக்கூடியது. அந்தக் காரணத்தால் அது நாற்றங்கால்களில் எருவாக உபயோகிக்க மிகவும் ஏற்றது என்பது வாஸ்தவந்தான். ஆனால் அவ்விடங்களிலுள்ள கிருஷிகர் எருக்கந்தழையானது நாற்றங்கால்களைத்தவிர மற்றப் பயிர்களுக்கு எருவாக உபயோகிக்கத்தக்கதல்லவென்று நினைக்கிறார்கள். சிலர் பயிருக்கு அதை எருவாக உபயோகித்தால் பயிர் எரிந்துபோகும் என்று சொல்லுகிறார்கள். சிலர், "நமது முன்னோர் எருக்கந்தழையை எருவாய் உபயோகித்ததாய்த் தெரியவில்லை ; அப்படியிருந்தால், 'ஆடு அப்பூ ; ஆவிரை முப்பூ' என்ற பழமொழியை உண்டாக்கியவர்கள் எருக்கந்தழையைப்பற்றியும் ஒரு பழமொழி யுண்டாக்கியிருக்கக் கூடுமல்லவா? அப்படி இல்லாததால் எருக்கந்தழை பயிர்களுக்கு எருவாக உபயோகிக்கத்தக்கதல்லவென்றே நினைக்கவேண்டும்." என்று சொல்லுகிறார்கள்.

இவ்விதமாக எருக்கந்தழையின் உபயோகத்தைப்

பற்றி அனேகமாய் எல்லாவிடங்களிலும் சரியான அபிப்பிராயம் இல்லாமலிருக்கிறது. சிற்சில விடங்களிலுள்ள அபிப்பிராயம் மற்ற விடங்களிலில்லை. ஆகையால் அதைப்பற்றி சரியான விவரங்களை எல்லாக் கிருஷிகரும் அறியவேண்டும் என்பது மிகவும் முக்கியம். சில வருஷங்களாக கோயம்புத்தூர் சர்க்கார் பண்ணையில் இவ்விஷயத்தைப்பற்றி சோதனைகளையும் பரீக்ஷைகளையும் நடத்திப் பார்த்தார்கள். அதில் தெரிந்துகொண்ட பல விஷயங்களையும் நாம் இங்குசுருக்கமாய் வெளியிடுகிறோம். எருக்கஞ்செடியானது எந்த நிலத்திலும், அதாவது எவ்வளவு தாழ்ந்ததரமுள்ள நிலத்திலும், எவ்வளவு சத்திழந்த நிலத்திலும் முளைத்துவளரும். அதற்கு நீர்ப்பாய்ச்சலும் அதிகமான மழையும் ஜாக்கிரதையாய்ப்பயிரிடவேண்டு மென்பதும் அவசியமில்லை. அனேக விடங்களில் அது தானுய் முளைத்து நாளாவிர்த்தியில் காடாய் அடர்ந்து போவதை நாம் எங்கும் காணலாம். தற்காலத்தில் சாகுபடி செய்யப்படாமல் அநாதித் தரிசாய்க்கிடக்கும் தீர்வை எற்பட்ட நிலங்களைத் திருத்துவதற்காக அவைகளில் முதல்முதல் சில வருஷங்களுக்கு எருக்கஞ்செடிகளை விதைத்துப் பயிராக்குவது நல்லது. உபயோகமற்ற கல்லாங்சறடுகளாயும், மேடுகளாயும், குன்றுகளாயும் கிடக்கும் அனேகவித புறம்போக்கு நிலங்களிலும் இந்தச் செடிகளை மழை காலத்தில் விதைத்துப் பயிராக்கலாம். காற்றினுல் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு அடித்துப் போகும் தேரி மணல் நிறைந்த பிராந்தியங்களில் மழைகாலத்தில் எருக்கஞ்செடிகளை வரிசை வரிசையாய்ப் பயிரிட்டால் அங்கங்கேயுள்ள மணலானது தடைபட்டு ஓரிடத்தில் தேரிக்குன்றுகளாய்க் குவிந்து போகாமல் அவ்வவ்விடங்களில் நிலைபெற்று நிற்கும். இதனுலுண்டாகும் அனுகூலம் அதிகம்.

தழையைப்பற்றி கவனித்தாலோ ஒரு ஏக்கர் நிலத்தில் எப்பக்கத்திலும் 4 அடி இடைவிட்டு எருக்கஞ்செடிகளைப் பயிரிட்டால், அவைகளிலிருந்து ஒரு வருஷத்தில் 10 டன் (அதாவது 20 வண்டிப் பாரமுள்ள) தழை கிடைக்கும் என்று கண்டு பிடித்திருக்கிறார்கள். வண்டியொன்றுக்கு ரூ. 5 வீதம் 20 வண்டிப்பாரத்துச்கு ரூ. 100 விலையாகிறது. அதைப் பயிரிடச்செல்லும் செலவு ஏகர் ஒன்றுச்கு முதல் வருஷத்தில் சுமார் ரூ. 40 ஆகும். இரண்டுவருஷத்தில் தழைவெட்ட ஆரம்பிக்கலாம். அதற்கப்பால் வருஷாவருஷம் வெட்டிக்கொண்டிருக்கலாம். ஆனி, ஆடி மாதங்களில் சாரல் மழைகள் பெய்யக்கூடிய விடங்களில் இரண்டு தரம் தழை வெட்டக்கூடும். ஒரு முறை விதை விதைத்துப் பயிராக்கிவிட்டால் இது மறுபடி விதைக்கவேண்டியதேயில்லை. அப்பால் தழைவெட்டும் செலவைத்தவிர வேறு செலவு கிடையாது. ஆடுமாடுகளின் அழிவு அதற்கில்லவேயில்லை. ஆனுல் நாம் மேலே சொன்ன விட்டில்கள் சிலகாலங்களில் ஏராளமாய் உண்டாகி இலைகளை இரண்டுமூன்று நாட்களுக்குள் தின்றுநாசமாக்கிவிடும். அப்படியுண்டாகக்கூடிய காலங்களில் காலதாமதம் செய்யாமல் தழையை வெட்டிவிட வேண்டும். நன் செய்த்தொழில் அப்போது தயாரா யில்லாமற்போனுல் எருக்குழிகளில் போட்டு எருவாலும் கரம்பையாலும் மூடிவைத்து வேண்டும்போது எடுத்து உபயோகித்துக் கொள்ளலாம்.

நெற்பயிருக்கு எருக்கந்தழை மிகவும் சிலாக்கியமான எருவென்று காட்டுவதற்கு கோயம்புத்தூர் சர்க்கார் பண்ணையிலும் பாலூர் விவசாயப் பண்ணையிலும் நடத்திய பரீக்ஷைகளே போதுமான சாக்ஷியமாயிருக்கின்றன. அதன் விவரம் அடியிற் குறிப்பிட்டிருக்கிறோம். கோயம்புத்தூர் பண்ணையில் ஏக்கர் ஒன்றுக்கு 4000-இராத்தல் வீதம் கொழுஞ்சித் தழையும் எருக்கந்தழையும் போட்டுவந்ததில்—

| வருஷம். | எருக்கந்தழை போட்ட ஏக்கர் ஒன்றில் விளைந்த நெல் தானியம் இராத்தல். | எருக்கந்தழை போட்ட ஏக்கர் ஒன்றில் விளைந்த வைக்கோல் இராத்தல். | கொழுஞ்சித்தழைபோட்ட ஏக்கர் ஒன்றில் விளைந்த தானியம் இராத்தல். | கொழுஞ்சித்தழைபோட்ட ஏக்கர் ஒன்றில் விளைந்த வைக்கோல் இராத்தல். |
|---|---|---|---|---|
| 1908-09 | 2369 | 4955 | 2500 | 2367 |
| 1909-10 | 3537 | 3583 | 3520 | 3596 |
| 1910-11 | 3756 | 4269 | 3399 | 4110 |

இதனால் கொழுஞ்சித்தழையைவிட எருக்கந்தழையின் உபயோகம் அதிகமென்றும், எருக்கந்தழையை உபயோகித்து வந்த நிலத்தில் தானியமும் வைக்கோலும் வரவர அதிகமாய்க்கொண்டு வந்ததென்றும் தெரிகிறது.

பாலூர் சர்க்கார் பண்ணையில் 1907-ம் வருஷம் முதல் 1910-ம் வருஷம்வரை தொடர்ச்சியாய் நடத்திவந்த பரீட்சையில் நிலக்கடலைப் பிண்ணாக்கு, சாணி எரு, இவைகளைப் பார்க்கிலும் இது அனேகமாய் ஜாஸ்தியான பலன் கொடுத்திருக்கிறதென்பது அடியிற்கண்ட விவரங்களால் வெளியாகும்.

| எக்கர் 1-க்கு 80 தலைச் சுமை புரசு, வாகை, இலுப்பம் முதலிய பலவகைத் தழைகள் உபயோகித்ததில் — நெல் விளைவு இராத்தல். | வருஷம். | எக்கர் 1-க்கு 500 இராத்தல் நிலக்கடலைப் புண்ணாக்கு உபயோகித்ததில் — நெல் விளைவு இராத்தல். | எக்கர் 1-க்கு 10 வண்டி சாணி எரு உபயோகித்ததில் — நெல் விளைவு இராத்தல். | எக்கர் 1-க்கு 80 தலைச்சுமை எருக்கந்தழை உபயோகித்ததில் — நெல் விளைவு இராத்தல். |
|---|---|---|---|---|
| 1540 | 1907 | 1568 | 1592 | 1590 |
| 1968 | 1908 | 2078 | 2004 | 2400 |
| 1728 | * 1909 | * 1832 | * 1672 | * 1704 |
| 2898 | 1910 | 2594 | 3048 | 2872 |

* 1909-ம் வருஷத்தில் வேறு இனசு நெல் பயிரிட்டார்கள் போலும்.

மற்றவகைத் தழைகளுக்கு எருக்கந்தழையானது கொஞ்சமும் தாழ்ந்ததல்லவென்று இந்தப் பரீட்சைகளால் தெரியவரும்.

நிலக்கடலைப் புண்ணாக்கு முதலிய விசேஷ எருவகைகளைப் பார்க்கிலும் எருக்கந்தழையானது அதிகப்பலனைத் தருவதற்குக் காரணம் என்னவென்றால், பிண்ணாக்கு முதலிய எருவகைகள் பயிருக்கு வேண்டிய உணவைக் கொடுக்கமட்டும் உதவுகின்றன. தழை எருவோ பயிருணவைக் கொடுப்பதுடன் நிலத்தின் ஸ்தூல ஸ்திதியை விருத்திசெய்து பண்படுத்தவும் உதவுகின்றது. அதிலும் நாருள்ள கிளைகளும் தண்டுகளுமுள்ள குழைகளாயிருந்தால் அதற்கு நிலத்தைப் பண்படுத்தி விர்த்திசெய்யும் சக்தி அதிகம். எருக்கந்தழைகளுக்கு இந்த சக்தியுண்டு. ஏனென்றால், அதன் குச்சுகள் நாருள்ளன; எளிதாயும் அழுகக்கூடியன.

மைசூர் சமஸ்தானத்தின் விவசாய ரசாயன சாஸ்திரியார் எருக்கம் இலைகளையும் குச்சிகளையும் ரசாயனக் கூறுபாடுசெய்து பார்த்ததில் அடியிற்கண்ட முக்கிய பயிருணவுப் பொருள்கள் 100-க்கு எத்தனை மடங்கு அடங்கியிருக்கின்றனவென்று தெரியவந்தது.

| பயிருணவுப் பொருள்கள் | எருக்கம் | |
|---|---|---|
| | இலைகள் | குச்சிகள். |
| சுண்ணாம்பு (சுண்ணாம்பு) | 0·20 | ... |
| பிரகாசதாமிலம் (பாஸ் பாரிக் ஆஸிட்) | 0·12 | 0·09 |
| மரவுப்பு (பொடாஷ்) | 0·37 | ... |
| வெடியுப்பு சத்து (நைட்ரோஜின்) | 0·42 | 0·22 |

இதுவன்றி சைதாப்பேட்டை விவசாய கலாசாலைத் தலைவராயிருந்த மிஸ்டர் கீஸ் துரையவர்கள் செய்த ரசாயனப் பரீட்சையில் எருக்கந்தழை கிளைகளில் கந்தக சத்து இருப்பதாகவும், அதனால் நாற்றங்கால்களில் முன்கூட்டியே எருக்கந்தழைகள் சரியாய் அழுகாமல் நாற்றுவிடும் தருணத்தில் போட்டுமிதித்தால் இலைகள் அழுகும்போது அதிலிருந்து மண்ணில் துர்நாற்றமுள்ள (Sulphuretted Hydrogen, Carbon-di-oxide) என்னும் விஷவாயுக்கள் உண்டாகி இளம்பயிருக்கு தீங்கு விளைப்பதாகவும் கண்டுபிடித்திருக்கிறார்.

இப்போது நூதனமாக ஜப்பான் விவசாய ரசாயன சாஸ்திரிகள் கண்டுபிடித்திருக்கும் முக்கியமான விஷயம் என்னவெனில், கதிர்த்தானியப் பயிர்களுக்கு சுண்ணாம்பு, பிரகாசிதாமிலம், மரச்சாம்பல் வெடியுப்புசத்து, இந்த வஸ்துக்களைப்போலவே கந்தகமும் ஓர் இன்றியமையாத பயிருணவுப்பொருள் என்பது

தான். அப்படியிருப்பதால்தான் எருக்கந்தழையில் மேற்சொன்ன சுண்ணம்பு முதலிய பயிருணவுப் பொருட்கள் அதிகமாயில்லாவிட்டாலும், அதை உபயோகித்த நிலங்கள் அதிகமான பலனைக் கொடுத்திருக்கின்றன வென்று நிதானிக்க ஏதுவிருக்கிறது.

பிரான்சு தேசத்து தலைநகரமான பாரிஸ் பட்டணத்திலுள்ள ரசாயன சாஸ்திர நிபுணர்கள் நிலத்தில் கந்தகம் சேர்வதாலுண்டாகும் மாறுதல்களைப்பற்றி விசேஷப்பரீட்சைகள் நடத்தி வந்ததில் 1913-ம் வருஷம்மார்ச்சு மாதத்தில் வெளியிட்டிருக்கும் விவரங்களால் கந்தகமானது பயிர்களுக்கு ஓர் உணவுப்பொருளாவது மன்றி, மண்ணிலுள்ள சுண்ணம்புடன் சேர்ந்து Calcium-sulphate (கால்ஷியம் ஸல்பேட்) என்னும் கந்தகச்சுண்ணம்பாகி அதனால் பயிர்களை விசேஷமாகச் செழிப்பிக்கிற தென்றும், கந்தகமானதுமண்ணிலுள்ள அணுக்கிருமிகளின் அபிவிர்த்திக்கும் நைட்ரோஜன் என்னும் வெடியுப்புசத்து விர்த்தியாவதற்கும் ஒரு காரணமாயிருக்கிறதென்றும், கந்தகமானது மற்றவஸ்துக்களின் கலப்பினால் கந்தகத்திராவகமாகமாறி, பின் மண்ணிலுள்ள பயிருணவுப் பொருள்களை எளிதில் கரையச்செய்து பயிர்களுக்கு உடனே உபயோகமாகும்படி பக்குவப்படுத்த உதவுகிறதென்றும் தெரிய வருகிறது. ஆகையால் நிலங்களுக்கு எருக்கந்தழையின் உபயோகம் மிகவும் அதிக மென்பது தெளிவாயும் சாஸ்திர ரீதியாகவும் வெளியாகிறது; அநுபவத்திலும் வியக்தமாய்த் தெரிந்திருக்கிறது. நமது நாட்டிலுள்ள கிருஷிகர்இனி எருக்கஞ்செடியை உபயோகமற்ற ஓர் களைப்பூண்டாக நினைத்து வெட்டியெறியாமலும், அலக்ஷ்மிகரமான செடி யென்று அருவருக்காமலும், பயிர்களுக்கு மிகவும் உபயோகமான தழையெருவைக் கொடுக்கக்கூடியதும், எளிதில் பிரயாசையின்றி எவ்விடத்திலும் உண்டாக்கக் கூடியதுமான செடி என்பதை மனதில் பதித்து அதனால் பலனடைவார்களென நம்புகிறோம்.—கிருஷிகன்.

## SANITATION IN SCHOOLS.

### ஸ்கூல்களின் ஸுகாதாரம்.

ஸ்கூல்களின் ஸுகாதார நிலைமையை சோதிப்பதற்காக ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி விவரத்தை வேறு பக்கத்தில் காணலாம். அந்தக் கமிட்டி கவனிக்க வேண்டிய விஷயங்களைப்பற்றி "சுதேசமித்திரன்" பின் வருமாறு எழுதுகிறது.

"அநேக ஸ்கூல்கள் நல்ல சுத்தமான இடங்களில் கட்டப்படாமல் சுத்தமான காற்றில்லாமலும், குடிதண்ணீரில்லாமலும், நல்ல வெளிச்சமில்லாமலும் பிள்ளைகளுக்கு உட்காரப்போதுமான இடமில்லாமலும் இருக்கின்றன. இவர்களுக்கு பெஞ்சிகள், மேஜைகள், முதலிய சௌகரியங்களும் குறைவாயிருக்கின்றன. படிக்கும் புஸ்தகங்களும் சரியான காகிதத்தில் சரியான எழுத்துகளில் அச்சிடப்படாமலிருக்கின்றன. இவைகளால் பிள்ளைகளின் அவயவங்களில் பல ரோகங்கள் நேரிடுகின்றன. வருஷா வருஷம் அதிகரித்துவரும் பிள்ளைகளுக்கு இடம் போதாத ஸ்கூல்கள் பல இருக்கின்றன. சரீரப் பயிற்சி செய்துகொள்ளும் ஜிம்னேஷியம் முதலிய விளையாட்டுப் பூமிகளும் தகாதனவாயிருக்கின்றன. ஒவ்வொரு பிள்ளையும் தனித்தனியே சோதிக்கப் படவேண்டும். அவன் சரீர சுத்தத்தையும், அவனுக்கு ஏதாவது வியாதி இருந்தால் அதையும், அது தொத்து வியாதியாயிருந்தால் அதையும், அவன் சரீரத்தில் ஊனமிருக்கும் பட்சத்தில் அந்த ஸ்கூல் அதிகாரிகள் அதை நிவர்த்திக்கக் கூடுமாவென்பதையும் விசாரணை செய்ய வேண்டும். இந்த விசாரணையில் பிள்ளைகள் போஜனம் செய்யும் விடுதிகளும் அடங்கும். இந்த விடுதிகள் சொந்தமானாலும் அவைகளின் நிலைமையையும் சோதிக்க வேண்டும். அவைகள் இருக்கும் இடங்களும் அவைகளிலுபயோகப்படும் பாத்திரங்களும் போஜன பதார்த்தங்களும் இன்னமாதிரி யென்று சோதிப்பதும் அவசியம். பிள்ளைகள் வீட்டில் செய்துகொண்டு வரும்படியாய் என்ன வேலைகள் உபாத்தியாயர்களால் கொடுக்கப்படுகின்றன வென்பதும் சோதனைக்குரியவிஷயம். இவைகளைத்தவிர, சென்னைக் கவர்ன்மெண்டார் டிரெய்னிங் காலேஜ்களிலும், ஸ்கூல்களிலும் சுகாதார சாஸ்திரத்தில் மாணவர்கள் எப்படி கற்பிக்கப் படுகிறார்களென்று அறியக் கவலைகொண்டிருக்கிறார்கள்.

இந்தச் சோதனையை இப்போதாவது கவர்ன்மெண்ட் செய்யத் தீர்மானித்தார்களே யென்று சந்தோஷப்படுகிறோம். ஸ்கூல் படிப்பு நம் புருஷாயுசில் சரிபாதிக்குப் பொறுப்பேற்றதாய் விட்டது. ஸ்கூல்களில் தேசத்துப்பிள்ளைகள் பத்தாயிரக் கணக்காய்ப் படிக்கிறார்கள். அவர்களுக்கு அறிவு விருத்தியாவது

மல்லாமல் சரீரமும் வளர்ந்துகொண்டிருக்கிற படியால் அவர்கள் கல்வியபிவிருத்திக்குச் செய்யப்படும் முயற்சிகளைப் போல சரீர அபிவிருத்தியையும் ஸுகமான வழிகளிற் சொல்லும்படி செய்ய சர்வ ஜாக்ரதையும் எடுத்துக்கொள்ள வேண்டும். இம்மாதிரி சோதனை இங்கிலாந்திலும் ஐரோப்பாவில் மற்றத் தேசங்களிலும் செய்யப்பட்டு வருகின்றது. அங்கு கல்வியபிவிர்த்தியை விட சரீரசுக அபிவிர்த்தியே முக்கியமென்று பெற்றோர்களாலும் அதிகாரிகளாலும் கருதப்படுகின்றது."—சுதேசமித்திரன்.

## COCOA-BUTTER.

### தேங்காய் வெண்ணெய்.

தேங்காயின் விலை வர வர ஏறி வருகிறது. முன் காலணுவுக்கு விற்றதேங்காய் இப்பொழுது ஒரு அணுவுக்கு விலைபோகிறது. இன்னமும் விலையேறுமென்று சொல்லுகிறார்கள். இதற்குக் காரணமென்னவெனில், தேங்காய்க் கொப்பரையிலிருந்து எடுக்கப்படும் தேங்காயெண்ணெயைச் சுத்திசெய்து ஒருவிதமான வெண்ணெய் செய்கிறார்கள். அது சாதாரண வெண்ணெய் போலவேயிருப்பதால் ஜனங்கள் மேற்குத் தேசங்களில் அதை ஏராளமாக உபயோகிக்கிறார்கள். இந்தியாவிலிருந்து தேங்காய் கொப்பரைகள் இதற்காகவென்று ஏராளமாக ஏற்றுமதியாகின்றன. தேங்காய் வெண்ணெய்க்காக மேற்றிசை வியாபாரிகள் அதை அதிக விலைகொடுத்து வாங்கிக் கப்பலேற்றிக் கொண்டு போகிறார்கள். தேங்காய்க் கொப்பரையை சிறு துண்டுகளாக நறுக்கி எண்ணெயெடுக்கும் யந்திரத்தில் போட்டுஆட்டி, தேங்காய் எண்ணெயைப் பிழிந்தெடுத்து விடுகிறார்கள். அந்த எண்ணெயில் வெண்ணெயிலுள்ள சுத்தமான கொழுப்போடு சோப்பு செய்வதற் குபயோகமாகும் அசுத்தக் கொழுப்பும் சேர்ந்திருக்கிறது. இதை சோப்புக் கொழுப்பு (Soap fat) என்கிறார்கள். இதனால்தான் தேங்கா யெண்ணெய் காறல் வேகமடிக்கிறது. இதையெடுத்துவிட்டு சுத்தி பண்ணினால் வெகு காலத்துக்கு அது கெடாமலிருக்கிறது. தேங்காய் யெண்ணெயை ஒரு பெரிய தொட்டியில் விட்டு அதில் சாக்குப்பொடியை (சீமைச்சுண்ணாம்புப்பொடி) கலந்தால், அந்தப்பொடி சோப்புக்கொழுப்போடு சேர்ந்துக் கொண்டு அடியில்போய் தங்கிவிடுகிறது.

பிறகு தெளிந்த யெண்ணெயை மற்றொரு தொட்டியில் யந்திரத்தின் விசையால் மேலிழுத்துப் பாயச்செய்கிறார்கள். இப்படி அந்த எண்ணெயைக் குழாய்வழியாக 'பம்பு' செய்யும்பொழுது அதிலுள்ள மஷ்டுகள் போகும்படி அதை நாலைந்து வடிக்கட்டும் யந்திரங்கள் மூலமாகப் பாயச்செய்து இப்படி வடிக்கட்டியிறக்கிய நெய்யை ஒரு தொட்டியில்விட்டு அமுக்கி 270 டிகிரிக்குமேல் நீராவிக் குழாய்கள் மூலமாகச் சூடேற்றுகிறார்கள். தேங்காய் நெய்யானது ஸ்படிகம் போல் சுத்தியாகிறவரையில் இப்படிச் செய்கிறார்கள். பிறகு அதைத் தானாக இறுக்கும் ஒரு யந்திரத்தில் பாய்ச்சி சம அளவுள்ள சதுர கனத்துண்டுகளாகச் செய்து பில்லைகளாக விற்கிறார்கள். குழாய்களில் விட்டு உருண்டை வடிவாகவும் செய்துவிற்கிறார்கள். இந்தத் தேங்காய் நெய் வெகுகாலத்துக்குக் கெட்டுப் போகாதிருப்பதோடு வெண்ணெய் நிறமாகவுமிருக்கிறது. சுத்திசெய்த தேங்காய்நெய் ஸ்படிகநிறமாயிருப்பதைவெண்ணெய்போலிருக்கநிறமேற்றுகிறார்கள். இது ஏராளமாக விலைப்போகிறது. இந்த தேங்காய் வெண்ணெய் செய்கிறவர்கள் வேண்டிய அளவுக்கு செய்ய முடியாதபடியால் சரக்குக்கு கிராக்கியுண்டாகிறதென்று சென்ற சில வருஷங்களில் இதன் விலை ஒன்றுக்கு ஒன்றரையாக ஏறிவிட்டது. இந்தத் தேங்காய் வெண்ணெய்க்கும் சாதாரண வெண்ணெய்க்கும் வித்தியாஸம் கண்டு பிடிப்பது சாதாரண ஜனங்களுக்குக் கூடாமையாக விருக்கிறதாம். மாதக்கணக்காக இதை வைத்திருக்கலாம். கெட்டுப்போகிறதில்லை.

சாக்குத்தூளினால் பிரிக்கப்பட்ட சோப்புக்கொழுப்பை 'ஸல்ப்ரிக் அஸிட்' (கந்தகத்திராவகம்) விட்டுக்கலந்தால், அது சாக்குத்தூள் கரைந்துபோகும் படிச் செய்கிறது. சோப்புக் கொழுப்பு விடுபட்டு மேலே மிதக்கும். அதை யெடுத்து சோப்புச் செய்கிறவர்களுக்கு விற்கிறார்கள். கொப்பரையின் மேல் தோல் முதலியவற்றை மாட்டுக்கும் பன்றிக்கும் நல்ல தீனியாக விற்கிறார்கள்.—விவேக சிந்தாமணி.

## HOME TRAINING.

### வீட்டுக்கல்வி

கல்வியும் நற்பயிற்சியும் பள்ளிக்கூடங்களிலேயே பிள்ளைகளுக்குக் கற்பித்துவரல்வேண்டுமென்னுந் தவறான ஒருகருத்தைச் சிலபெற்றோர் மனதில்வைத்துக்கொண்டு பிள்ளைகள் வீட்டிலிருக்கும் வேளைகளில் அவர்களைக்குறித்துச் சிறிதுஞ்சிந்தையிலாது எழுந்தபடிநட

க்கவிடுகின்றார்கள். பள்ளிக்கூடங்களிலே உபாத்திமாருடைய காவலிலும் வீட்டிலே பெற்றாருடைய காவலிலும் பிள்ளைகள்வளர்ந்துவருதல்வேண்டும். சிலபெற்றார் தம்மட்டிலும் தம்பிள்ளைகள்மட்டிலும் நடந்துகொள்ளும்வகை தெரியாது, தம்மையும் தம்பிள்ளைகளையும் பழுதுபடுத்திக்கொள்வதால் அவர்களுக்குப் பின்வருவன அனுசரிக்கத்தகும் பொற்பிரமாணங்களாகும்.

1—சிறுபிராயந்தொட்டு உடனே கீழ்ப்படியும்படி பிள்ளைகளைப் பயிற்றிவரல்வேண்டும்.

2—நீங்கள் பதவியகுணத்துடன் உறுதியான சித்தமுடையவர்களாயிருத்தல்வேண்டும். உங்கள் பிள்ளைகளுக்கு எதையாவது கற்பிக்கும்போது உங்களுடைய வார்த்தையுங் கருத்தும் ஒன்றையே குறிப்பதாய் அதனையே அவர்கள் கவனிக்கும்படி செய்தல்வேண்டும்.

3—உங்களால்கொடுக்க இபலுமென்று திட்டமாயறிந்தாலன்றி யாதுமொருபொருளைப் பிள்ளைகளுக்குத் தருவதாக வாக்குப்பண்ணுதலாகாது.

4—நீங்கள் பிள்ளைகளுக்கு யாதையாவதுசெய்யும்படி கற்பிக்கும்போது முன்னால் அவர்களதனை எப்படிச் செய்யவேண்டுமென்பதைக் கிரியையாற் காட்டிப் பின் அவர்களவ்வாறு செய்கிறார்களோ வென்பதைக் கவனித்துப்பார்க்கவும்.

5—மூர்க்கங்கொண்டு பிள்ளைகள் கீழ்ப்படியாதபோது தப்பாமல் அவர்களுக்கு ஆக்கினைசெய்யவேண்டும். ஆனால், அவர்கள் கோபமுடையவர்களாயிருந்தால் அது ஆறுமட்டும் பொறுத்திருந்து தண்டித்தலே முறை. சிறுதண்டனைகளினாலே பிள்ளைகளைத் திருத்தக்கூடியதாயிருக்கும்போது பெரியதண்டனை செய்தலாகாது.

6—பிள்ளைகள்உங்களை ஏய்க்க அல்லது தந்தரமான கதைகளினாலே உங்கள்கருத்தைமாற்றித் தங்கள்கருத்துக்கு இசைக்கும்படிசெய்ய இடம்வைத்து நடக்கப்படாது.

7—பிள்ளைகளுக்கு நற்புத்திசொல்லுவதில் அவர்கள் மனம் வெந்து கோபித்துக் கொண்டிருக்குஞ் சமயம் நீக்கி சமாதான மனசுடையவர்களா யிருக்கும்போது அவர்கள்செய்த குற்றங்களைத் தொட்டுக்காட்டிப் புத்தி கூறல்வேண்டும்.

8—பிள்ளைகள் ஒருகுற்றஞ்செய்தபோது இனிமேல் இப்படியான குற்றங்கள்செய்தால் கடினமான ஆக்கினை கிடைக்குமென்று சொல்லிப் பயமுறுத்தி விடுவதிலும் அவர்கள்குற்றஞ்செய்த அவ்வேளை சிறுஆக்கினை செய்துவிடுதல் உத்தமமென்பதைப் பெற்றார் அறிந்துகொள்வார்களாக.

9—யாதுமொருபொருளைத் தரும்படிபிள்ளைகள் அழுதால் அவர்கள் அழுகிறார்களேயென்றுசொல்லி அப்பொருளை அவர்களுக்குக்கொடுக்கப்படாது.

10—ஒருகால் ஒருகாரணத்தையிட்டுச்செய்யப்படாதென்று விலக்கியதை பின்னொருகால், அக்காணத்தையிட்டே அதைச்செய்யும்படி உத்தரவுகொடுக்கலாகாது.

11—நல்லவனாயிருக்கவேண்டில் நன்மையேசெய்தல்வேண்டுமென்பதைப் பிள்ளைகளுக்குப்படிப்பித்தல் வேண்டும்.

12—பிள்ளைகள் சிறுசங்கதிகள் பேசும்போதும் அற்பமேனுமுண்மையி னின்று பிசகாதுபேசப் பயிற்றிவருதல்வேண்டும்.

13—கோள் குண்டணிகள் பேச ஒருக்காலும் கொடுத்தலாகாது.

14—அடிக்கடி அவர்களுடன் சம்பாஷித்து உங்களுடன் சம்பாஷிப்பதில் அவர்கள் அதிக ஆசையுள்ளவர்களாயிருக்கும்படி செய்தல்வேண்டும்.

15—பிறத்தியாருக்குமுன்னே பிள்ளைகளின் குறை பேசலாகாது.

16—சிலபெற்றார் எப்பொழுதும் பிள்ளைகளில் குற்றம்பிடிப்பதேயன்றி நல்லவார்த்தை ஒருகாலும்பேசார்கள். நன்மைசெய்யும்போது அவர்களை வாழ்த்தி மேலும் நன்மைசெய்யத் தூண்டுவதுதான் தக்கமுறை.

17—தேவனுக்குத் தோத்திரமாக யாவையுஞ்செய்யப் பிள்ளைகளைப் பயிற்றிவரல்வேண்டும்

18—தேவபக்தியில் வளர்த்து நல்லொழுக்கத்தில் சிறந்திவரவேண்டியது பெற்றார் யாவருக்குந் தப்பாக்கடமையேயாம்.—சத்திய வேத பாதுகாலவன்.

---

## DANGER OF CHEAP MONEY.

### குறைந்த வட்டிக்கு பணம் கிடைப்பதின் கெடுதிகள்.

சென்ற மே மாஸம் 13-தேதி உத்தரமேரூரில் நடந்த செங்கற்பட்டு ஜில்லா கோவாபரேடிவ் கான்பரென்ஸில் திவான் பகதூர் ராஜகோபாலாசாரியார் குறைந்த வட்டியில் பணம் கிடைப்பதைப் பற்றிப் பேசியதின் மொழி பெயர்ப்பு:—

ஐக்கியக் கோட்பாடுகள் போதுமானபடி படிப்பிக்கப்படாமையால், கடன் வாங்குவதற்கு வட்டி விகிதமும் வாங்கும் வழியில் கஷ்டமும் குறைந்திருக்கவே அதற்குத் தக்கபடி கோவாபரேடர்கள் பட்டிருக்கும் கடனும் அதிகப்பட்டிருக்கிறது. இந்த விடத்திலேயும் ஸர் நிகல்ஸன் புத்தகத்தைப் படித்து நாம் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். நாணயம் அதிக தூரம் பரவவேண்டியதென்பதல்ல நாம் விரும்பவேண்டியது. கடன் வாங்குபவனுக்குக் கோட்பாடுகளைப் படிப்பித்து, அவன் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த வேண்டுமென்பது நாம் கோரவேண்டுமென்று ஸர் நிகல்ஸன் பலமுறையும் சொல்ல பின்வாங்குவதில்லை. அவர் புஸ்தகத்திலிருந்து கீழ் வருவதை எடுத்து எழுதுகிறேன். "குறைந்த வட்டிக்கு ஏராளமாய்ப் பணம் கிடைக்கவேண்டு மென்பதல்ல நமது கோரிக்கை. ஐக்கிய நன்மையை அடையத் தங்களைத் தகுதியுள்ளவர்களாகச்செய்து கொள்ளாத ஜனங்களுக்குக் குறைந்த வட்டிக்குத் தொந்தரவில்லாமல் அதிக பணத்தைக் கடன் கொடுக்க வேண்டுமென்பதுமல்ல நமது கோரிக்கை. பின் நாம் கோருவது என்னவென்றால், பணம் மிகுப்பதற்கு வேண்டிய சௌகரியத்தையும், பாங்குகளில் டிபாசிட்டு செய்ய தைரியத்தையும், நாணயத்தின் உண்மை நோக்கம் அதனை உபயோகப்படுத்தும்வழி, அது போகக்கூடிய அளவு ஆகிய இவைகளைக் கற்றுக்கொடுத்தலையும் செய்து கொடுக்கக்கூடிய சங்கங்கள் வேண்டும். இந்த சங்கங்களால் மேற்சொன்ன நன்மைகள் உண்டானால் ஜன சமூகத்துக்கு அவசிமாய் இருக்கவேண்டிய குணங்களாகிய சிக்கனமும் முன்னறிவும் சுய உதவியும் ஏற்பட்டதாய்விடும். குறைந்த வட்டிக்குப் பணம் கிடைப்பதொன்றே போதுமானதல்ல. அது ஒருவேளை கடன் பளுவை அதிகப்படுத்தவும் கூடும். குறைந்த வட்டிக்கு சுலபமாய்ப் பணம் கிடைப்பது மாத்திரம் போதாதென்று ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. அப்படித் சுலபமாய்ப் பணம் கேட்டபோது கிடைக்கவேண்டியதுதான். ஆனால் அப்படிக் கொடுக்கப்படும் பணம் கடன் வாங்குபவனைப் படிப்பித்துத் திருத்தி ஒழுங்காய் நடக்கச்செய்வதாயிருக்கவேண்டும். மேலும் அந்தப்பணம், காரியங்களை ஆலோசித்து வரையறுத்து செய்யவும், பணம் மிகுக்கவும் கற்றுக்கொண்ட ஜனங்களுக்குமாத்திரம் கொடுக்கப்படவேண்டும். அந்தப்பணத்தைக் கொடுக்கும்வழி பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உதவிசெய்து கொள்ளுதல் என்னும் படிப்பினையைத் தெரிந்துகொள்ள செய்வதாயிருக்கவேண்டும். மேலும் அந்தவழி கொடுக்கல் வாங்கலாகிய நாணயத்தில் அந்தப் படிப்பினையை அறிவதல்லாமல் இதர சந்தர்ப்பங்களிலும் உபயோகிக்கும்படி பண்ணுவதாயிருக்க வேண்டும். மிதமிஞ்சின வட்டியை ஒழித்தலோடு ஒழுங்குச்குட்பட்டு அந்தப் பணத்தினால் பிரதிப் பிரயோஜனம் பெருகவேண்டும்.

இந்த ஜில்லாவில் கோட்பாடுகளின் குணத்தைச் சொல்லிக்கொடுத்து அதன்பலன் கைச்கு வராமல் நாணயம் அதிகப்பட்டதனால் உண்டாகும்அபாயத்தைத்தடுப்பதற்கு எவ்வளவுதூரம் முயற்சி செய்யப்பட்டதென்பதை அறிய நலமாயிருக்கும். கடைசிமாகாண கான்பரென்ஸில் மாக்ஷிமை தங்கிய கவர்னரவர்கள் சொல்லியதை இங்கெடுத்துச் சொல்லுகிறேன்.

"குறைந்த வட்டிக்குக் கிடைக்கும் பணத்தினால் அநுகூலங்கள் இல்லாமல் போகலாம். அப்படித்தான் இங்கே இப்போதிருக்கிறது. கடன் அதிகரித்திருக்கிறது. அது அதிகரித்ததற்கு ஒப்ப ஐக்கிய இயக்கம் ஆரம்பித்த பிறகு கூட்டுறவினர்கள் அது விஷயமாய்ச் செய்யவேண்டிய பொறுப்பும் அதிகரித்திருக்கிறது. நாளாக ஆக சடனதிகரித்தல் நின்று போய் மற்ற குணத்திற்கெல்லாம் மேலாய் சிக்கனத்தின் அவசியம் போதிக்கப்பட்டு கூட்டுறவினர்களெல்லாம் அதைக்கைக்கொண்டு அதிகமாய் கடன் வாங்குவதைத் தடுப்பார்களென்று நம்புகிறேன்." கனவான்களே, இந்த விஷயம் முக்கியமானது. இதில் உண்டாகும் கெடுதியைக் கவர்ன்மெண்ட் டிபார்ட்மெண்டார் தடுக்க முடியாது. கெடுதிக்கும் பரிகாரம் உங்கள் கையிலிருக்கிறது. அதைத்தேட நீங்கள் பின் வாங்கக்கூடாது. பிரதிகிராமத்திலுமுள்ள தலைவர்களை நான் கேட்டுக்கொள்வதென்னவென்றால், சுலபமாயும் வட்டி குறைச்சலாயும் கிடைத்த பணத்தை நல்ல வழிப்படுத்தாது வீணாக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்பது தான். இந்த சங்கங்களால் இந்த ஜில்லாவில் சில கிராமத்தில் ஸ்திரமான நன்மை உண்டாகவில்லையென்று தெரியவருகிறது.

ஏனென்றால், கடன் வாங்குபவர்கள் பணம் சுலபமாய்க் கிடைப்பதால் அதிகமாய் கடன் வாங்கிவிட்டார்கள். இப்படிச் சுலப வட்டிக்குப் பணம் கிடைக்கும்போது அதிகமாய்க் கடன் வாங்கிவிட்டால் அதிக வட்டிக்குக் குறைச்சலாய் கடன் வாங்கின காலத்தில் கொடுத்த வட்டித்தொகையையே இப்போதும் கொடுக்கவேண்டியிருக்கிறது. அதைத்தவிர முன்னையவிட அசல்தொகை இப்போது அதிகமாய் விட்டது. இந்தக் கெடுதியை நீக்கும் பொருட்டுத்தான் ரயிபீசன் சங்கங்கள் பிரதிப்பிரயோஜனமுள்ள காரியங்களுக்குத்தான் கடன் கொடுக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கின்றன. நமது சங்கங்கள் எல்லாம் ரயிபீசன் சங்கங்களின் ஏற்பாட்டை அநுசரித்து ஸ்தாபிக்கப்பட்டிருந்தும், இந்தக் கோட்பாட்டை அநுசரிப்பவை அவைகளில் மிகக்கொஞ்சம் என்று சொல்லப்படுகிறது. இயக்க ஆரம்பத்தில் சுலபமாய்ப் பணம் கிடைப்பதின் கெடுதி அதிகமாய்த் தெரிந்திராது. இருந்தாலும் அந்தக்கெடுதி இருக்கவே இருக்கிறது. அது நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வரும். நீங்கள் ஒவ்வொருவரும் அதைக் கவனித்துத் தடுப்பதற்கு முயற்சி செய்யவேண்டும்.—சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி.

# REVIEW OF THE PRESS.

# பத்ரிகை ஆராய்ச்சி.

## Women and Physical Exercise.

ஸ்த்ரீகளும் தேகாப்யாஸமும்—நடை உடைபாவனைகளும் ஆசாரங்களும் தேசத்துக்கு தேசம் வித்யாஸமாயிருக்கின்றன. இந்த மாதிரியே தேகாப்யாஸ விஷயத்திலும் ஒருதேசத்தார் அனுஸரித்து வருவது போல மற்றொரு தேசத்தார் அனுஸரிப்பதில்லை. கால தேச சீதோஷ்ண ஸ்திதிகளை உத்தேசித்து தேகாப்யாஸங்கள் தொன்று தொட்டு ஒவ்வொரு தேசத்திலும் செய்யப்பட்டு வருகின்றன. இக்காரணமாய் ஒரு தேசத்தார் தங்களுக்குப் புராதனமாயுள்ள அப்யாஸங்களை அடியோடுவிட்டுப்புதிதாக மற்றொரு தேசத்துள்ளவைகளை அனுஸரிப்பது உசிதமானதன்று. 'லோகரஞ்சினி' பத்ரிகையில் நம் தேசரீதியை உத்தேசித்து நம்முடைய ஸ்த்ரீகளுக்கு எந்த விதமான தேகப்பயிற்சி ச்லாச்யம் என்பதைக்குறித்து ஒரு வ்யாஸம் வெளியாயிருக்கிறது.

நம்முடைய பெண்கள் இளமைப் பருவத்தில் கோலாட்டம், கண்ணும் பொத்தி, அம்மானை, பாண்டி முதலிய விளையாட்டுகளால் நல்ல தேகப்பயிற்சி பெறுகிறார்கள். சற்றேவயது வந்தவுடன் க்ரஹக்ருத்யங்கள் செய்யப்பழகுகிறார்கள். கிணறுகளிலிருந்து ஜலம் இழுக்கிறதும், அவைகளைச் சுமப்பதும், பாத்ரங்களைத்துலக்குவதும், வீடுகளை சுத்தம் செய்வதும், சமையல் செய்வதும், துணிகளைத்துவைப்பதும் போன்ற பலவித கார்யங்களெல்லாம் தேகப்பயிற்சிகளேயாம். இந்த அப்யாஸங்களைச் செய்துவந்த ஸ்த்ரீகள் தேகஸௌக்யம் பெற்றுநோயற்று திடசரீரிகளாய் நெடுங்காலம் வாழ்ந்தார்கள். தேகாரோக்யமுள்ள குழந்தைகளையும் பெற்றார்கள். ஆனால் கொஞ்ச காலமாய் வீட்டுவேலைகளைச் செய்வது கேவலமென்று அந்தஸ்தும் செல்வமும் பெருகியுள்ள குடும்பஸ்த்ரீகள் நினைத்து விட்டது விஸனிக்கப்படவேண்டிய விஷயம். இவர்கள் மோட்டார் வண்டிகளிலேறி கடற்கரை, வெளிப்புறங்கள் சென்று உலாவுவதையும், பாட்மிங்டன், டென்னிஸ் விளையாடுவதையும் சிறந்தவை என்று அனுஸரித்துவருகிறார்கள். நம்தேசத்துக்கும் நம்முடைய ஸ்த்ரீகளுக்கும் இந்த விதமான அப்யாஸங்கள் அவச்யமில்லை. ஆகையால் அவைகளை மேற்கொள்ளுதல் சிறந்ததாகாது. நம்முடைய தேகப்பயிற்சிகளில் சில சீர் திருத்தங்கள் காலரீதியை உத்தேசித்து செய்யவேண்டியது அவச்யந்தான் என்று ஒத்துக்கொள்ளவேண்டும். இருந்தாலும் அடியோடு மாற்றுவது ஸரியாகாது. ஆகையால் பெண்பாடசாலைகளில் தேஹாப்யாஸ விஷயமாக நம்தேசத்திற்குத் தகுந்தவைகளிலேயே பெண்களைப்பழக்கவேண்டும். இதை வித்யாதிகாரிகள் கவனிக்கவேண்டும் என்று லோகரஞ்சனிப் பத்ரிகை வற்புறுத்துகிறது. பெண் பாடசாலைகளில் தேகாப்யாஸங்கள் மேனாட்டு முறைகளை அனுஷ்டித்து சித்தம் செய்யப்பட்டிருப்பது விசேஷமானதல்ல.

## What Shall We Drink ?

குடிக்கக்கூடிய பானங்கள் :—ஸாதாரணமாய் மனிதர்கள் குடித்துவரும் பலவகை பானங்களின் ஸாதகபாதகங்களை தெளிவாய்எடுத்துக்கூறி'இரஞ்சித போதினி' பத்ரிகை ஒரு வ்யாஸமெழுதி யிருக்கிறது. அந்தப் பத்ரிகை மனிதனுடைய தேகத்தினமைப்பில் மூன்றில் ஒரு பாகம் த்ரவபதார்த்தமாக விருப்பதால் த்ரவபானமவசியமென்கிறது. மேலும் ப்ரதிதினமும் மனிதன் வியர்வை, ச்வாஸம், மூத்ரம் ஆக 84 அவுன்ஸ் நிறையைக்கழித்துக் கொண்டுவருவதால் இந்த நஷ்டத்தை ஈடாக்க த்ரவபதார்த்தம் எடுத்துக்கொள்தல் அவச்யமாகிறது.

த்ரவபதார்த்தங்கள் பலவற்றுள் மனிதனுக்கும் ப்ராணிக்கும் உசிதமானது இயற்கையிலே அமைக்கப்பட்டிருக்கும் ஜலம். ஜலத்தின் மூலமாக நோய்களை யுண்டாக்கும் க்ருமிகள் மனிததேகத்துட்புகுந்து அஸௌக்யத்தையுண்டாக்குமாதலால், ஜலத்தைக் குடிப்பதில் நாம் மிகவும் ஜாக்ரதையாயிருக்கவேண்டும். ஜலத்தை நன்றாய்க்காய்ச்சி வடிக்கட்டி விடுவதால் விஷ க்ருமிகள் இறந்துபோகின்றன. சுடுதண்ணீர் தேகத்துக்கு அவச்யமான சூட்டைக் கொடுக்கிறது. சோர்வடைந்த உருப்புகளின் களைப்பைத் தீர்க்கிறது. உட்கொள்ளும் ஆகாரம் ஜீரணமாகச் செய்கிறது. குடிக்கும் ஜலம் சரீரமெங்கும் சென்று அசுத்தங்களை வெளிப்படுத்துகிறது. காலையில் நித்ரை தெளிந்தெழுந்ததும் ஜலம் சாப்பிடுவது நல்லது. நீர் ஸுலபமாய்க் கழியும். சாப்பிட்டு முடிந்தவுடன் வெந்நீர் குடிப்பது குன்மநோயைக் குணப்படுத்துகிறதென்று

வைத்யர்கள் சொல்கிருர்கள். "நீர்கருக்கி, மோர் பெருக்கி, நெய்யுருக்கியுண்பவர்தம் பேருரைக்கில் போமே பிணி" என்று தமிழ் வைத்யர்கள் பாடுவதுண்டு.

சுத்த ஜலத்துக்கடுத்தபடி மோரை நல்லபானமென்று சொல்லவேண்டும். மனிதனுடைய சிறுகுடல்களிலுற்பத்தியாகும் சிறுபுழுக்கள் வ்யாதிகளையுண்டாக்கி ஆயுளைக்குறைக் கின்றன. இப்புழுக்களைக் கொல்லும் சக்தி மோருக்கிருக்கிறதாம். பால்கன் ஜாதியார் மற்ற ஜனங்களைப்பார்க்கிலும் அதிககாலம் ஜீவிப்பதற்குக்காரணம் அவர்கள் அதிகமாய் மோர் குடித்துவருவது என்று வைத்ய நிபுணர்கள் அபிப்ராயப்படுகிருர்கள்.

ப்ராந்தி, விஸ்கி ஆகிய பலவகை சாராயதினுஸுகள் தேகத்துக்கு பலனைக்கொடுக்கின்றனவென்று நினைப்பது ஸரியன்று. இவைகளில் சரீரபோஷணைப்பதார்த்தமேகிடையாது. சதையை உண்டாக்கும் சக்தியாவது, ரத்தத்தை வ்ருத்தியாக்கும் சக்தியாவது இவைகளுக்கில்லை. தேகத்திலுள்ள பலத்தைக் குறைத்து சரீர உறுப்புக்களை நாசமாக்குகின்றன. மேலும் சரீர உறுப்புகள் தங்கள் தொழில்களை ஒழுங்காய்ச்செய்வதற்கு மூலகருவியாயிருக்கும் மூளையையும் நரம்புமண்டலத்தையும் கெடுத்துவிடுகின்றன. இந்தக்குடி தினுஸுகளுக்கு உணவை ஜீரணிக்கும் சக்தியுண்டென்று சிலர் அபிப்ராயப்படுகிருர்கள். ஆனல் உண்மை இதுதான். இரைப்பையில் உணவு ஜீரணமாவதற்குத் தேவையாயுள்ள பெப்ஸின் என்னும் பதார்த்தத்தை அழித்து விடுகிறது. குடிப்பழக்கமுள்ளவர்களுக்கு இந்தக்காரணத்தால் குன்மநோய், ஈரல் நோய், நரம்புத்தளர்ச்சி ஆகியநோய்களுண்டாகின்றன. இவர்கள் அல்பாயுஸுள்ள வர்களாகிருர்கள். ஆகையால் இவைகளைக் கனவிலும் நினைக்கக்கூடாது; விஷமென்றே விலக்கவேண்டும்.

**Small Industries.**

**சிறு தொழில்கள்.**—காலதேச வர்த்தமானத்தை உத்தேசித்து, சிறு தொழில்களில் எவைகள் பொருத்தமுள்ளவைகளென்றும், தேச நன்மைச் ஸாதனமானவைகளென்றும் விஷயங்களை ஆராய்ந்து 'சுதேசமித்திரன்' ஒரு வ்யாஸம் எழுதியிருக்கிறது.

படித்தவகுப்பாரில் பலர் தொழில் கிடைக்காமல் திண்டாடுகிருர்கள். முக்யமாய் மத்ய வகுப்பாரே உயர்ந்தபடிப்பில்லாத காரணத்தாலும், தக்கதொழில் கிடைக்காதகாரணத்தாலும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறவர்கள். இவர்களுக்கு லாபம் தரக்கூடியதும் கௌரவமானதுமான ஜீவனோபாயங்களை உண்டுபண்ணுவது தேச நன்மைக்கு அவச்யம். நம்தேசத்தில் பெரிய முதலுள்ள செல்வவான்கள் ஸ்வல்பம்; முக்யமாய்த் தென்னிந்தியாவில் இப்படிப்பட்ட முதலாளிகள் இல்லையென்றே சொல்லலாம். ஆகையால் லக்ஷக்கணக்காய் முதல்வைத்து தொழிற்சாலைகளை ஸ்தாபித்து ஏராளமாய்த் தொழில்செய்வது முடியாத கார்யம். மத்யவகுப்பைச்சேர்ந்த ஸ்வல்ப முதலுள்ளவர்கள் தொழிலாளிகளைச்சேர்த்து, அவர்களுக்குக் கூலி கொடுத்துத் தொழில் நடத்துவதுதான் காலரீதியை நினைக்கும்பொழுது ஸரியானது, நம்தேசம் இப்பொழுதிருக்கும் நிலைமைக்கு விசேஷப் பொருத்தமுள்ளது.

இப்படி நடத்தக் கூடும் தொழில்கள் எவை? துணிநெய்தல், பித்தளைப்பாத்ரம் செய்தல், தோல் ஸாமான்கள் செய்தல் ஆகிய சிறு தொழில்கள் இப்பொழுதும் ஒரு சிறு முதலாளியால் சில தொழிலாளிகளைக்கொண்டு நடத்தப்பட்டு வருகின்றன. இவர்களைத்தற்கால முறைப்படி திருத்தி நடத்தினல் தொழில்கள் அபிவ்ருத்தியாவதுமன்றி தேசத்துக்கு நன்மையுமுண்டாகும். இந்த வ்யாபாரிகள் மாமூல் படிக்குத்தொழில் செய்து, தாங்கள் செய்த ஸாமான்களுக்கு உடனுக்குடனே க்ராக்கியில்லாமல் வைத்துக்கொண்டிருப்பதால் நஷ்டமடைகிருர்கள். இந்தத் தொழில்களை ஊக்கமும் ச்ரத்தையுமுள்ள படித்த வகுப்பார் நடத்தினல் அவர்களுக்கு லாபம் கிடைப்பதுடன், கௌரவமான ஜீவனோபாயமும் ஏற்படும். இவர்கள் தங்களுக்கு அனுபோகமும் பழக்கமுமுள்ள சிறு தொழில்களையே நடத்தவேண்டும். இல்லாவிட்டால் நஷ்டங்களும் ஸங்கடங்களும் உண்டாகும்.

நம்மவர்கள் சொக்காய், குல்லாய், பனியன், ஸாக்ஸ் இவைகளை ஸர்வஸாதாரணமாய் அணிந்து வருகிருர்கள். இவைகளுக்கு நல்ல க்ராக்கியிருக்கிறது. இந்தத் தொழில்கள் பெண் பாடசாலைகளில் பெண்களுக்கு கற்பிக்கப்படுகின்றன. இவைகளை அதி சீக்ரமாயும் ஸுலபமாயும் செய்யும் மெஷின்களிருக்கின்றன. சில மெஷின்களை வாங்கி கைதேர்ந்த தொழிலாளிகளை வைத்துக்கொண்டால் விசேஷலாபம் கிடைக்கும். யுரேஷிய ஸ்த்ரீகள் இந்தவிதமான தையல்

வேலைகளைச்செய்தே ஜீவனம் செய்கிருர்கள். அனுதைகளாயிருக்கும் விதவை ஸ்த்ரீகளுக்கு இந்த தொழில்களைச்சற்றுக்கொடுத்து வேலை நடத்திஞல் அவர்களுக்கு ஒரு ஜீவஞேபாயம் உண்டாகும். இப்படி சிறிய தொழிற்சாலைகளை நடத்துகிறவர்கள் காலக்ரமத்தில் அறிவு பெருகி அனுப்டோகமதிகரித்து பெரிய தொழில்சாலைகளை நடத்தவும் சக்தியுள்ளவர்களாவார்கள்.

**The Presentday Medical Practice.**

தற்கால வைத்யத்தொழில்:—'லோகோபகாரி' யில் டாக்டர் எம். மாசிலாமணி முதலியார் மேற்குறித்த விஷயத்தைப்பற்றி எழுதியிருக்கிறதில் சில முக்ய அம்சங்களைக் கீழே குறிக்கிருேம்.

முதலியார், நம்மவர்கள் ஆதிகாலத்தில் 100,150 வருஷங்கள் ஜீவித்தார்களென்றும், தற்காலத்தில் புதிது புதிதான மருந்துகளும், செயற்கை ஆகாரங்களும், வைத்யர்களும் கணக்கில்லாமல் பெருகியும், ஸாதாரணமாய் 40,50 வயது முடிவதற்குள் இறந்து போகிருர்களென்றும் சொல்லி, அதற்கு காரணங்களைச் சொல்கிருர்.

அவர் தற்கால வைத்ய முறையைப்பற்றிக் கூறுவதாவது:

" தற்காலத்து மகா பண்டித சிரோமணிகள் செய்யும் வைத்தியமானது எப்படி இருக்கின்றதென்ருல், குழந்தைகளின் கையில் கத்தியைக் கொடுத்து விட்டு அவைகள் தமது சரீரத்தைக் கீறிக்கொண்டு வாதைப்படும் சமயத்தில் மருந்துபோட்டுச் சொஸ்தப்படுத்துவதும், மறுபடியும் கீறிக்கொண்டால் அவற்றுக்கெல்லாம் புதிய மருந்துகள் கண்டுபிடித்துச் சொஸ்தப்படுத்துவதும், இப்படி கீறிக்கொண்டேவரும் குழந்தைகளுக்கு மருந்து போட்டுக்கொண்டே வருவதும் போல விருக்கின்றது."

அவர் வ்யாதிகளுக்குக் காரணத்தையும் அதற்கு சாந்தியாகக்கொடுக்கும் மருந்துகள் செய்யும் கெடுதல்களையும் குறித்துச் சொல்கிருர்.

" ஒவ்வொரு வியாதியும் அசுத்த ஆகாரத்திஞலும் அசுத்தகாற்றுகளிஞலும் உண்டாகின்றது. உஷ்ணம் அதிகரித்து ரத்தம் கெட்டுப்போய் நரம்புகளில் பரவிச் சிறிய நரம்புகள் வழியாய்ப் போகும்போது ரத்தம் தடைபட்டு நரம்புகள் வெடித்து ரணமாவதால் சுரமுண்டாகின்றது; அத்தகைய நரம்புகளின் ரணம் வயிற்றில் உண்டாகும்போது அதற்கு டைபாயிட் என்னும் சந்நிபாத சுரமென்றும், சுவாசப்பையில் உண்டாகும்போது நிமோனியா சுரம் என்றும் சொல்லப்படுகின்றன. இன்னும் இப்படியே ஒவ்வொரு வியாதியும் வெவ்வேறு பெயர்கொண்டுஉண்டாகின்றது. இவ்வியாதிகளுக்கு ஔஷதங்கள் கொடுப்பதால் உண்டாகும் கெடுதிகள் என்னவென்ருல், சரீரத்தின்ஒருபாகத்திலுள்ள விஷத்தைப்பிரிப்பதற்காகக் கொடுக்கும் மருந்தானது சரீர முழுமையும் விஷத்தைப்பரவச் செய்து வியாதியைச் சொஸ்தப்படுத்துகின்றது. ஆஞல், தற்சமயம்குறித்த வியாதி சொஸ்தமாய்விட்டாலும் பிறகு வேறுவித வியாதிகளை உண்டு பண்ணுவதற்கு மேற்படி வியாதியின் நிவாரணமருந்தே காரணமாய் இருப்பதோடு அந்தந்த அவயவங்களின் சக்தியைக் குறைத்து ஆயுள் க்ஷீணத்தை யுண்டுபண்ணுவதற்கும் ஏதுவாயிருக்கின்றது. வைத்தியர்களும் மருந்துகளும் அதிகமாய் இல்லாத காலங்களில் வியாதிகளும் மரணமும் ஸ்வல்பமாய் இருந்தன. இப்பொழுது வைத்தியர்களும் மருந்துகளும் அதிகமாய்விட்டபடியால் தான் வியாதிகளும் மரணமும் அதிகமாய்விட்டன."

புராதன காலமாய் நம்முன்ஞேர்கள் மலிவானதாயினும், தேகரோக்யத்தைக் கொடுக்கும் குணத்தையுடைய ஆகாரங்களை உபயோகிப்பதை விட்டு அந்நிய நாடுகளிலிருந்து இரத்த விருத்தி, ஜீர்ணசக்தி, முதலிய குணங்களையுடையன என்று பிரசுரப்படுத்தியுள்ள மருந்துகளை கையாடுவதே ஆயுள் க்ஷீணமடையக்காரணமென்று முதலியார் வற்புறுத்துகிருர். அவர் கேழ்வரகை நம்மவர்கள் சாப்பிடுவது கேவலமெனத் தள்ளியிருப்பதை மடமை யென்கிருர். மைஸூர், கஞ்சம், விசாகபட்டணம் முதலிய ஊர்களிலிருப்பவர்கள் கேழ்வரகு ஆகாரத்தைச்சாப்பிட்டு அரிசியோ மேற்கூறிய செயற்கை உணவுகளோ சாப்பிடுகிறவர்களைக்காட்டிலும் தேகதிடமுள்ளவர்களாயிருப்பதை உதாரண மெடுத்துக்காட்டுகிருர்.

அவர், "நீர்ப்பையின் தோஷங்கள், க்ஷயம், கணச்சூடு, மலமந்தம், மூலம், நீரிழிவு முதலிய வியாதிகளை நீக்குவதாயும், ரத்தவிருத்தி செய்வதாயும் சீக்கிரத்தில் ஜீரணமாகும்படியானதாயு முள்ளதும், நமது புராதீனர்கள் உபயோகித்து வந்ததுமானகேழ்வரகை விட்டுவிட்டபடியால் நமக்கு மேற்சொன்ன வியாதிகள் சாதாரணமாய்விட்டன" என்றும்,

“ இதைக் கண்ணுறும் ஒவ்வொருவரும் கேழ்வரகின் மேல்ஆடைகளை நன்றாய்ச்சுத்தம்செய்து 7 தரம் வடிகட்டி சுத்தம் செய்தமாவை 2,3,ஸ்பூன் எடுத்துச் சலத்தில் 1 மணிநேரம் ஊறவைத்துப் பிறகு அடுப்பிலேற்றி ஒரு கொதிவந்த உடன் எடுத்துக்கொண்டு அதில் பால் சர்க்கரை சேர்த்துக் காலை மாலைகளில் சாப்பிட்டு வரவேண்டும். அவ்வாறு செய்பவர்களுக்கு அதன் சிறந்தகுணம், 10-தினத்தில் நன்குவிளங்கும்” என்றும்கூறி தம் வ்யாஸத்தை முடிக்கிறார்.

## Character Training.

**யோக்யதைப்பயிற்சி.**—கொஞ்சகாலத்துக்குமுன் வேலூர் மஹந்த் ஹைஸ்கூலில் வருஷாந்தப் பரிசளிப்புக் கொண்டாடத்தில் தலைமை வகித்த ஆனரபில் டி. வி. சேஷகிரி ஐயர், ஸ்கூல் பிள்ளைகளுக்கு அருமையான உபந்யாஸ மொன்று செய்தார். அந்த ஸமயத்தில் அவர் பிள்ளைகளுக்கு புத்திசாலித்தனத்தைக் காட்டிலும் யோக்யதை அவச்யம் என்று சொன்னார். யோக்யதை என்பதென்ன? ஒருவன் ஸத்யம், உறுதி, ஆபத்தில் தைர்யம், அந்நியரைக் கட்டி நிர்வகித்தல் ஆகிய ஸத்குணங்களில் பழகுவதாகும். ஒருவன் மனப்பயிற்சியால் விசேஷமாய் நூல்களைப்படித்தறிந்திருக்கலாமாயினும், அவனிடத்தில் மேற்கண்ட குணங்களில்லையானால் ஜனஸமூகத்துக்கு அவன் ப்ரயோஜனமில்லாதவனாகிறான். இந்தியர்களுக்கு இந்த குணங்களில்லையென்று சில ஆங்கிலேயர்கள் பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் முன்பாக சாக்ஷி சொன்னார்கள். இதுமுற்றிலும் உண்மையாகாது. என்றாலும், ஸ்கூல்பிள்ளைகளுக்கு யோக்யதைப்பயிற்சியில் எவ்வளவு ச்ரத்தையும் அக்கரையும் நாம் எடுத்துக்கொண்டாலும் அவ்வளவும் நல்லதே.

யோக்யதைப்பயிற்சி அவச்யமென்றேற்பட்டு விட்டது. அந்தப்பயிற்சியை எப்படி கொடுப்பது என்பது அடுத்தகேள்வி. இது மதபோதனையாலே மட்டும் ஸாத்யம். ஒருவன் தன் சரீர ஸௌகத்தை அசட்டைசெய்து தன் கடமையை மனப் பூர்வமாய் பலனைக்கருதாது செய்யவேண்டுமென்று போதிக்கும் மதம் இந்து மதம்தான்; வேறொன்றில்லை. ஒருவன் கடமையைச் செலுத்துவதில் ப்ராணாபத்து நேரிட்டாலும், கீர்த்தியோ அபகீர்த்தியோ எது உண்டானாலும், ஒருவன் தன்கடமையைச்செய்து முடிக்கவேண்டும் என்று இந்துமதம் போதிக்கிறது. இந்த மதஸ்தர்களாகிய நாம் ஆபத்தைக் கண்டுபயந்து ஒடி ஒளிந்துக்கொள்வது ஆரியர்களாகியநமக்கு லக்ஷணமல்லவென்று சேஷகிரி ஐயர் சொன்னார். சரீரஸௌகத்தை அலக்ஷியம் செய்வதென்றால் சரீரப்பயிற்சியை விட்டுவிடவேண்டுமென்பது கருத்தல்ல. சரீரம் நோயின்றி திடமாயிராவிட்டால் உத்தம குணங்கள்உண்டாவது கஷ்டம். உண்மையில் இந்த குணங்களுக்கு சரீர ஸௌகமும் திடனும் ஆதாரம். ஆகையால் தேகப்பயிற்சி மிகவும் அவச்யம். பிள்ளைகளை வெளியில் விளையாடப்போக விடாமல் தடுத்து ஸதாகாலமும் புஸ்தகமும் கையுமாயிருக்கும்படி நிர்ப்பந்திக்கும் பெற்றோர்கள் முன்போல அவ்வளவுபேர் தற்காலமில்லை. பெற்றோர்கள் பிள்ளைகளின் நன்மையை அறிந்தவர்களாய் இடையூறு செய்யாமல் ஸாதகமாயிருந்து வருவது ஸந்தோஷப்படத்தக்கதொரு விஷயம். தேசப்பயிற்சியை அலக்ஷ்யம் செய்வதே படித்த வகுப்பாருள் நேரிடும் அல்பாயுள்மரணங்களுக்குக் காரணம். இத்துடன் நம்மவர்கள் சிறுவயதிலேயே நோய்நொடிகளுக்கிரையாவது பால்ய விவாகத்தாலென்றறிய வேண்டும். இவர்கள் ஒரு கட்சியாய் சேர்ந்துஸொஸைடிகள் ஸ்தாபித்து வாலிபபருவத்தில் கல்யாணம்செய்து கொள்வதில்லையென்று சபதம்செய்து கொள்ளவேண்டும். இப்படியிருந்தால் மட்டுமே யோக்யதைப் பயிற்சி பெற அருகராவார்கள். நல்ல திடஸௌக சரீரமில்லாமலிருந்தால் யோக்யதைப் பயிற்சி பெறுவது எங்கே? சுவர்வைத்துக்கொண்டல்லவா சித்ரம் எழுதவேண்டும்?

## Tamil Dictionary and Pronunciation.

**தமிழ் அகராதியும், சப்தத்திற்கேற்ற உச்சாரணமும்:**—பால இலக்கணப்போப்பையரை நமக்கெல்லாம் தெரியும். இவரால் ஆரம்பம் செய்யப்பெற்ற தமிழ் அகராதியை ஸம்பூர்த்தி செய்ய, கவர்ன்மெண்டார்ஒரு லக்ஷம் ரூபாய் க்ராண்ட்கொடுத்து வேலையைச் செய்ய ஒரு கமிட்டி நியமித்திருக்கிற விஷயமும், நம் பத்ரிகையை வாசிப்பவர்களுக்குத் தெரிந்ததே.

ஒரு பாஷையை பேசுவதுபோலவே எழுதுவதாயிருந்தால் அதனால் அனேக அனுகூலங்களிருக்கின்றன. இங்லீஷ் பாஷையில் உச்சாரணத்தைப் போலவே வார்த்தைகள் எழுதப்படுவதில்லை. ஆங்கில பாஷையிலுள்ள இவ்வேறு பாட்டை ஒழித்துவிட பலமான முயற்சி இப்பொழுது செய்யப்பட்டு வருகிறது. பாஷாபிவ்ருத்தி முகத்தில் இத்தகைய சீர்திருத்தங்கள் இன்றியமையாதன வென்று பல பாஷா பண்டிதர்கள் அபிப்ராயப்படுகிறார்கள். தமிழ் அகராதியில் ச்ரத்தையுள்ள ஒருவர்இந்தசீர்திருத்தத்தைதமிழ் அகராதியில் அனுஸரிக்கவேண்டுமென்று சொல்கிறார்.

# BOYS' SECTION.

## பையன்கள் பகுதி.

### Answers to the Puzzles.

**புதிர்களுக்குவிடைகள்.**—சென்ற மாஸம் ப்ரசுரித்திருந்த புதிர்களுச்கு அநேகர் விடை யெழுதியனுப்பியிருக்கிறார்கள். அவர்களில் மிஸ்டர் எ. ராமராவ் எழுதின விடை ஸரியாக விருந்ததோடு முதலில் கிடைத்தது. நாவலின் ப்ரதி ஒன்று அவருக்கு அனுப்பிவிட்டோம்.

சென்ற மாஸம் ப்ரசுரித்திருந்த புதிர்களும், விபந்தனைகளும் பின்வருமாறு;

1. 45 என்னும் எண்ணை 4-பாகமாகப்பிரிக்க வேண்டும். முதல் பாகத்தோடு 2-ஐக்கூட்டினால் 10-விடையாக வரவேண்டும். 2-வது பாகத்திலிருந்து 2-ஐ க்கழித்தால் 10-விடையாக வரவேண்டும். 3-வது பாகத்தை 2-ஆல் பெருக்கினாலும்; 4-வது பாகத்தை 2-ல் வகுத்தாலும் 10-தான் விடையாக வரவேண்டும்.

2. 225-ஐ சிலபாகங்களாகப் பிரிக்கவேண்டும். எத்தனை பாகமாகப்பிரித்தாலும் பாதகமில்லை. ஆனால் அவைகளில் ஒன்றுமுதல் ஒன்பது வரையில் உள்ள ஒன்பது எண்களும்வந்திருக்கவேண்டும். ஒருதடவை வந்த எண் மறுபடியும் வரக்கூடாது.

இந்த இரண்டுகணக்குகளுக்கும் ஸரியான விடைகளை யார் முதலில் எழுதியனுப்புகிறாரோ அவருக்கு 'வேலையின் கூலி' என்னும் நாவலின் ப்ரதி ஒன்று இனமாக அனுப்பப்படும்.

விடைகள் பின்வருமாறு:—

45-ன் நான்கு பாகங்கள்.

| | | |
|---|---|---|
| முதலாவது. | 8, | (8+2) = 10 |
| இரண்டாவது. | 12 | (12 − 2) = 10 |
| மூன்றாவது | 5 | (5 × 2) = 10 |
| நான்காவது | 20 | (20 ÷ 2) = 10 |
| | 45 | |

225-ன் பாகங்கள்.

(1) 1, +23, +45, +67, +89 ;
(2) 12+43+65+7+98 ;
(3) 198+7+6+5+4+3+2 ;
(4) 81+76+39+25+4
(5) 1+2+7+53+64+98
(6) 1+24+35+67+98
(7) 1+32+49+68+75
(8) 1+43+65+87+29
(9) 1+2+9+56+74+83
(10) 9+31+42+56+87
(11) 9+24+35+71+86
(12) 6+8+35+49+127
(13) 6+18+35+72+94
(14) 9+21+43+65+87

& &c.

### Working Out Interest.

**வட்டிகணக்கிடுதல்.**—100-க்கு $1\frac{1}{4}$வட்டி வீதம் 120 ரூபாய்க்கு ஒரு வருஷம்10மாஸத்தில் கூடுதலான முதலும் வட்டியும் சேர்ந்துஎவ்வளவு ? அதே தொகைக்கு 25 நாளைக்கு வட்டியும் முதலும் சேர்ந்து எவ்வளவாகும்.

வாங்கின ரூபாயின் மொத்தத்துக்கும் வட்டித் தொகைக்கும் நின்ற மாஸத்தின் மொத்தத்துக்கும் முறையே பெருக்கி வரும் பலனை நூறால் வகுக்க வரும் ஈவுதான் மாதவட்டி.

| வாங்கின ரூபாய் | பேசிய வட்டி | மாதம் | இவைகளுக்கு பெருக்கியராசி | வகுக்கும் எண் |
|---|---|---|---|---|
| 120 × | $1\frac{1}{4}$ × | 202 = | 3300 ÷ | 100 = |

| விடை அல்லது மொத்தவட்டி | ஆக வட்டியும் முதலும் |
|---|---|
| 33 | 120 + 33 = 153 |

வாங்கின ரூபாய், வட்டி, நின்ற நாள் இம்மூன்றையும் முறையே பெருக்கி, வரும் பலனை மூவாயிரத்திற்குக் கொடுக்க வரும் ஈவுதான் நாள்வட்டி.

| வாங்கின ரூபாய் | வட்டி | நின்ற நாள் | வந்தராசி | வகுக்கும் எண் |
|---|---|---|---|---|
| 120 × | $1\frac{1}{4}$ × | 25 = | 3750 ÷ | 3000 = |

| விடை அல்லது வந்தவட்டிரூ. | ஆக வட்டியும் முதலும் |
|---|---|
| $1\frac{1}{4}$ | 120 + $1\frac{1}{4}$ + $121\frac{1}{4}$ |

### Wireless Telegraph Stations.

**தந்திக்கம்பிகளில்லாத தந்திஆபீஸுகள்:**—தந்திக் கம்பிகள் போடப்படாமலே தந்திஸமாசாரம் அனுப்புவதற்கு ஆபீஸுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவென்று பத்ரிகைகள்வாசிப்பவர்கள் அறிந்துகொண்டிருக்கக்கூடும். உலகத்திலுள்ள துறைமுகப் பட்டணங்களில் 375 துறைமுகங்களில் தந்திக்கம்பிகளற்ற தந்தி ஆபீஸுகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்

றன. இவற்றுள் யுனைடட் ஸ்டேட்ஸில் 142, க்ரேட் ப்ரிட்டன் 43, கனடா 33, ஜர்மனியும் குடியேற்ற நாடுகளும் 22, இட்டாலி 19, ருஷ்யா 19, ப்ரான்சு 17, ஸ்பேயின் 10, டென்மார்க் 9. ப்ரான்சு குடியேற்ற நாடுகளிலும் ப்ரிடிஷ் குடியேற்ற நாடுகளிலும் இம்மாதிரி ஆபீசுகள் அநேகம் இருக்கின்றன. யுத்தக் கப்பல்களிலும் கம்பியில்லாத தந்தி ஏற்பாடு அமைக்கப்பட்டிருக்கிறது.

## Indian Post Office.

இந்திய போஸ்டாபீஸ் டிபார்ட்மெண்டு:—இந்தியா போஸ்டாபீஸ் டிபார்ட்மெண்டினுடைய 1911-12 வருஷத்து ரிபோர்ட்டால் பின் வரும் விஷயங்கள் தெரியவருகின்றன. 1911-12-ம் வருஷக்கடைசியில் போஸ்டாபீஸ் ஸிப்பந்திகள் 92,755 பேர் இருந்தார்கள். 18,801 போஸ்டாபீஸ்கள் வேலை செய்து கொண்டிருந்தன. தபால்கொண்டு போகப்படும் இடங்களின் மொத்தம் தூரம் 1,53,395 மைலாகும். அந்த வருஷத்தில் 96 கோடியே 55 லக்ஷம் கடிதங்கள் ஸாமான் முதலியவைகள் தபால்மூலமாய் கொண்டுபோய்க்கொடுக்கப்பட்டன. அவைகளில் 220 லக்ஷம் ரெஜிஸ்டர் செய்யப்பட்டவை. 255 லக்ஷம் ரூபாய்க்கு ஸ்டாம்புகள் விற்கப்பட்டன. 272½ லக்ஷம் மணியார்டர்கள் கொண்டு போகப்பட்டன. அவைகளின் மொத்தமதிப்பு கிட்டத்தட்ட 48 கோடியே 75 லக்ஷம் ரூபாயாகும். வால்யூபேயபில் ஏற்பாட்டால் வ்யாபாரிகளுக்காகவும் மற்றவர்களுக்காகவும் வஸூலிக்கப்பட்டதொகை கிட்டத்தட்ட 9½ கோடி ரூபாயாகும், இன்ஷ்யூர் செய்யப்பட்ட ஸாமான்கள் 17½ லக்ஷத்துக்கும் அதிகமாம். அவைகளுக்கு இன்ஷ்யூர் செய்த தொகையின் மொத்த மதிப்பு கிட்டத்தட்ட 47 கோடியே 62½ லக்ஷம் ரூபாயாம். ஆனால் இன்ஷ்யூர் செய்ததற்கு நஷ்ட ஈடாகக் கொடுக்கப்பட்ட தொகையோ 16,365 ரூபாய்தான். சேனையிலிருந்து நீங்கிப்பென்ஷன் வாங்கும் ஸ்வதேசிகளுக்கு 27,51,000 ரூபாய் பென்ஷன் பட்வாடா செய்யப்பட்டது. வெளிதேசங்களிலிருந்து வரும் பார்ஸல்களுக்கும் கடிதங்களுக்கும் வரியாக, போஸ்டாபீஸ் செலவில், 8,15,625 ரூபாய் வஸூலிக்கப்பட்டது. 9,562 ராத்தல் நிறையுள்ள குவினைன் ஜனங்களுக்கு விற்கப்பட்டது. போஸ்டாபீஸின் மேம்பார்வையிலுள்ள தந்தி ஆபீஸுகள் மூலமாய் 76½ லக்ஷம் தந்திகளுக்கு மேல் அனுப்பப்பட்டன. இந்தத் தந்திகள் அனுப்புவதால் கிடைத்த வருமானம் 42,09,540 ரூபாயாகும். இந்த ஆபீஸ்களுக்காக ஏற்பட்ட செலவு 13,31,670 ரூபாயாகும். 1912-ம் வருஷம் மார்ச்சு மாஸம் 31 தேதியன்று போஸ்டாபீஸில் 1,500,834 ஸேவிங்க்ஸ் பாங்கிக்கணக்குகள் இருந்தன. இந்தக்கணக்குகளின் மொத்தக்கையிருப்புத் தொகை 18 கோடியே 75 லக்ஷம் ரூபாய்க்கு மேலாகும். போஸ்டாபீஸ், டெலெக்ராப்டிபார்ட்மெண்டின் அக்கௌண்டண்ட் ஜெனரல் வசம் 7757295 ரூபாய் மதிப்புள்ள கவர்ன்மெண்ட் ப்ராமிஸரி நோட்டுகள் இருந்தன. அந்த வருஷம் 22,075 போஸ்டல் லைப் இன்ஷ்யூரென்ஸ் பாலிஸிகள் கொடுக்கப்பட்டன. அவைகளுக்குப் பின்னால் கொடுக்கப்படவேண்டிய தொகையின்மொத்தமதிப்பு 3,03,37,830 ரூபாய். இந்த டிபார்ட்மெண்டின் வரும்படி 3,23,88,000 ரூபாய் செலவு 3,08,90,340 ரூ. அந்த வருஷத்தில் லண்டனிலிருந்து பம்பாய்க்குத் தபால்வருவதற்குப்பிடித்த குறைந்த காலம் 13 நாள் 5 மணி 45 நிமிஷமாம். ஸராஸரியில் அந்த வருஷத்தில் 13 நாள் 9 மணி 35 நிமிஷம் ஆயிற்று. பம்பாயிலிருந்து லண்டனுக்குப் போகக் குறைந்தது 12 நாள் 22 மணி 45 நிமிஷமும், ஸராஸரியில் அந்த வருஷத்தில் 13 நாள் 9 மணி 10 நிமிஷமும் பிடித்தது.

## Triads.

த்ரயம்.

விரும்பத்தக்கன மூன்று விஷயங்களாவன:—தைர்யம், சாந்தம், அன்பு.

வியக்கத்தக்கன—புத்தியின்வலிமை, பெருமை, காருண்யம்.

அருவருக்கத்தக்கன—குரூரம், கர்வம், செய்நன்றிகொல்லல்.

விலக்கத்தக்கன—இழிவு, நடிப்பு, பொறாமை.

மதிக்கத்தக்கன—தெய்வ பக்தி, நீதி, ஸ்வயநலம் பாராட்டாமை.

இனிமை தரத்தக்கன—ஸௌந்தர்யம், கபடின்மை, ஸ்வயேச்சை.

எண்ணத்தக்கன—ஞானம், சாந்தம், சித்தசுத்தி.

இச்சிக்கத்தக்கன—மகிழ்ச்சி, நற்குணம், மனஸ்த்ருப்தி.

ஸந்தேகிக்கத்தக்கன—வஞ்சப்புகழ்ச்சி, வஞ்சனை, காரணமற்ற அன்பு.

தடுக்கத்தக்கன—சோம்பல், குதர்க்கம், புத்தியற்ற பரிஹஸிப்பு.

வ்ருத்தி செய்யத்தக்கன—நல்ல புஸ்தகங்கள், நல்ல நண்பர்கள், நற்செய்கைகள்.

முயன்று அடையத்தக்கன—புகழ், தேசம், ஸ்நேகிதர்கள்.

அடக்கவேண்டுவன—குணம், வீண் உத்ஸாகம், நாக்கு.

எதிர்பார்க்கவேண்டியவை—துக்கம், அழிவு, மரணம்.—இந்து நேசனில் ஒரு நிருபர்.

# LADIES' SECTION.
## ஸ்த்ரீகள் பகுதி.

### Women Teachers' Union.

ஸ்த்ரீ உபாத்யாயர்கள் ஸங்கம்.—சென்ற மாஸம் சென்னையிலுள்ள ஸ்த்ரீ உபாத்யாயர்கள் பலர் ஒன்று கூடி ஒரு ஸங்கம் ஸ்தாபித்தார்கள். ஐரோப்பிய ஸ்த்ரீ உபாத்யாயர்களும் இங்க்லீஷ் பேசும் இந்திய ஸ்த்ரீ உபாத்யாயர்களும் இந்த ஸங்கத்தில் சேரலாம். மாஸந்தோறும் ப்ரஸங்கங்கள் நடப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும்.

### Milkmen's Frauds.

பால்காரர்களின் பித்தலாட்டங்கள்.—மற்ற வ்யாபாரங்களில் நடப்பது போலவே பால் வ்யாபாரத்திலும் ரொம்பப் பித்தலாட்டங்கள் நடக்கின்றன. பால்காரர்கள் அநேக உபாயங்களைக்கையாடி பால் வாங்குபவர்களை மோசம் செய்கிறார்கள். ஸமீபத்தில் ஒரு நிரூபர் பால்காரர்களின் பித்தலாட்டங்களில் தாம் நேரிடையாக அறிந்த வற்றை ஒரு பத்ரிகைக்கு எழுதியிருக்கிறார். அநேக வீடுகளில் வேலைக்காரர்கள் பால்காரனிடமிருந்து பால் வாங்கி வருவதாயிருந்தால், பால்காரர்கள் வேலைக்காரர்களுக்கு லஞ்சம் கொடுத்து அவர்களைத் தம் வசப்படுத்தி நீர் கலந்த பாலைக்கொடுத்துவீட்டுக்காரர்களை ஏமாற்றி விடுகிறார்கள். வீட்டுக்காரர்களும் வேலைக்காரர்களை நம்பி சும்மா இருந்து விடுகிறார்கள் என்று தோன்றுகிறது. ஷை நிரூபர் இதை யறிந்துகொண்டு, தாமே பக்கத்திலிருந்து பால் கறக்கச்சொல்லவே பால்காரன் முதல் நாள் ஏமாற்ற முடியவில்லை. மறுநாள் காலையில் பால்காரன் ஸாமர்த்யமாய் ஏமாற்றிவிட்டான். தனக்குத் தெரிந்த ஒருவனைத் தன்னிடம் பால் வாங்க வரும்படி செய்து, அவன் பால் வாங்கக் கொண்டு வரும் பாத்ரத்தில் ஒருவருக்கும் தெரியாமல் ஜலம் கொண்டு வந்து அதில் பால் ஊற்றும்படி சொல்ல, பால்காரன் பால் ஊற்றினான். பின்னும் கொசுறு கேட்க பால்காரன் மறுக்கவே பால் வாங்க வந்தவன் அப்படியானால் பால் வேண்டியதில்லை என்று தன் பாத்ரத்திலுள்ள ஜலங் கலந்த பாலை பால்காரன் பாத்ரத்தில் ஊற்றி இப்படியாக பாலில் ஜலம் கலந்து விட்டான். இந்த மோசத்தை நிரூபர் கண்டுபிடித்துவிடவே சில நாட்களுக்குப் பிறகு பால்காரன் தனது மாடு மிரளுகிறதென்றும் அதன் கன்றை மாட்டுக்கு முன் ஒருவர் பிடித்துக்கொண்டிருக்க வேண்டுமென்றும் சொல்லி தனக்குத் தெரிந்த ஒருவனை அப்படியே கன்றுக் குட்டியைப் பிடித்துக் கொண்டிருக்கச் செய்தான். கன்றுக் குட்டியைப் பிடித்துக்கொண்டிருப்பவன், நிரூபருடைய கவனத்தைப் பேச்சால் மாற்றி தான் கொண்டுவந்த ஜலமுள்ள ஒரு நீண்ட தகரக்குவளையை பால்காரனிடம் கொடுத்து ஜலத்தைக் கலக்கும்படி செய்துவிட்டான். இதையும் நிரூபர் கண்டுபிடித்துவிடவே பால்காரன் சில நாட்களுக்குப் பிறகு தனது அடிவயிற்றில் நோவுண்டாகிறதென்றும் அதற்காக மருந்து வைத்துக் கட்டியிருக்கிறதென்றும் காட்டி மறு நாள் அதில் ஒரு சிறு சொம்பை ஜலத்துடன் வைத்துக் கட்டி மேலே போர்த்திக் கொண்டு பால் கறந்து கொண்டே, அடிவயிறு வலிப்பதால் அதைத் தொடுவது போல் பாசாங்கு செய்து ஜலத்தைக்கலந்து விட்டான். இதையும் நிரூபர் கண்டு பிடித்து விட்டார். உண்மையில் பால்காரர்கள் ரொம்ப ஸாமர்த்யம் வாய்ந்தவர்களே! இவர்கள் செய்யும் பித்தலாட்டத்திற்குள்ளாகாமல் தப்புகிறவர்கள் ரொம்ப ஸ்வல்பந்தான்.

### Mother's Advice to Daughter.

பெண்ணுக்குத் தாயின் புத்திமதி.—ஜப்பானில் ஒரு ஸ்த்ரீ தன் பெண்ணுக்கு கல்யாண முகூர்த்த ஸமயத்தில் அடியில் கண்ட பத்து புத்தி மதிகளைச் சொல்வது வழக்கமாம். இந்த புத்திமதிகளின்படி நடக்காத பெண்களை ஜனங்கள் இழிவாகப் பேசுவார்களாம்.

(1) விவாகமான நிமிஷ முதல் நீ எங்கள் பெண்ணல்ல. இனி உனக்குத்தாயும் தந்தையும் உன் மாமியாரும் மாமனாரும். இது கால பரியந்தம் எங்களுக்கு எப்படி நீ கீழ்ப்படிந்து நடந்து வந்தாயோ, அப்படியே இனிமேல் அவர்கள் சாலாவிடும் வேலையைக் கையால் செய்யவேண்டும். எள்ளென்பதற்கு முன் எண்ணெயாய் நீ நடந்து கொள்ளவேண்டும். உன் மாமியாரிடத்தில் பக்ஷமாயிரு.

(2) மனைவியின் மேலான ஆபாரணம் கணவன் சொல்படி நடத்தலாம். உன் கணவன்தான் உன் எஜமானன். அவன் ஏவல்களை பக்தியோடு ச்ரத்தையாய் செய்.

3. வீண்பெருமை பாராட்டாதே. தற்பெருமையால் உன்கணவனுக்கு உன்னிடமுள்ள ஆசை குறையும்.

4. கணவன் முன் கடுமையாய்ப் பேசாதே. அவன் உத்திரவுக்கு அட்டி சொல்லாதே.பொறுமை உனக்கு பூஷணமாயிருக்கட்டும்."பொறுத்தார் பூமியாள்வார்." சொல்லவேண்டியதை ஸமயமறிந்து நயமாய்ச்சொல்.

5. வாயாடி என்று பேரெடுக்காதே. அதிகம் பேசுகிறவள் அரைக்காசுச்குக்கூட உதவமாட்டாள்.பேச்சு அதிகரித்தால் பொய் தானுகவே நுழைந்து கொள்ளும்.

6. ஜோஸ்யப்பித்துள்ளவளாயிராதே. சகுனம் பார்க்காதே. உனக்கு நீசத்ருவாகிருய்.

7. க்ரஹக்ருத்யங்களை ஸரியாய்ச் செய். வரவுக்குத் தகுந்தபடி செலவு செய்.

8. உன் தாய் வீட்டுக்காரர் பணக்காரராயிருக்கிறார்களென்று அகங்காரங்கொள்ளாதே. புக்ககத்தாரையாவது, அவர்கள் ஸொந்தக்காரரையாவது கேவலமாய்ப் பேசாதே. தாய் வீட்டைப் பற்றி வீண் பெருமை பாராட்டிக் கொள்ளாதே.

9. வலுவில் வந்தாலும் வாலிபர் ஸ்நேகம் உனக்கு ஆகாது.

10. வர்ணமான உடைகளை உடுக்க ஆசைப்படாதே. எப்பொழுதும் சுத்தமான ஆடையை உடுத்துக் கொள்.

**Sale of Marriageable Girls.**

கல்யாணப்பெண் விற்பனை.—கபோல் பானிய ஜாதியாரில் கல்யாண வயதுள்ள பெண்களை ஏலம் போடுகிருர்களாம். யார் அதிகத்தொகை கொடுக்கிருர்களோ, அவர்களிடமிருந்து பணத்தைப்பெற்ருேர் பெற்றுக்கொண்டு கல்யாணம் செய்து கொடுக்கும் கொடியவழக்கம் அதிகமாய்க் கொண்டுவருகிறது. இதை முளையிலேயே கிள்ளிவிட வேண்டுமென்று முயர்சி பலமாயிருக்கிறது. ஸமீபத்தில் ஆனரபில் மிஸ்டர் மனமோஹன ரம்ஜி அவர்கள் அக்ராஸனம் வகித்து ஒருமீட்டிங்கில் இவ்விஷயம் பேசப்பட்டு தீர்மானங்கள் செய்யப்பட்டன.

**An Appeal to Indian Women.**

இந்திய ஸ்திரீகளுக்கோர் விஞ்ஞாபனம்.—நமது தேசத்தில் 2-வயதுமுதல் 5-வயதுக்குட்பட்ட குழந்தைகளின் மரணம் 1911-வது வருஷத்து ஸென்ஸஸ் கணக்குப்படி 100-க்கு 46-ஆக இருக்கிறது. இதற்கு முக்ய காரணம் பால்கொடுக்கும் கால்நடைகள் போதாமையும் அவைகள் க்ஷீணமடைந்து வருவதுமே. ஆகையால் கால்நடைகள் வ்ருத்தியாகவேண்டியவழிகளை அனுஷ்டிக்கவும், குழந்தைமரணங்களைக் குறைக்கவும், முயலவேண்டிய அவச்யத்தைப்பற்றி பம்பாய் மாகாணவாஸியாகிய பார்ஸிகனவான் கே. எஸ். ஜஸ்ஸவாலாவின் மனைவி, இந்திய ஸ்திரீகளின் ப்ரதிநிதிகள் இங்கிலாந்துச்கு சென்று மஹாசக்ரவர்த்தினியை பேட்டிகண்டு அனுதாபத்தைக் கோறவேண்டுமென்று பத்ரிகைகளுக்கு எழுதியிருக்கிருர். இந்தியாவிலிருந்து ஸ்திரீ டெபுடேஷன் ஒன்று சக்ரவர்த்தினியைக் கண்டுசொள்வதற்காக வந்தால், இங்கிலாந்திலுள்ள செல்வாக்குள்ள ஸ்திரீகள் அநேகர் அந்த டெபுடேஷனுக்கு வேண்டிய உதவியைச் செய்து பேட்டி கண்டுகொள்ள வஸதிகளைச் செய்ய ப்ரியமுள்ளவர்களாக இருக்கிருர்களாம். அந்த மாது தாம் பார்ஸிஸ்திரீகளின் ப்ரதிநிதியாக இருப்பதால் இந்தியாவிலிருந்து ஸங்கங்கள்கூடி ஒரு இந்து ஸ்திரீயையும் ஒருமகம்மதிய ஸ்திரீயையும் ப்ரதிநிதிகளாக தேர்ந்தெடுத்து அனுப்பும்படியாகவும் கோறுகிருர்.

**Maids of Honour to the Queen of England.**

இங்கிலாந்தரசியின் பாங்கிமார்கள்.—இங்கிலாந்தரசியின் பாங்கிமார்களுக்கு 'கனம்' (ஆனரபில்) என்ற பட்டம் ஆயுள்பரியந்தம் தரிக்க அதிகாரம் கொடுக்சப்பட்டிருக்கிறது. பாங்கி ஒருத்திச்கு மாதமொன்றுக்கு பவுன் 375 சம்பளம். அரசிச்குவரும் கடிதங்களுக்குப் பதிலெழுதுவதும், இதர குமஸ்தாவேலையும் யாத்ரை போகும்பொழுது கூடச்செல்வதும், விருந்துகளுக்குக்கூட இருந்து நடத்திவைப்பதும் பாங்கிகளின் வேலைகளாம். 'ராயல் டீ பார்டி' என்னும் இராஜாங்க விருந்து ஸமயங்களில் இவர்கள் ரூபாய் 150-லிருந்து 750 ரூபாய்வரை பெறுமான புதிய உடைகள் தரிக்க வேண்டும். இவர்களுக்குக் கல்யாணமாகும்போது ரூ. 15,000 நன்கொடை கொடுக்கப்படுகிறது. பாங்கி வேலையிலிருந்து நீங்கும்பொழுது இவர்களுக்கு சம்பளத்தில் மூன்றில் இரண்டுபங்கு உபகாரச் சம்பளம் கிடைக்கிறது.

# AGRICULTURE.
## விவஸாயம்.

### Different Manures.

பல எருக்கள்:—போனவருஷம் செய்த சம்பாப் பயிர்களில் சடம்புவிதைத்து மடக்கி உழுததில் ஏகருக்குத் தற்கால நெல்விலைப்படி செலவுபோக 94 ரூபாயும், நாட்டு எருப்போட்டதில் 80 ரூபாயும், வேர்க்கடலைப் பிண்ணுக்கு உரம் போட்டதில் 90 ரூபாயும், மீன் உரம் போட்டதில் 75 ரூபாயும் கிடைத்தது என்று "கிருஷிகன்" பத்ரிகையில் ஒருவர் தெரிவிக்கிறார்.

### Cucumber.

வெள்ளரி.—தேனும் பாலும் ஸரிபங்காகக் கலந்து அதிலே இப்பயிரின் விதையை ஆறுமணிநேரம் நனையவைத்தெடுத்து, பின்பு அதை நிழலிலே உலர்த்தி, பின்னும் இருமுறை அப்படிச்செய்து, ஒருமுழ அகலம் ஒருமுழ நீளம் ஒருமுழத் தாழ்வுள்ள கிடங்கைவெட்டி, அதிலே தழை எருப்போட்டு மிதித்து மண்ணால் மூடி அதிலே நட, காய்கள் நட்ட விதையின் தாய்க் கொடியிலுள்ள காயைவிட பருத்ததாகக் காய்ப்பது மன்றி ருசியிலும் ரொம்ப மேன்மையானவையாக இருக்கின்றனவாம்.

### Deep Ploughing.

ஆழ உழுதல்.—நிலத்தை ஆழஉழுது நன்றாய் பண்படுத்துவதனால் நிலத்திலுள்ள களைப்பூண்டுகள் அதிகரிக்காமல் அழிந்து போகின்றன. இது அநேகருக்குத் தெரிந்த விஷயம். இதற்குப்பலகாரணங்கள் இருக்கின்றன.

(1) சில களைகளின் விதைகள் பூமிக்குள் நன்றாய் புதைக்கப்பட்டுப்போனால் அவைகள் அழுகிப்போய் விடுகின்றன.

(2) உழுவதனால் அநேக களைப்பூண்டுகள் தலையெடுக்காமல் அழிந்து போகின்றன.

(3) நன்றாய் உழுது பண்படுத்தின நிலத்தில் களைப்பூண்டுகளின் விதைகள் சீக்ரம் முளைத்து விடுவதால் அவைகளைக் களைக்கொட்டு, முள் பலுவு, முதலிய கருவிகளைக் கொண்டு அப்புறப்படுத்துவது எளிதாகும்.

(4) நன்றாய் உழுத நிலத்தில் பயிரிடப்படும் பயிர் வெகு செழுமையாய் வளருவதால் அதன்முன் களைகள் தலையெடுப்பது அரிதாகிவிடுகிறது.

(5) இப்படிக்களைகளை எடுத்த பயிரிலிருந்து கிடைக்கும் தான்யத்திலும் களைகளின் விதைகள் அதிகம் இருப்பதில்லை.

### Cost of Cotton Production.

பருத்தி ஸாகுபடிக்குப் பிடிக்கும் செலவு.—ஒரு ஜெர்மானியர் பருத்தி ஸாகுபடி ஸம்பந்தமாய் ஒரு புதிய முறை கண்டு பிடித்திருக்கிறார். அந்த நூதன முறையால் பருத்தி ஸாகுபடியில் ஏற்படும் செலவு பாதிக்குக் குறைந்து விடுமாம். அவர் அந்த நூதன முறையை ஜெர்மெனியில் பேடெண்டு செய்திருக்கிறாராம். அந்த முறையில் ஒட்டுக்கட்டுதல் ஒரு முக்ய அம்சமாகும். வருஷாவருஷம் பருத்தி விதை தெளிக்கவேண்டியதில்லையாம். இந்த முறையால் பருத்திச் செடியானது மாஸூலின் அளவு குறையாமலே பல வருஷம்பலன்கொடுக்கக்கூடிய பயிராவதோடு, நோய், பூச்சி முதலியவைகளால் பாதிக்கப் படாமலும் இருக்குமாம். இதுவரையில் கீழ் ஆப்ரிக்காவில் இது விஷயமாய்ப் பரீக்ஷைகள் நடத்தி வந்திருக்கிறார்கள். துணியின் விலை பருத்தியின் விலையைப் பொறுத்ததாயிருக்கிறபடியால், இந்தப்புது முறையானது அனுபவத்தில் ஸாத்யமாகுமானால் துணியின் விலை ரொம்பவும் மலிந்து போகும் என்பதில் ஸந்தேகமில்லை.

### Newly Harvested Seed Paddy.

புதிதாய் அறுவடை செய்த விதை நெல்.—ஒரு நெல் தினுஸை அறுவடை செய்து நன்றாய்க் காயப் போட்டு ஒரு மாஸத்திற்குள் விதைபோட்டு மாஸூல் எடுத்திருக்கிறதாகக் "கிருஷிகன்" தெரிவிக்கிறது. ஆனால் மேல்படி தினுஸுகளை அந்த மாஸங்களில் பயிர்செய்ய ஸரியான பட்டந்தானா வென்று மாத்ரம் கவனித்துப் பார்க்கவேண்டுமாம். ஏனென்றால், சில தினுஸு நெல்கள் கார்ப் பருவத்தில் விதைத்தால் அவைகளுக்குத்தக்க சீதோஷ்ணபேதம் ஸரியாயிராமல் அந்த சீதோஷ்ணபேதம் வரும்வரையில்வளர்ந்து அப்பால் மாஸூலைக் கொடுக்கின்றன. சார்ப்பருவத்தில் பிசான தினுஸு அல்லது சம்பா தினுஸை விதைத்தால் இப்படி ஸம்பவிப்பதுண்டு. பருவகாலம் ஸரியாயிருந்ததால், அறுத்தநெல்லை 15 நாளைக்குள் திரும்பவும் விதையாய் உபயோகித்ததில் தக்க மாஸூல் கிடைத்திருக்கிறது. விதை சேகரித்தபின் சற்று

காலம் கழித்து விதைக்கவேண்டுமென்ற ஒரு நிர்ணயம் நெல்தினுஸுகளுக்கில்லை என்று க்ருஷிகன் பத்ரிகை சொல்லுகிறது. ஆனால் விதைக்கும் பட்டம் அல்லது காலம் மாத்ரம் ஸரியாய் பொருந்தியிருந்தால் உடனே விதைக்கலாம்.

## Condition of Soil.

நிலத்தின் நிலைமை.—நிலத்தின் நிலைமை என்றால் சவருள்ளதா, ஸ்வல்ப சவர் உள்ளதா அல்லது ஸகஜமானதா, ந்யூட்ரல் என்ற மத்யஸ்தமானதா, கொஞ்சம் புளிப்பானதா, ஆஸிட் என்ற புளிப்புள்ளதா என்பது தான். இதைக் கண்டுபிடிப்பதற்கு ஒரு கழினியில் நாலு பக்கங்களிலும் கொஞ்சம் மண்ணெடுத்து ஒன்றாய்க் கலந்து 5-பலம் மண்ணை ஒரு கோப்பையில் போட்டு, சுத்தஜலம் கிடைக்காவிட்டால் கழனியில் உள்ள ஜலத்தையே விட்டுக் கலக்கி இளக்கமாய்ப்பிசைந்து, லிட்மஸ் பேபர் என்ற சிகப்புக்கடிதத்தின் ஒரு துண்டைப் போட்டு கொஞ்சநேரம் கழித்து எடுத்துப்பார்க்கவேண்டியது. சிகப்புக்கடிதம் ரொம்ப நீலநிறமாய்மாறி இருந்தால், ஆல்கலேன் அதாவது சவர் உள்ளதென்றும், கொஞ்சம் நீலமாய் மாறியிருந்தால் ஸ்வல்ப சவர் உள்ளது அல்லது ஸகஜஸ்திதியுள்ளதென்றும் தெரிந்து கொள்ளலாம். சிகப்பு கொஞ்சமேனும் மாறாவிட்டால், நீலலிட்மஸ்க் கடிதத்தின் ஒரு துண்டைப்போட்டு பார்க்கவேண்டியது. இந்த நீலக்கடிதமும் முன் போட்ட சிகப்புக்கடிதமும் சுத்தமாய் மாறாவிட்டால், நிலத்தின் ஸ்திதி ந்யூட்ரல் என்ற மத்யஸ்தமான நிலைமையென்றும், நீலக்கடிதம் கொஞ்சம் சிகப்பாக மாறினால் ஸ்வல்ப ஆஸிட் அல்லது புளிப்புள்ளதென்றும், அதிக சிகப்பாகமாறினால் நிலம் ஆஸிட் நிலைமை உள்ளதென்றும் தெரியும். சிகப்புக்கடிதம் ரொம்ப நீலமாக மாறுகிற நிலங்களில் சவுடு, களர் இருக்கக்கூடும். இந்த சோதனைகளைக் கழனியில் பார்த்ததுமாத்ரம் போதாது. ரஸாயன சோதனைசாலையில் களர், சவுடுகளை சோதனைசெய்து பார்க்கவேண்டும். சிகப்புக்கடிதம் கொஞ்சம் நீலமாய் மாறுகிற நிலைமைதான் நிலத்தின் ஸரியான ஸ்திதி. அதுவே ச்லாக்யமான நிலத்தின் குணம். மற்ற மத்யஸ்திதி, ஸ்வல்ப ஆஸிட், ஆஸிட் உள்ள நிலங்கள் ஸரியான நிலைமைகளிலுள்ளவைகளல்ல. அநேகமாய் சுண்ணாம்பு குறைவான நிலங்களாயிருக்கும்.—சாஸ்த்ரீயஉரம்,

## The Effects of Some Manures.

சில உரங்களின் குணங்கள்:—ஸமீபத்தில் வங்காளத்து விவஸாய டிபார்ட்மெண்டார் அலிப்பூர் காட்சியில் பலவித எருக்களை ஜனங்கள் பார்க்கும்படி வைத்திருந்தார்கள். பயிர் வளர்ந்துகொண்டிருக்கையில் அதை நன்றாய் வளர்ந்து வரும்படி செய்ய பொட்டுலுப்பை எருவாக இடவேண்டுமென்று டிபார்ட்மெண்டார் சொல்லுகிறார்கள். ஆனால் இந்த எருவை உபயோகிப்பதில் ரொம்ப ஜாக்ரதைவேண்டும். ரொம்ப மழை பெய்யும்போது அதை எருவாகப் போட்டால் மழைஜலம் பொட்டுலுப்பைக் கரைத்துக் கொண்டு போய்விடும். அதிகமாகப்போட்டால் பயிருக்குக் கெடுதி உண்டாகும். பர்ட்வான் பண்ணையில் இதை உபயோகித்ததைப்பற்றி ஆனிமாஸ ஸஞ்சிகையில் குறிப்பிட்டிருக்கிறோம்.

இதைவிட பிண்ணாக்கு எரு ரொம்ப த்ருப்திகரமான எரு என்று சொல்லப்படுகிறது. இதில் உள்ள உணவைப் பயிர்கள் மெதுவாக க்ரஹிக்கிறபடியால் பல பருவம் பலன் கொடுக்கும் பயிர்களுக்கு எருவாக இடுவதற்கும், மழை காலத்தில் எருவிடுவதற்கும், ரொம்ப ஏற்றதென்று சொல்லப்படுகிறது. டம்ரான் என்னும் இடத்தில் 40மணங்கு சாணமும் $3\frac{1}{2}$மணங்கு ஆமணக்குப்பிண்ணாக்கும்சேர்த்து எருவாகப் போட்டதில் 26மணங்கு நெல் கிடைத்ததாம். எருவிடாமல் பயிர் செய்தால் 16 மணங்குதான் கிடைக்குமாம்.

## Kind Treatment of Cows.

பசுக்களை பக்ஷமாய் நடத்துவது:—பசுக்களை பக்ஷமாயும் கொடுமையாயும் நடத்துவதால் என்னென்ன பலன் உண்டாகின்றன என்பதையறிவதற்காக ஸமீபத்தில் ஒரு விவஸாய காலேஜில் பரீக்ஷைகள் நடத்தப்பட்டன. 3 பசுக்களை ரொம்ப பக்ஷமாய் நடத்தினதில் ஒவ்வொன்றும் ஸராஸரியில் ?6 ராத்தல் பால் கொடுத்தது. அந்தப்பாலில் 100-க்கு 4.3 பாகம் வீதம் வெண்ணெய் இருந்தது. சில நாளைக்குப் பிறகு அவைகளைக் கொடுமையாய் நடத்தினார்கள். அவைகளின் மேல் தாவிக்குதித்து, கூச்சலிட்டு அவைகள் தீனிதின்று கொண்டிருந்தபோது அடித்துத் தொந்தரை செய்தார்கள். அப்படிச் செய்ததில் அவைகளில் ஒவ்வொன்றும் ஸராஸரியில் 23 ராத்தல் பாலே கொடுத்ததாம். வெண்ணெயும் நூற்றுக்கு 3·4 பங்கு வீதந்தான் இருந்தது. வேறு மூன்று பசுக்களை பக்ஷமாய் நடத்திவந்ததில் ஒவ்வொன்றும் 31 ராத்தல் டால் கொடுத்ததோடு வெண்ணெய் 100-க்கு 4.2 பங்கு வீதமும் இருந்ததாம். அவைகளை ஒருவயலில் விட்டு, நாய்கள் குலைத்துத் தொந்தரை செய்யும்படி செய்ததில் ஒவ்வொன்றும் 23 ராத்தல் பாலும், நூற்றுக்கு 3·6 பங்கு வீதம் வெண்ணெயும் கொடுத்ததாம். பசுக்களை பக்ஷமாய் நடத்துவதில் நன்மையுண்டென்பதை நாம் வற்புறுத்திக் கூறவேண்டுவதில்லை.

# COMMERCE.
## வ்யாபாரம்.

### Business Enterprise in India.

இந்தியாவில் வ்யாபாரஊக்கம்:—இந்தியாவில் சென்ற மேமாஸத்தில் அடியில் கண்ட விவரப்படி 31-கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

| | | |
|---|---|---|
| 13 | பாங்கி, லேவாதேவி கம்பெனிகள் ரூ. | 72,29,998 |
| 3 | இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகள் ... | 90,000 |
| 6 | வ்யாபாரக் கம்பெனிகள் ... | 13,04,500 |
| 2 | மாவுமில்லு கம்பெனிகள் ... | 9,00,000 |
| 4 | தேயிலைத்தோட்டக்கம்பெனிகள் ... | 7,25,000 |
| 1 | தோட்டக்கம்பெனி (மேலே சொன்னவைதவிர) ... | 32,900 |
| 1 | நிலக்கரிச் சுரங்கக் கம்பெனி ... | 9,00,000 |
| 1 | சுரங்கக்கம்பெனி மேலே சொன்னது தவிர ... | 21,00,000 |
| 31 | | 1,13,82,398 |

### Export of Oil-cakes.

பிண்ணாக்குகளின் ஏற்றுமதி:—பிண்ணாக்கின் ஏற்றுமதியின் மதிப்பு 1911-12-ம் வருஷத்தில் 51.80 லக்ஷம் ரூபாயிலிருந்து 58.71 லக்ஷம் ரூபாயாக அதிகரித்திருக்கிறது. ஆமணக்குப்பிண்ணாக்கு ரூ 3.47 லக்ஷம்; தேங்காய்ப்பிண்ணாக்கு ரூ6.18 லக்ஷம்; வேர்க்கடலைப் பிண்ணாக்கு ரூ 22.93 லக்ஷம்; எள்ளுபிண்ணாக்கு ரூபாய் 26.11 லக்ஷம்; மற்றவை .03 லக்ஷம்.

3.42 லக்ஷம் ரூ-க்கு ஆமணக்குப் பிண்ணாக்கும், 11.02 லக்ஷம்ரூ-க்கு வேர்க்கடலை பிண்ணாக்கும், 26.11 லக்ஷம்ரூ-க்கு எள் பிண்ணாக்கும், ஸிலோனுக்கு ஏற்றுமதியாயிருக்கின்றன. 6.09 லக்ஷம் ரூ-க்கு தேங்காய்ப்பிண்ணாக்கும்9.38 லக்ஷம் ரூ-க்கு வேர்க்கடலைப் பிண்ணாக்கும் ஜெர்மெனிக்கு ஏற்று மதிய-யிருக்கின்றன.

### Sugar Trade.

சர்க்கரை வ்யாபாரம்:—நமது தேசம் பெரிய விவஸாய நாடாயிருந்து கரும்பு ஸாகுபடி அதிகமாக இருந்தும், வெளிநாடுகளிலிருந்து சர்க்கரை ஏராளமாகத் தருவிக்கப்படுகிறது. சென்ற 1912-13ம் வருஷத்தின் மொத்த இறக்குமதித்தொகையில் சர்க்கரையானது நூற்றுக்கு 5 பங்காக இருந்தது. சென்றவருஷம் இறக்குமதி செய்யப்பட்ட சர்க்கரையின் அளவு 6,94,124 அந்தரும், மதிப்பு 67,81,036 ரூபாயும் ஆகும். இதில் வெள்ளைச்சர்க்கரை 60,17,593 ரூபாயாகும். இறக்குமதியான சர்க்கரையில் பெரும்பாகம் ஜாவாவிலிருந்து வந்தது. ஜாவாவிலிருந்துவந்த சர்க்கரையின் மதிப்பு 49,07,015 ரூபாய். அடுத்தபடியாயுள்ளது ஆஸ்ட்ரியாதேசம். இதிலிருந்து 6,88,899 ரூபாய்க்கு சர்க்கரை வந்தது. மொரிஷஸ் (மோர்சு) தீவிலிருந்து 4,14,615 ரூபாய்க்கு சர்க்கரை வந்தது. இங்க்லண்டிலிருந்து 4,67,359 ரூபாய்க்கு சர்க்கரைத் தின்பண்டங்கள் தருவிக்கப் பட்டன.

சென்ற வருஷம் தருவிக்கப்பட்ட வெள்ளைச்சர்க்கரையின் அளவு, அதறகு முந்தின வருஷத்தின் இறக்குமதி அளவைவிட இரண்டு மடங்கு அதிகமாக இருக்கிறது. இதற்குக்காரணம் என்னவென்றால், சென்றவருஷம் இங்க்லண்டில் நிலக்கரிவேலைகளில் வேலை நிறுத்தம் ஏற்படவே, இங்க்லீஷ் சாராயக்கம்பெனிகளிலும் வேலைகொஞ்ச காலம் நிறுத்தவேண்டியதாயிற்று; இதனாலும் அமெரிக்காவில் சர்க்கரை அதிகம் உற்பத்தியாகும் என்று சொல்லிக்கொண்டதாலும், பீட் கிழங்கு ஸாகுபடியதிகமாக செய்யப்பட்ட படியாலும், இவைகளை யெல்லாம் உத்தேசித்து சர்க்கரைவிலை குறைவதாயிற்று; அதனால் ஜாவா சர்க்கரை ஐரோப்பாவில் அதிகம் விலைப்போகாமல் சென்னைக்கு வரலாயிற்று. விலை மலிவாயிருந்தபடியால் அநேகர் பின்னால் லாபம் கிடைக்குமென்று வாங்கிப்போட்டார்கள். மேலும் ஆஸ்ட்ரியாவின் பீட் கிழங்கு சர்க்கரை ரொம்பவும் இறக்குமதி செய்யப்பட்டது. இவ்வளவு சர்க்கரையும் ராஜதானியில் உபயோகப்பட்டுப் போயிருக்காது என்றும், ரொம்ப சர்க்கரை விலையாகாமல் நின்று இருக்குமாதலால் இந்த வருஷம் அதிகம் சர்க்கரை இறக்குமதியாகக் காரணமில்லை என்றும் கடல் வ்யாபார ரிபோர்ட்டில் சொல்லியிருக்கிறது. ஆனால் 'சென்னை வ்யாபாரி' என்னும் பத்ரிகையானது, சென்ற சில வருஷங்களில் சர்க்கரையின் இறக்குமதி ரொம்பவும் அதிகமாகிவருகிற தென்றும், ஆகையால் அந்த வருஷங்களின் ரிபோர்ட்டைப் பார்த்தால் இந்த வருஷம் சர்க்கரை இறக்குமதி குறையும் என்று நினைப்பதற்கில்லை என்றும எழுதுகிறது. எது சொல்வது ஸரியோதெரியவேண்டும்.

# INDUSTRY.

## கைத்தொழில்.

### Cotton Mill Industry.

பருத்திமில் கைத்தொழில்:—சென்னைராஜதானியிலுள்ள பருத்திமில்லுகளில் தற்போது ரொம்ப அதிகமாக துணி நெய்யப்பட்டு வருகிறதென்று தெரியவருகிறது. 1911-12-ம் வருஷத்தில், 78, 40,738 ராத்தல் துணிதான் நெய்யப்பட்டது. 1912-1913-ம் வருஷத்திலோ, 91, 36, 534 ராத்தல் துணி நெய்யப்பட்டிருக்கிறது. அதாவது அதற்கு முந்தின வருஷத்தைவிட நூற்றுக்கு 16-பங்கு அதிகமாக நெய்யப்பட்டிருக்கிறது. 1912-13ம் வருஷத்தில் நெய்யபட்ட துணியில் 87,04, 706 ராத்தல் சென்னை நகரில் நெய்யப்பட்டது. மற்ற பாகம் கோயம்புத்தூரில் நெய்யப்பட்டது. 1912-13-ம் வருஷத்தில் இந்த மில்துணி ஸம்பந்தமாய் வஸூலிக்கப்பட்ட எக்ஸைஸ்வரி 2,05,819 ரூபாயாகும். சென்னையில் நெய்யப்பட்ட துணியில் நூற்றுக்கு 87-பாகம் சாயம் போட்ட துணியாகும்.

### Industrial Development of Mysore.

மைஸூரில் கைத்தொழில் அபிவ்ருத்தி:—சென்ற ஆனி மாஸத்து ஸஞ்சிகையில் மைஸூரில் ஒரு கைத்தொழில் டிரெக்டர் நியமிக்கப்பட்டிருக்கிறாரென்றும், அவர் செய்ய வேண்டிய வேலைகள் இன்னின்னவையென்றும் குறிப்பிட்டிருந்தோம். அந்த வேலைகளோடு அவர் பின் வரும் வேலைகளையும் செய்ய வேண்டும். அவைகளாவன:—

ஜனங்கள் ஸொந்தத்தில் கைத்தொழில் கம்பெனிகளும், வ்யாபாரக் கம்பெனிகளும், ஸ்தாபிக்கும்படி டிரெக்டர் தூண்டவேண்டும். ஜனங்களுக்கு இந்த டிபார்ட்மெண்டார் கூடியமட்டும் செலவில்லாமல் யோசனைகள் சொல்லுகிறதாக டிரெக்டர் தெரியப்படுத்த வேண்டும். மூலதன முள்ளவர்கள், நிலஸ்வான்தார்கள், வ்யாபாரிகள் ஆகிய இவர்களுக்கு எவ்வளவு ஸௌகர்யங்கள் செய்து கொடுக்கவேண்டியிருக்கும், எப்படிப்பட்ட ஸௌகர்யங்கள் செய்ய வேண்டியிருக்கும், என்பவைகளைப்பற்றிய விஷயங்களை சேகரிக்க வேண்டுமென்று, டிரெக்டரை கவர்ன்மெண்டார் கேட்டிருக்கிறார்கள். மேலும் கைத்தொழில் வ்யாபார முயற்சிகளுக்காக கவர்ன்மெண்டார் கடன் கொடுப்பதைப்பற்றிய நிபந்தனைகளைத் தயார்செய்யவும் டிரெக்டரை கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட கடன்களுக்கு கவர்ன்மெண்டின் ஸாங்க்ஷன்வேண்டும்.

### Madras Glass Works, Ld.

மதராஸ் க்ளாஸ்வொர்க்ஸ் லிமிடெட்:—சென்ற மாஸம் காசி க்ளாஸ் வொர்க்ஸ் என்னும் கண்ணாடித்தொழில் கம்பெனி வேலை நிறுத்தி விட்டதென்று குறிப்பிட்டிருந்தோம். சென்னையிலுள்ள கண்ணாடித்தொழில் கம்பெனியாகிய மதராஸ் க்ளாஸ் வொர்க்ஸ் கம்பெனியும் வேலைநிறுத்தி விடுவதாகத் தீர்மானித்திருக்கிறது. அந்தக் கம்பெனியின் ஷேர் ஹோல்டர்கள் சென்ற ஜூலைமாஸம் 18 தேதியன்று ஒரு விசேஷப் பொது மீட்டிங் கூடி மேற்படி கம்பெனியை மூடி விடுவதைப்பற்றி யோசித்தார்கள். பின் வரும் விசேஷத்தீர்மானங்கள் செய்யப்பட்டன: "இந்தக்கம்பெனியார் கொடுக்க வேண்டியிருக்கும் கடன் அதிகமாயிருப்பதால் கம்பெனியில் இன்னம் வேலை நடந்து வருவது முடியாதென்றும், ஆகையால் கம்பெனியை மூடிவிடுவது நல்லதென்றும் இந்த மீட்டிங்குக்கு வ்யக்தமாகத் தெரிகிறது. ஆகையால் இந்தக் கம்பெனியை மூடிவிட வேண்டும்." "மிஸ்டர் எ. ஸாலன்ஸன் என்னும் ஸர்டிபைட் அக்கௌண்டண்டை இந்தக்கம்பெனியை மூடிவிடுவதற்காக லிக்விடேடராக நியமிக்கவேண்டும்."

இப்படிக் கம்பெனிகள் வேலை நடத்த முடியாமல் மூடப்படுவது மிகவும் விஸனகரமானதே. கம்பெனிகள் நஷ்டமடைந்து போவதால் பணமுள்ளவர்களும் மற்றவர்களும் புதிதாக தொழில் கம்பெனிகள ஸ்தாபிக்கபயப்படுகிறார்கள். தற்காலம் புதிதாக கைத்தொழில் கம்பெனிகள் ஸ்தாபிப்பதைப் பறறி நாம் வெகுவாய் கேள்விப்படுவதில்லை. கைத்தொழில் நிலைமை இப்படி இருப்பது மிகவும் விஸனகரமானதே. கைத்தொழில்கள வ்ருத்தியடையாவிட்டால் தேசத்தின் பொருளாதார நிலைமை வ்ருத்தியடைவது முடியாது. பொருளாதார நிலைமை வ்ருத்தியடையாவிட்டாலோ மற்ற விஷயங்களில் நமது தேசம முன்னுக்கு வருவது ரொம்ப சரமம். ஆகையால் இவைகளை யுத்தேசித்து நமது தேசத்து ப்ரமுகர்கள் கைத்தொழில் முயற்சிகள் நஷ்டமடைவதைக் கண்டு மனந்தளராமல், கைத்தொழில்கள் நன்றாய் நடந்து வருவதற்கு வேண்டிய அம்சங்களை கவனித்து இன்னமும் முயற்சித்து ப்பார்க்கவேண்டும்.

# ECONOMICS.
## பொருளாதாரம்.

**Some Economic Problems.**

சில பொருளாதார ஸம்பந்தமான விஷயங்கள்.—கஞ்சம் ஜில்லா பர்ஹாம்பூரைச்சேர்ந்த வக்கீல் மிஸ்டர் எ. பி. பாட்ரோ ஸமீபத்தில் இங்கிலண்டுக்குச் சென்றார். அங்கே அவர் இந்தியா உதவி மந்திரியாகிய மிஸ்டர் மாண்டேகுவைக் கண்டு பேசினர். அவர் தமது பேச்சில் மூன்று விஷயங்களைப்பற்றி ப்ரஸ்தாபம் செய்தார்.

முதலாவது:—அதிகாரப்பிரிவினையைப்பற்றி ஹாப்ஹவுஸ் கமிஷன் செய்த சிபார்சுகள். க்ராமப் பஞ்சாயத்துகள், முனிஸிபாலிடிகள் டிஸ்ட்ரிக்ட் போர்டுகள் இவைகளை ஸ்தாபித்து இவைகளுக்கு ஸ்வாதீனம் கொடுத்துப் பலப்படுத்தவேண்டுமென்று ஹாப்ஹவுஸ் கமிஷன் சிபார்சு செய்திருக்கிறது. இந்த சிபார்சுகளை இதுவரையில் இந்தியா கவர்ன்மெண்டார் நிறைவேற்ருமலிருப்பதை மிஸ்டர் மாண்டேகு ஒப்புக்கொண்டு அவைகளைப்பற்றி சீக்ரம் இந்தியா கவர்ன்மெண்டுக்கு எழுதுவதாகச் சொன்னர்.

இரண்டாவது விஷயம்:—மாகாணங்களில் உயர்ந்த தொழில் கல்வி காலேஜ்கள் ஸ்தாபிப்பது. இது விஷயமாய் மிஸ்டர் பாட்ரோ ஒரு ஸ்கீம் தயார் செய்து அதை மிஸ்டர் மாண்டேகு விடம் காட்டினர். மிஸ்டர் மாண்டேகு, இந்தியா கவர்ன்மெண்டார்தொழிற் கல்விக்காலேஜ்களைப்பற்றி யோசனைசெய்து கொண்டிருப்பதாகவும், மிஸ்டர் பாட்ரோவின் ஸ்கீமும் தம்முடைய சொந்த அபிப்ராயமும் இந்த விஷயத்தில் ஒத்திருப்பதாகவும், மிஸ்டர் பாட்ரோவின் ஸ்கீமை இந்தியா கவர்ன்மெண்டுக்கு அனுப்புவதாகவும், சொன்னர்.

மூன்ருவது விஷயம்:—சாச்வத ஸெட்டில்மெண்டு. இதைப்பற்றி மிஸ்டர் மாண்டேகு ஒருவித முடிவான அபிப்ராயமும் சொல்லவில்லை. அதைப்பற்றி ஆலோசனை செய்வதாக மாத்ரம் சொன்னர்.

**Cattle Thefts.**

கால் நடைகள் திருட்டுப்போதல்.—விவஸாயத்துக்கு முக்யமான ஆதாரங்களில் ஒன்றுகிய கால் நடைகள் திருட்டுப்போவதைத் தடுப்பதற்காக மதுரை ஜில்லாவில் கால் நடைகளுக்கு அடையாளமாக சூடு போட்டு போலீஸ் ஸ்டேஷன்களில் ரெஜிஸ்டர் செய்து வருகிருர்கள். இந்த வழக்கத்தைத் தஞ்சாவூர் ஜில்லாவிலும் அனுஷ்டிப்பதைப்பற்றி யோசித்து வருகிருர்களாம். அந்த ஏற்பாட்டின் விவரம் பின்வருமாறு:—

(1) கால் நடைகளின் சொந்தக்காரர்கள் தங்கள் கால்நடைகளை அருகிலுள்ள போலீஸ் ஸ்டேஷனில் கொண்டுபோய் பதிவு செய்வது.

(2) கால்நடைகளின் தோலுக்கு கெடுதியுண்டாகாதபடி அடையாளமாக ஷை போலீஸ் ஸ்டேஷனுக்குரிய எழுத்தும் நம்பரும் கால்நடைகளின் நெற்றியில் சூடுபோடுவது.

(3) ஸ்வல்ப கட்டணத்துக்கு கால்நடைகளைப் பதிவு செய்து சூடுபோட்டு அவைகளின் அங்கஅடையாளம் கண்டு ஒரு ஸர்டிபிகேட் கொடுப்பது.

(4) கால்நடைகளை விற்கும்போது விற்றவர் வாங்கினவர் பேருக்கு ஸர்டிபிகேட்டை மாற்றிவிடுவது.

(5) கால்நடையை வாங்கினவர்கள் அருகிலுள்ள போலீஸ் ஸ்டேஷனில் தாங்கள் கால்நடை வாங்கினதைத் தெரிவித்து வாங்கின ஒரு வாரத்துக்குள்ளாக ஷை கால்நடையையும் அதன்ஸர்டிபிகேட்டையும் ஷை ஸ்டேஷனில் தணிக்கை செய்வதற்காக ஆஜர்செய்வது.

(6) போலீஸ் ஸ்டேஷனில் ஸர்டிபிகேட்டுடன் கால்நடையை ஸரிபார்த்து கால்நடையைப் பதிவு செய்துகொண்டு ஸர்டிபிகேட்டை ஒப்பமிட்டு சொந்தக்காரரிடம் வாப்ஸ் செய்வது.

(7) கால்நடைகள் திருட்டுப்போனல் போலீஸார் அவைகளின் நம்பரை விஸ்தாரமாய் ப்ரசுரம் செய்து, அவைகள் யார் வசம் கண்டுபிடிக்கப்படுகின்றனவோ அவர்களை திருட்டுசொத்து வாங்கினதற்காகக் கைது செய்வது.

மதுரைஜில்லாவில் இது விஷயமாக அடைந்திருக்கும் அனுபவத்தினல் பதிவாகாத கால்நடைகளைவிட பதிவான கால்நடைகள் ஸ்வல்பமாக திருட்டுப்போயிருப்பதுடன் அவைகளை ஸுலபமாய் கண்டுபிடிக்கலாம் என்றும் தெரியவருகிறது.

கால்நடைகளை சூடுபோட்டு ரிஜிஸ்டர் செய்வதற்கு சட்டணம் கால்நடை 1-க்கு அணு 2-க்கு அதிகமாகாது.

# CO-OPERATION.
## கோவாபரேஷன்.

### Co-operative Building Society.

கோயம்புத்தூர் கோவாபரேடிவ் கட்டிடஸங்கம்:—இந்தப்பெயருடைய ஸங்கம் ஒன்று கோயம்புத்தூரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இது 1912ம் வருஷத்திய 2-வது ஆக்ட்டின்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. இதன் மூலதனம் 50,000 ரூபாயாகும். பங்குஒன்றுக்கு 50 ரூபாய். தடவைக்கு 10 ரூபாய் வீதம் 5-தடவையில் செலுத்தவேண்டும். இந்த ஸங்கத்தின்நோக்கம் என்னவென்றால், இந்த ஸங்கத்தின் மெம்பர்கள் வீடு கட்டவாவது, வீடுகள் வாங்கவாவது, வீடுகளை ரிபேர் செய்யவாவது வேண்டியிருந்தால் அவர்களுக்கு இந்த ஸங்கம் உதவி செய்யும். ஜனநெருக்கமுள்ள இடங்களை விசாலப்படுத்து வதிலும் ஸுகாதார முறையில் புதிய தெருக்கள் முதலியவை போடுவதிலும் முனிஸிபாலிடியோடு இந்த ஸங்கம் ஒத்துழைக்கும். கோயமுத்தூர் டிஸ்ட்ரிக்ட் அர்பன் பாங்கின் ஸெக்ரெடரியாகிய மிஸ்டர் வி.என். க்ருஷ்ணஸ்வாமி அய்யர் இந்த ஸங்கத்துக்கு தற்காலத்து ஸெக்ரெடரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இந்த ஸங்கத்தைப்போல் மற்றப்பட்டணங்களிலும் ஸங்கங்கள் ஏற்பட்டு பட்டணவாஸிகளின் வீடுகளைப்பற்றிய ஸௌகர்யங்களைக் கவனிக்கவேண்டும் என்று விரும்புகிறோம்.

### Co-operative Progress.

கோவாபரேஷனில்முன்னேற்றம்:-சென்ற ஜூன் மாஸஸஞ்சிகையில்டென்மார்க்கில்கோவாபரேஷனில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதற்குக் காரணமாயுள்ள சிலஅம்சங்களைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தோம். அவைகளோடு இன்னொரு அம்சமும் அதற்கு ஸாதகமாயிருந்திருக்கிறது. அதாவது, அந்த தேசத்தில் சென்ற நூறு வருஷகாலமாக நிலச்சட்டமானது சிறுகுடிகள் ஏற்படுவதற்கு ரொம்ப ஸாதகமாயிருந்திருக்கிறது. அந்த தேசத்தில் ஏராளமான நிலங்கள் ஒருவர் கையில் சேரவொட்டார்கள். உதாரணமாக, ஒரு பெரிய பூஸ்திதி விற்கவேண்டியிருந்தால் அதை இரண்டு மூன்று பாகங்களாகப் பிரித்து விற்றுவிடலாம். அதை இரண்டு மூன்று பாகமாய்ப்பிரித்து தனித்தனியாக ஸாகுபடி செய்யும்படி விடலாம். ஆனால் பெரிய பூஸ்திதியின் ஒரு பாகத்தை வேறொரு சிறிய பூஸ்திதியோடு சேர்த்து அந்தச் சிறிய பூஸ்திதியைப் பெரியதாக்குவதென்றால் மாத்ரம் கூடாது. விவஸாயிகள் நிலங்களை வாங்குவதற்கு கவர்ன்மெண்டார் வேண்டிய ஸகாயங்கள் செய்கிறார்கள். அந்த நிலங்களை வாங்க மாத்ரம் விவஸாயிக்குப் பணமிருந்தால் அவைகளை ஸாகுபடி செய்து பலனடைவதற்கு வேண்டிய பணத்தை நில ஜாமீன்மேல் கவர்ன்மெண்டார் கொடுத்து உதவுகிறார்கள்.

### Moral Effects of Co-operation.

கோவாபரேஷனால் உண்டாகும் ஸன்மார்க்க பலன்கள்:—ஆக்ரா, அயோத்தி, ஐக்யமாகாணத்தில் கோவாபரேஷன் பரவிவருவதில் அவ்விடத்தில் ஸன்மார்க்க வழியில் நடக்காத ஜனங்கள் அநேகர் நல்ல நடத்தைக்குத்திரும்பி வந்து விட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. நல்ல நடத்தையில்லாதவர்கள் ஸங்கங்களில் சேருவது கூடாதென்று விதி ஏற்படுத்தவே, கோவாபரேஷனின் நன்மையையறிந்த இவர்கள் தங்களுடைய குடி,சூதாட்டம், முதலிய துர்நடத்தைகளை விட்டுவிட்டு நல்ல நடத்தையோடு நடந்து வருகிறார்கள். அந்த மாகாணத்தில் அநேக இடங்களில் ஸங்கங்களின் லாபத்தில் ஒரு பாகத்தைக் கொண்டாவது, அல்லது மெம்பர்களுக்குத் தனிவரி விதித்தாவது எலிமெண்டரி பாடசாலைகள் நடத்துகிறார்களாம். சில விடங்களில் ஸுகாதார விஷயமாகவும் வைத்ய உதவி செய்யும் விஷயமாகவும் முயற்சிகள் நடந்து வருகின்றன. அநேக பஞ்சாயத்தார்கள், மெம்பர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தார்களுக்கும் உதவும்படிக்கு க்வினைன் மருந்து வாங்கி வைத்திருக்கிறார்கள். ஸாமான்யமான ஸிவில், க்ரிமினல் வழக்குகள் இப்பொழுது ஸாதாரணமாய் பஞ்சாயத்தாரால் தீர்க்கப்படுகின்றன. கல்யாணம், உத்தரக்ரியை, உத்ஸவம் முதலிய காலங்களில் மிதமிஞ்சி செலவழித்துவந்தது, இப்போது அநேக இடங்களில் மட்டுப் பட்டு வந்திருக்கிறது. அநேக க்ராம வாஸிகள் இதற்கு முன்னால் மேற்படி காலங்களில் பிறருடைய சொல்லுக்குப் பயந்து தங்களுடைய சக்திக்கு மீறி செலவழித்தார்கள் என்றும், இப்போது பஞ்சாயத்தார்கள் அப்படி மிதமிஞ்சி செலவழிக்கக் கூடாதென்று ஏற்படுத்தியிருப்பதால் தாங்கள் இப்போது அப்படிச் செலவழிப்பதில்லை யென்றும் சொல்லுகிறார்களாம்.

# BANKING.

# பாங்கி வ்யாபாரம்.

## Bankers and Pass Books.

பாங்கிக்காரர்களும் பாஸ் புக்குகளும்.—பாங்கிக்காரர்களை ரொம்பவும் பாதிக்கக்கூடியதான ஒரு தீர்ப்பு ஒருபாங்கிக்கேஸ் விஷயமாய் ஸமீபத்தில் இங்க்லாண்டில் சொல்லப்பட்டது. இரண்டு ஸொலிஸிட்டர்கள் ஒரு கல்யாண ஸெட்டில்மெண்டுக்கு ஜாயிண்ட் ட்ரஸ்டிகளாக இருந்து ஷை ட்ரஸ்ட் ஸொத்தின் பணத்தை ஒரு பாங்கியில் போட்டு அந்த பாங்கியில் பத்து வரவு செய்து வந்தார்கள். ட்ரஸ்ட் ஸொத்தானது ஷை ஸொலிஸிட்டர்களில் ஒருவரான மிஸ்டர் வாக்கர் என்பவருடைய குமஸ்தாவால் நிர்வாகம் செய்யப்பட்டுவந்தது. சென்ற 1910-ம் வருஷம் மார்ச்சு மாஸத்திலும், 1911-ம் வருஷம் ஆகஸ்ட் மாஸத்திலும், 1912-ம் வருஷம் ஆகஸ்ட் மாஸத்திலும் இந்த குமஸ்தாவானவர் செக்குகளில் ஷை ஸொலிஸிட்டர்களுடைய கையெழுத்தைப்போல் போர்ஜரி செய்து, பாங்கியிலிருந்து ஷை மூன்று தடவையிலுமாக 600 பவுன் மோசம் செய்து வாங்கிக் கொண்டு விட்டார். பிறகு குமாஸ்தா அஸௌக்யத்தால் ஆபீஸுக்கு வராமலிருந்தபோது மிஸ்டர் வாக்கருக்கு இந்த மோசம் தெரியவந்தது. அதன் மேல் அவர் பாங்கிச்காரர்கள் ஷை 600 பவுன் தொகையையும் தமக்குக் கொடுக்கவேண்டும் என்று வ்யாஜ்யம் போட்டார்.

போர்ஜரி கையெழுத்துப்போட்ட செக்குக்கு ஒரு பாங்கி பணங்கொடுத்தால், பாங்கியானது செய்த தவறுக்கு அதுவே உத்தரவாதியாகும் என்பது சட்டம். அதாவது, யாருடைய போர்ஜரிக் கையெழுத்துக்காகப் பணம் கொடுத்ததோ அவருக்கு அப்படிக் கொடுக்கப்பட்ட தொகையை மறுபடியும் கொடுக்க வேண்டும். ஆனால் இந்தக் கேஸில், ஸொலிஸிட்டர்களுடைய செய்கையால் தாங்கள் மோசம் போனதாக பாங்கிக்காரர்கள் வாதித்தார்கள். 1910-ம் வருஷம் மார்ச்சு மாஸம் முதல் 9-தடவை மிஸ்டர் வாக்கருக்கு பாஸ் புக்கை அனுப்பினதாலேயே அது "அக்கௌண்ட் ஸ்டேட்" அதாவது, பைஸலான கணக்காகிவிட்டது என்றும், அவர் (மிஸ்டர் வாக்கர்) ட்ரஸ்ட் கணக்கை ஸரிவர வைத்துக்கொள்ளாமல் அசிரத்தையாக இருந்ததனால் பாங்கிக்காரர்கள் ஷை செக்குகளுக்குப் பணம் கொடுக்க நேரிட்டதென்றும் பாங்கிக்காரர்கள் வாதித்தார்கள். ஆனால் இந்தக்கேஸ் வாதிபக்கம் அனுகூலமாயிற்று. அதாவது பாங்கிக்காரர்கள் பணம் திரும்பவும் கொடுக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

1909-ம் வருஷத்தில் இது மாதிரி ஒரு கேஸ் நடந்தது. ஆனால் அதில் போர்ஜரிகள் 2-மாஸ காலத்தில் ஒரே க்வார்ட்டரிலேயே, அதாவது, 3-மாஸ காலத்திலேயே, நடந்தன. பத்து வரவு வைத்துக்கொண்டிருந்தவரின் பாஸ் புஸ்தகத்தில் பத்துவரவை எழுதி கூடுதல் கட்டாமலிருந்தது. பென்ஸலால் மாத்ரம் குறிப்பிட்டிருந்தது. இதனால் அந்தக்கேஸில் ஜட்ஜானவர் பாங்கிக்காரர்கள் போர்ஜரிசெய்த செக்குக்குப் பணங் கொடுத்ததற்குத் தாங்களே உத்தரவாதமாக வேண்டுமென்று தீர்மானித்தார். இந்தக் கேஸில் சொல்லப்பட்ட தீர்ப்பை அனுஸரித்து தாம் தீர்ப்புச்சொல்வதாக ஷை ஸொலி ஸிட்டர் கேஸில் தீர்ப்புச் செய்த ஜட்ஜ்சொன்னார். ஆனால் இந்த ஸொலிஸிட்டர் கேஸில் போர்ஜரிகள் வெகுகாலமாக நடந்துவந்ததோடு, 9-தடவை பாஸ் புக்கை ஸொலிஸிட்டருக்கு அனுப்பியும் அவர் அதில் கணக்குக் கட்டியிருப்பதை ஆக்ஷேபியாததால் ஷை தீர்ப்பானது முன் சொன்ன தீர்ப்பை அனுஸரித்ததாகாது என்று சொல்லலாம். மேலும் ஸொலிஸிட்டர் கேஸில் ஜட்ஜானவர், பாங்கிக் காரர்கள் அனுப்பும் பாஸ்புக்கில் எழுதியிருக்கும் கணக்கு ஸரியாயிருக்கிறதா என்று பார்க்கவேண்டியது கணக்கு வைத்துக் கொண்டிருப்பவருடைய கடமையல்லவென்று அபிப்ராயப்பட்டார். ஆனால் அமெரிக்காவில் ஸமீபத்தில் தீர்ப்பான ஒரு கேஸில் ஜட்ஜானவர், கணக்கு வைத்துக்கொண்டிருப்பவர் பாஸ் புக்கில் காட்டியிருக்கும் கணக்கு ஸரிதானாவென்று பார்க்கவேண்டியது அவருடைய கடமையாமென்று அபிப்ராயப்பட்டார்.

ஜட்ஜுகள் இப்படி அபிப்ராய பேதப்பட்டால் யார்சொல்வது உண்மையில் ந்யாயமென்பதற்கில்லை.

இங்க்லண்டிலுள்ள நாட்டுப்புறத்து பாங்கிகள் இந்த ஸங்கடம் நேராமலிருக்கும்படி ஒரு உபாயம் அனுஷ்டித்து வருகின்றன. கணக்கு வைத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு பாஸ் புக்கை அனுப்பும்போது தனிக் கடுதாசியில் ஷை பாஸ் புக்கில் கணக்குக் காட்டியிருப்பதை எழுதி யனுப்பி, கணக்கு ஸரிதான் என்று கையெழுத்திட்டு அனுப்பும்படி கணக்கு வைத்திருப்பவர்களைக் கேட்கிறார்கள். அவர்கள் தங்கள் கணக்கு ஸரிதானா என்று பார்த்து ஸரியாயிருந்தால் கையெழுத்திட்டு அனுப்பி விடுகிறார்கள். ஸரியாயில்லாவிட்டால் உடனே ஆக்ஷேபிக்கிறார்கள். ஏதாவது போர்ஜரி முதலிய மோசங்கள் நடந்திருந்தாலும் அப்போதைக்கே தெரிந்துபோகிறது. அப்படித் தெரியாமல் பின்னாடி தெரிந்தாலும் முதலில் கணக்கு ஸரிதான் என்று கணக்கு வைத்துக்கொள்பவர் கையெழுத்திடுவதால் பின்னாடி மேலே சொன்ன ஸொலிஸிட்டர்களைப்போல் 3-வருஷம் கழித்து ஆக்ஷேபிக்க முடியாது.

# INSURANCE.

# இன்ஷ்யூரென்ஸ்.

## A Farmer and Insurance.

ஒரு குடியானவனும் இன்ஷ்யூரென்ஸும்.—இங்க்லண்டில் ஒரு குடியானவன் தனது நெற்களஞ்சியக் கட்டிடத்தை இன்ஷ்யூர் செய்திருந்தான். கொஞ்சகாலத்துக்குப் பிறகு அந்தக் கட்டிடம் நெருப்புக்கிரையாயிற்று. இன்ஷ்யூரென்ஸ் கம்பெனியார் நெருப்பு விபத்தைப்பற்றித் தீர விசாரித்துப் பின்பு நஷ்டத்துக்கு ஈடு செய்ய தங்களுடைய உத்யோகஸ்தரை அனுப்பினார்கள். ஒரு வீடு அல்லது கட்டிடம் நெருப்புக்கிரையானால் நஷ்டத்தின் மதிப்பைக் கம்பெனியார் கொடுத்து விடலாம்; அல்லது அந்த எரிந்துபோன கட்டிடத்தைக் கட்டிக்கொடுத்து நஷ்டத்துக்கு ஈடுசெய்து விடலாம் என்று இன்ஷ்யூரென்ஸ் காண்ட்ராக்டில் நிபந்தனை ஏற்பட்டிருந்தது. இன்ஷ்யூரென்ஸ் கம்பெனியார் ஷை குடியானவனுடைய களஞ்சியத்தைக் கட்டிக்கொடுத்து விட்டார்கள். கொஞ்சகாலத்துக்குப் பிறகு வேறொரு இன்ஷ்யூரென்ஸ் கம்பெனியின் ஏஜெண்டு அந்தக் குடியானவனிடம் வந்து அவனுடைய ஆயுளை இன்ஷ்யூர் செய்து அவனுக்குப் பிற்காலம் அவன் மனைவி ஜீவனத்துக்குக் கஷ்டப்படாமல் செய்து கொள்ளும்படி கேட்டார். அதற்குக் குடியானவன், "வேண்டாமய்யா வேண்டாம், முன்னொருவர் ஏமாற்றினதுபோல் என்னை ஏமாற்ற முடியாது. நான் செத்துப்போனால், நீங்கள் இங்கே வந்து எனது பெண்சாதிக்கு வேறு ஒரு புருஷன் கட்டிக்கொடுப்பதாகச் சொல்லுவீர்கள். ஆகையால் வேண்டாம்." என்று பதில் சொன்னான்.

## Hints for Agents.

1. ஏஜெண்டுகளுக்கு சில குறிப்புகள் —இன்ஷ்யூர் செய்ய ஸம்மதித்தவர்களை டாக்டர் பரிக்ஷைசெய்யும்போது அவரை மாத்ரம் தனியாக டக்டரிடம் அனுப்புவது பிசகு.

2. சென்றுபோன காலம் மறுபடியும் திரும்பி வருதில்லை. ஒவ்வொருநாளும் எவ்வளவு கார்யம் செய்து முடிக்கமுடியுமோ அவ்வளவும் செய்து முடிக்கவேண்டும்.

3. ஏஜெண்டானவர் தமது ஆயுளை இன்ஷ்யூர் செய்து தம்மை நம்பியிருக்கும் பெண்சாதி பிள்ளைகளுக்கு தமக்குப் பிற்காலத்தில் கஷ்டம்நேரிடாதபடி ஏற்பாடுகள் செய்து வைக்கவேண்டும். இப்படிச் செய்வதால் ஏஜெண்டு பிறரை இன்ஷ்யூர் செய்யும்படி சொல்லும் வார்த்தைகளுக்கு மதிப்பு ஏற்படும்.

4. மனிதனுடைய மனசை வச்யப்படுத்து. மனசை வச்யப்படுத்தாதவரையில் அவர் பேனாவை யெடுத்து கடுதாசியில் கைநாட்டமாட்டார். கணக்குகளை எடுத்துக் காட்டுவதால் அவர் மனம் இளகாது. தமது மனைவிக்குப் பிற்காலத்தல் ஓர் ஆதரவு ஏற்படவேண்டும் என்னும் விஷயம் அவர் மனசை இளகச் செய்யும். எவ்வளவு தொகைக்கு இன்ஷ்யூர் செய்ய வேண்டுமென்பது அவ்வளவு முக்யமானவிஷயமல்ல.

## Rajas and Insurance.

ராஜாக்களும் இன்ஷ்யூரென்ஸும்.—சில ஜனங்கள் இன்ஷ்யூர் செய்வதால் அவர்கள் இன்ஷ்யூர் செய்யும் கம்பெனிகளுக்கு ரொம்ப நஷ்டம் ஏற்படுவதுண்டு. இந்தியாவைப்பற்றின மட்டில் ராஜாக்கள், ஜமீன்தார்கள், பெரிய நிலஸ்வான் தார்கள் ஆகிய இவர்கள் இன்ஷ்யூர் செய்வதால் இன்ஷயூரென்ஸ் கம்பெனிகளுக்கு நஷ்டமேற்படக்காரணமுண்டு. இவர்களுக்கு ஸமானமாக லண்டனில் வெஸ்ட் எண்ட் என்னும் பாகத்திலுள்ள ரொம்ப பணக்காரர்களான ப்ரபுக்களைச்சொல்லலாம். இந்தியாவிலுள்ள இந்தப்பணக்காரர்கள் மிதமிஞ்சிச் செலவழித்து ஆடம்பரத்துடன் வஸித்துவருகிறார்கள். இவர்களுடைய தயவை எதிர்பார்த்து இருப்பவர்களும், இவர்களுடைய ஏழை பந்துக்களும், இவர்களை ஸதாசூழ்ந்துகொண்டு இவர்களுடைய பணத்தைப் பறிக்கப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் ரொம்ப ஆடம்பரத்துடன் கண்டபடி செலவழித்து வருவதால் தேகத்துக்கும் மனஸுக்கும் உண்டாகும் கெடுதிகளை, ஒருவாறு குறைக்க, இங்க்லீஷ்காரர்கள் க்ரிக்கெட், டென்னிஸ், கோல்ப், முதலிய விளையாட்டுகளில் காலங்கழிப்பதுபோல் இவர்கள் தேகப்பயிற்சி செய்து தேகத்தை ஸரியாய்ப் பார்த்துக்கொள்வதில்லை. இவர்கள் இன்ஷ்யூர் செய்வதென்றால், ஏராளமான தொகைக்கு இன்ஷ்யூர் செய்கிறார்கள். மேலும் இவர்கள் தேகஸுகம் ஸரியான நிலைமையிலிருக்கிறதா என்று பார்ப்பதிலும் ரொம்ப ச்ரமம் ஏற்படுகிறது. ஏனென்றால், இவர்கள் வைத்யர்களைக்கொண்டு தேகஸௌக்யம் எப்படியிருக்கிறதென்று பரீக்ஷிக்கவும் நன்றாய் இடங்கொடுப்பதில்லை. இவர்களை இன்ஷ்யூர் செய்வதால் தங்களுக்கு நஷ்டமேற்படும் என்று நினைப்பதுபோலவே, அநேகம் கம்பெனிகள் ஸ்திரீகளை இன்ஷ்யூர் செய்ய ஸம்மதிப்பதில்லை. ஸ்த்ரீகளை இன்ஷ்யூர்செய்வது அவ்வளவுநல்லதல்ல என்று அநேகம் கம்பெனிகள் அபிப்ராயப்படுகின்றன. ஸ்த்ரீகளுடைய ப்ரஸவகாலத்தில் அவர்களை ஸரிவரப் பார்த்துக் கொள்ளத்தவறுவதால் அவர்களில் மரணவிகிதம் அதிகமாயிருக்கிறது.

# EDUCATION.

## வித்யா விஷயம்.

### Technical Scholarships.

டெக்னிகல் ஸ்காலர்ஷிப்புகள்.—ஐரோப்பாவுக்குப்போய் கைத்தொழில் டெக்னிகல் கல்வி கற்பதற்காக பத்து இந்தியர்களுக்கு கவர்ன்மெண்டார் ஸ்காலர்ஷிப்புகள் கொடுத்திருக்கிறார்கள்.

### Proposed Dacca University.

டாக்கா ஸர்வகலாசாலை.—வங்காளத்திலுள்ள டாக்காவில் ஒரு ஸர்வகலாசாலை ஸ்தாபிப்பதன் விஷயமாக, வங்காள கவர்ன்மெண்டார் ஒரு ஸகீம் தயார் செய்து இந்தியா கவர்ன்மெண்டுக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்று தெரிகிறது. ஷை யூனிவர்ஸிட்டியில் மாணவர்கள் யூனிவர்ஸிட்டி கட்டிடங்களிலேயே வஸித்துக் கல்வி கற்பார்கள். இப்படிப்பட்ட யூனிவர்ஸிட்டி இந்தியாவில் இது தான் முதலாவதாகும். இதை ஸ்தாபிப்பதற்கு ஒரு சட்டம் செய்வதற்காக ஒரு ட்ராப்ட் மசோதாவையும் வங்காள கவர்ன்மெண்டார் இந்தியா கவர்ன்மெண்டுக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

### School Hygiene.

பள்ளிக்கூட ஸுகாதாரம்.—இங்க்லண்டிலும், மற்ற ஐரோப்பிய தேசங்களிலும், பள்ளிக்கூடங்களின் ஸுகாதார நிலைமை எப்படியிருக்கிறதென்று ஆராய்வதற்காக வேண்டிய ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். இந்தியாவிலும் பள்ளிக்கூடங்களின் ஸுகாதார நிலைமை நேராக இருக்கிறதா என்று பார்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டார் கொஞ்சகாலத்துக்கு முன்னால் வெளியிட்ட கல்வியைப்பற்றிய தங்கள் தீர்மானத்தில் சொல்லியிருந்தார்கள். அதன்படியே இந்தியா கவர்ன்மெண்டார், இது விஷயமாய் வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று மாகாண கவர்ன்மெண்டுக்குத் தெரிவித்திருந்தார்கள். சென்னை கவர்ன்மெண்டாரும் ஸமீபத்தில் இதற்காக ஒரு கமிட்டி ஏற்படுத்தியிருக்கிறார்கள். எந்தெந்த விஷயமாய் ஆராய்ச்சிகள் செய்யவேண்டுமென்றும், ஒரு பெரிய கமிட்டி ஏற்படுத்துவதற்கு மெம்பர்களின் பெயர்கள் தெரிவிக்கவேண்டும் என்றும், கமிட்டிக்குத் தெரிவித்திருக்கிறார்கள். பெரிய கமிட்டி ஏற்பட்டானதும் வேலை ஆரம்பிக்கப்படும். முதலில் சென்னையிலுள்ள பாடசாலைகளின் ஸுகாதார நிலைமையைப்பற்றி ஆராய்ச்சிகள் நடத்துவார்கள்.

### Some Changes in the Grant-in-Aid Code.

"க்ராண்ட் இன் எய்ட் கோடில் சில திருத்தங்கள்.—ஸமீபத்தில் வெளியான போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜட்டில், க்ராண்ட் இன் எய்ட் கோட் ஸம்பந்தமாய் சில புதிய திருத்தங்கள் ப்ரசுரிக்கப்பட்டிருக்கின்றன. த்ரவிய ஸகாயம் பெறும் ப்ரைமரி ஸ்கூல்களில் வேலை செய்யும் உபாத்யாயர்களுக்கு வருஷத்தில் 36-ரூபா க்ராண்டும், அதைத் தவிர அவ்வருஷத்தில் அந்த ஸ்கூலில் ஸராஸரி தினமொன்று எத்தனை மாணவர்கள் வந்திருக்கிறார்களென்பதை கணக்கிட்டு அதன் மீது தலைக்கு 8 அணா வீதம் அலவன்ஸும் கொடுக்கப்பட்டு வந்தது. தற்போது இது மாற்றப்பட்டிருக்கிறது. இனிமேல், ட்ரெயின்ட் உபாத்தியாயர்களுக்கு 42 ரூபாயும் ட்ரெய்னிங்ஆகாதஉபாத்தியாயர்களுக்கு 36 ரூபாயும் வருஷமொன்றுக்கு கொடுக்கப்படும். மேலும், ஹயர் எலிமெண்டெரி க்ரேடில் போதனாமுறை கற்ற உபாத்தியாயர்களுக்கு ரூபா 48 கொடுக்கப்படும். வழக்கம்போல், அந்தந்த ஸ்கூல்களில் ஸராஸரி தினமொன்றுக்கு ஆஜராயிருந்த மாணவர்களைக் கணக்கிட்டு, தலைக்கு 8 அணா வீதம் கூடும் தொகையும் உபாத்யாயர்களுக்கு இனாமாகக் கொடுக்கப்படும். தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்த ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும், வாசிக்கும் ஸ்கூல்களுக்கு மற்ற வகுப்பினர்களின் தொகையைக் கணக்கிட்டு கொடுக்கப்படும் விகிதத்தைப் போல் 8-அணா வீதம் கொடுக்காமல், முன் குறித்த வகுப்புப் பிள்ளைகள் வாசிக்கும் ஸ்கூல்களில் அவர்களின் தொகையின்படி தலைக்கு ஒரு ரூபா வீதம் கொடுக்கலாமென்றும், வித்யா இலாகா அதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஸ்கூல்களின் அபிவ்ருத்தியின் பொருட்டு பெண் பள்ளிக்கூடங்களுக்கும் ஹயர் எலிமெண்டரி ஸ்கூல்களுக்கும் செலவிடப்படும் தொகையில் 100-க்கு 25-வீதம்தான் கொடுக்கலாமென்றிருந்ததை, உசிதமெனத்தோன்றினால், 50-வீதம் கொடுக்கலாமென்று ஸப் அஸிஸ்டண்ட் இன்ஸ்பெக்டர்கள் சிபார்சு செய்யக்கூடுமென்று மற்றொரு முக்யமான திருத்தமும் செய்யப்பட்டிருக்கிறது. போதனாமுறை பயின்று அல்லது பழக்கமடைந்து உள்ள உபாத்தியாயர்களுக்குப் பத்து ரூபாய்க்குக் குறைவாகச் சம்பளம் கொடுக்ககப்பட்டு வந்தால் அவர்களுக்கு ரூபா-10 கொடுக்கவேண்டு மென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அந்தந்த ஸ்கூல்களில் ஒரு வருஷத்தில் ஸராஸரி தினப்படி ஆஜராயிருந்த மாணவர்களின் தொகையைக்கணக்கிட்டு கொடுக்கப்படும் அலவன்ஸில் அந்த ஸ்கூலிலுள்ள எல்லா உபாத்தியாயர்களுக்கும் பங்கு கொடுக்க வேண்டுமென்றும் வரையறுக்கப்பட்டிருக்கிறது.

# ECONOMIC PRODUCTS.
## விலையுள்ள பொருள்கள்.

### Bael Tree.

வில்வமாம்.—வில்வமரத்தில் பலவகை உண்டு. அவைகளை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். பயிர் செய்யப்பட்டு வளரும் ஜாதி. தானாகவளரும் ஜாதி, தென்னிந்தியாவில் தானாக வளருகிற ஜாதிதான் வெகுவாயிருக்கிறது. இதன் காய்கள் சிறியவை. இதன் பழம் உண்ணஉதவாது. இதில் விதைகள் ஏராளம். வடஇந்தியாவில் பெரிய காய்கள் உள்ள ஜாதிமரங்கள் இருக்கின்றன. அவைகளில் காய்கள் பெரியவையாயும், கொஞ்சம் நீண்ட உருண்டையாயும் இருப்பதோடு பழத்தில் அதிக விதைகளிருப்பதில்லையாம். உள்ளிருக்கும் சதைப்பற்றுள்ள பாகம் உண்ண உதவும். இந்த ஜாதியில் மேலேயுள்ள ஒடு வெகுவாய் கெட்டியாயிருப்பதில்லையாம்.

காயில் ஒருவித பிசின் இருக்கிறது. இதை ஒட்டுவதற்கு உபயோகிக்கலாம். இதோடு சுண்ணாம்பைச் சேர்த்தால் நேர்த்தியான பசையாகிறது. இந்தப்பசையை வடஇந்தியாவிலும் மத்ய இந்தியாவிலும் கிணறு கட்டுவதில்உபயோகிக்கிறார்களாம். இது மிகவும் உறுதியாயிருப்பதோடு, ஜலத்தில் கெடுவதில்லையாம்.

சித்ரமெழுதுவதில் உபயோகப்படும் ஜலத்தில் கரைத்தெழுதும் வர்ணங்களோடு இந்தப் பிசினை உபயோகித்தால் படங்கள் ரொம்ப ப்ரகாசமாயிருக்கின்றனவாம்.

நமது இராஜதானியில் அநேகர் வில்வப் பழத்தை, எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்குப் பதிலாக உபயோகிப்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். இதனால் கண்ணுக்கு குளிர்ச்சியும் தேகத்துக்கு ஆரோக்யமும் ஏற்படுகின்றன.

சில காலத்துக்கு முன்னால் டச்சுக்காரர்கள் பழத்தின் ஒட்டிலிருந்து ஆவியாய்ப் மாறக்கூடிய தைலம் இறக்கிவந்தார்கள். புஷ்பத்திலிருந்து ஒரு வாஸனைத் தைலம் இறக்கப்படுகிறது.

வில்வப்பழம் வைத்யத்தில் ரொம்பவும் உபயோகப்படுகிறது. இது செங்காயாக இருக்கும்போது இதை உடைத்து வெயிலில் காயவைத்து விற்கிறார்கள். காய்ந்த வில்வக்குடுக்கைகளைக் குடைந்து விபூதி முதலியவைகள் போட்டு வைக்க உபயோகிக்கிறார்கள். காய்ந்துபோன வில்வப்பிஞ்சுகளை ருத்ராக்ஷங்களோடு சேர்த்து மாலையாக உபயோகிக்கிறார்கள்.

### Music from Milk.

பாலிலிருந்து ஸங்கீதம்.—எல்லா ஸங்கீதத்தையும்விட பாலால் செய்த வாத்யக்கருவியில்உண்டாகும் ஸங்கீதம் ரொம்ப இனிமையானதாம்.

தந்தத்தின் உற்பத்தி நாளுக்கு நாள் குறையவே அதற்குப் பதிலாக வேறு ஸாமான்களைப்போலிதந்தமாக உபயோகிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். கொரோஸோநட் என்னும் விதையை தந்தத்துக்குப்பதிலாக உபயோகிக்கப் படுவதைப்பற்றி சென்ற அக்டோபர் பிப்ருவரிமாஸத்து ஸஞ்சிகைகளில் தெரிவித்திருக்கிறோம். இப்பொழுதுபோலி தந்தம் பாலாலும் செய்யப்பட்டு வருகிறதென்று தெரியவருகிறது. பாலிலிருந்து வெண்ணெயைப் பிரித்தெடுத்து விட்ட பிறகு அந்தப்பாலை போலிதந்தமாக மாற்றி விடுகிறார்களாம். அந்த தந்தத்தால் பியானோ முதலிய வாத்யப் பெட்டிகளுக்கு கீ போர்டுகள் செய்து உபயோகிக்கிறார்கள். இப்படிச்செய்த வாத்யப்பெட்டியில் ஸ்வரம் ரொம்ப இனிமையாக இருக்கிறதாம். இந்தப் போலிதந்தத்துக்கு ஸைரோலிட் என்று பெயர். இந்த தந்தம் தயார் செய்வதற்காக இக்லண்டில் ஸ்ட்ரௌட் என்னும் இடத்தில் ஒரு பாக்டரி ஸ்தாபிக்கப்பட்டு வேலை நடந்துவருகிறது.

இந்த தந்தத்தால் குடையின் பொத்தான்கள், பொடக்ராப் சட்டங்கள், சீப்பு முதலியவைகள் செய்கிறார்களாம்.

இது வெகு நாள் கெடாமல் வருவதோடு. விலை மலிவாயும், நெருப்பால் கெடாமலும் இருக்கிறதாம்.

### Tomato Seed Oil.

தக்காளி விதை எண்ணெய்.—இட்டாலி தேசத்தில் சீமைத் தக்காளிப்பழங்களை டப்பியிலடைக்கும் சாலைகளில் இந்தப் பழத்தின் விதையை வெகு காலமாக உபயோகமற்றதென்றெண்ணி எறிந்துவந்தார்கள். இப்போழுதோ அவ்விதையிலிருந்து அதிசீக்ரத்தில் உலர்ந்து போகக்கூடிய ஒருவித எண்ணெய் எடுக்கப்படுகிறது. இதை வார்னிஷ்களில் கலந்து உபயோகிக்கிறார்கள். இட்டாலி தேசத்தில் தக்காளியை டப்பிகளில் அடைத்து வேறு தேசங்களுக்கு அனுப்பும் சாலைகள் அநேகம் இருக்கின்றன. அவைகளில் தக்காளிப்பழங்களை டப்பிகளில் அடைப்பதற்கு முந்தி விதைகளை வெகு ஜாக்ரதையாக எடுத்துவிடுவது வழக்கம். அங்கே பாமா மாகாணத்தில் மாத்ரம் 54,000 டன் தக்காளிப்பழம் டப்பிகளில் அடைக்கப்படுகிறது. இப்பொழுது அந்தப்பழத்தின் விதையிலிருந்து 600 டன் எண்ணெய் தயார் செய்யப்படுகிறதாம்.

# BUSINESS METHODS.
# வ்யாபார முறைகள்.

## Indian Customer.

இந்தியாவில் ஸாமான்கள் வாங்குகிறவர்கள்.- இந்தியாவில் ஐவேஜியுள்ளவர்கள் ஸாதாரணமாய்க் கடைக்குப் போனால் தாங்கள் பார்க்கும் ஸாமான்களில் எவை தங்களுடைய மனஸுக்குப்பிடிக்கின்றனவோ அவைகளை வாங்குகிறார்களே யொழிய தங்களுக்கு எந்த ஸாமான்கள் தேவையோ அவைகளை வாங்குவது கிடையாது என்று ஒரு இங்க்லீஷ் பத்ரிகை கூறுகிறது. இங்க்லீஷ்காரர்கள் அப்படியில்லையாம். அவர்களுக்கு எது தேவையோ அந்த ஸாமானையே வாங்குவார்களாம். கடைக்காரர்கள் இந்தியர்களை அவர்களுக்கு என்ன ஸாமான் வேண்டும் என்று கேட்பதில் யாதொரு ப்ரயோஜனமுமில்லையாம். இன்னின்ன ஸாமான்கள் இருக்கின்றன இவைகளை வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொல்லுவதுதான் வ்யாபாரிகளுக்கு நல்லதாம். இப்படி அந்தப்பத்ரிகையில் சொல்வது உண்மையாகவேயிருக்குமானால் இந்தியர்களுக்கு தங்கள் பணத்தை ஸரியான மார்க்கத்தில் செலவழிக்கத் தெரியாதென்றும், செட்டாகச் செலவுசெய்யத் தெரியாதென்றும் சொல்லலாம்.

## Advertisements on Notes.

நோட்டுகளில் விளம்பரங்கள்.—விளம்பரங்களை பத்ரிகைகளிலும் புஸ்தகங்களிலும் போடுவதோடு இப்போது வேறு இடங்களிலும் போட ஆரம்பித்திருக்கிறார்கள். ட்ராமா கம்பெனிக்காரர்கள் ஜட்கா வண்டிகளின் கூடுகளில் தங்கள் போடும் நாடகங்களின நோடீஸுகளை ஒட்டி விடுகிறார்கள். கடைக்காரர்கள் தங்கள் விளம்பரங்களைப் பெரியனவாய் அச்சிட்டு பெரிய அட்டைகளில் ஒட்டி ரோடுகளின் ஓரத்தில் மரம், கட்டிடம்இவைகளில தொங்கவிட்டும் சார்த்தியும் வைக்கிறாகள். "ஸன்லைட்" ஸோப் என்னும் சவர்க்காரம்செய்யும் கம்பெனியார் எல்லாக் கடைகளிலும் "ஸன்லைட் ஸோப்" என்று எழுதியுள்ள தகட்டை கதவு நிலைகளில் அடித்து வைத்திருக்கிறார்கள். ட்ராம்வே வண்டிகளில் அநேக ஸாமான்களினுடைய விளம்பரங்கள் போடப்பட்டிருக்கின்றன. ட்ராம்வே டிக்கட்டுகளிலும் ஒரு சிறிய விளம்பரம் அச்சிடப்பட்டிருக்கிறது.

நமது இந்தியாவிலேயே விளம்பரங்கள் இவ்வளவு மொம்முரமாய் செய்யப்படுமானால், மேல் நாடுகளில் கேட்க வேண்டுமா? கொஞ்ச காலத்துக்கு முன்னால் இங்க்லண்டில் இரண்டு கம்பெனிகள் தங்களுடைய ஸாமான்களின் பெயரை தபால் ஸ்டாம்புகளில் புள்ளி புள்ளியாக த்வாரம் செய்ய அனுமதி வேண்டுமென்று லண்டன் போஸ்ட்மாஸ்டர் ஜெனரலை அனுமதி கேட்டன. அப்படிச் செய்துகொள்ள ஏராளமான பணமும் கொடுப்பதாகச் சொல்லின. போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் அதற்குஸம்மதிக்கவில்லை.

வெறொரு மருந்து கம்பெனியார் யுத்தக்கப்பல்களின் பக்கங்களில் விளம்பரம் செய்ய ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டாரை அனுமதி கேட்டார்கள். தங்களுடைய மருந்துகள் பெட்டி ஒன்று இன்ன விலையாகுமென்று மாத்ரம் தெரியப்படுத்த அனுமதி கேட்டார்கள். ஆனால் கவர்ன்மெண்டார் அதற்கு ஸம்மதிக்கவில்லை. ஆனால் ஸ்வீடன் தேசத்திலோ கவர்ன்மெண்டாரே விளம்பரம் செய்ய வ்யாபாரிகளை வருந்தியழைக்கிறார்கள். கவர்ன்மெண்டு கரன்ஸி நோட்டுகளின் பின்புறத்தில் ஒன்றும் அச்சிடாமலிருக்குமாதலால் அந்தக் காலியிடத்தில் வ்யாபாரிகள் விளம்பரம் போடுவதற்கு அந்த கவர்ன்மெண்டார் ஸம்மதித்திருக்கிறார்கள். இதனால் கவர்ன்மெண்டுக்கு நல்ல வரும்படி வரும் என்பதில் ஸந்தேகமில்லை.

## A Novelty in Advertising.

விளம்பரம் செய்வதில் ஒரு நூதன முறை.—சென்னையிலுள்ள ஒரு விளம்பரக் கம்பெனியார் ஒரு புதுமுறையான விளமபர ஏற்பாடு செய்யப்போகிறார்களாம். அந்தக்கம்பெனியார் முக்யமான பட்டணங்களுக்குப்போய் அங்கே விளம்பரங்கள் செய்வார்கள். அவர்கள் செய்யும் விளம்பர ஏற்பாடு பின் வருமாறு.

தாங்கள் விளம்பரம்செய்யும் கம்பெனிகளின் பெயரையும் அந்தக்கம்பெனிகளுக்கு ஒரு தடவைபோய் ஸாமான்களைப்பார்ப்பதால் ரொம்ப நன்மையுண்டென்றும், அந்தக் கம்பெனிகளின் ஸாமான்கள் இன்னின்னவையென்றும் அவைகளைவாங்குவதால் இன்னவிஷயத்தில் ஸாதகம் என்றும் கண்ணாடியில் எழுதி மாஜிக் லாண்டர்ன் என்னும் யந்த்ரத்தில் வைத்து தினம் மாலை முதல் இரவு $9\frac{1}{2}$-மணிவரையில் வெளியில் படம் காட்டுவதுபோல்காட்டுவார்கள். இப்படிக்காட்டுவதை ஜனங்கள் பார்ப்பதால்இது விளம்பரமாகிறது. ஆனால் ஜனங்கள் ஒருதடவை பார்த்தபின்மறுபடியும் பாரக்க ப்ரியப்படமாட்டார்களாகையால், ஷை கம்பெனியார் இடையிடையே வேடிக்கைப்படங்களையும் நாடக ஸம்பந்தமான படங்களையும் காட்டுவார்கள். இந்த உபகரணங்களால் ஜனங்கள் விளம்பரங்களை அடிக்கடி பார்க்கும்படி நேரிடுகிறது. இப்படி விளம்பரம் செய்வதற்கு ஷை விளம்பரக் கம்பெனியார் மிதமாக சார்ஜ் கேட்பார்களாம்.

# SCIENCE, MACHINERY AND INVENTION.
## சாஸ்த்ரமும், யந்த்ரங்களும், நூதன கற்பிதமும்.

### Agricultural Implements.

விவஸாயக்கருவிகள்.—சென்னைக் கடல் வ்யாபார ரிபோர்ட்டால் விவஸாய கருவிகளும் மற்றதொழிலுக்கு வேண்டிய கருவிகளும் அதிகம் இறக்குமதியாயிருக்கிறதென்று தெரியவருகிறது.

விவஸாயக் கருவிகள் 1911-12-ம் வருஷத்தில் 1½ லக்ஷத்துசொச்சம் ரூபாய்க்குத் தருவிக்கப்பட்டன. 1912-13-ம் வருஷத்தில் 2-லக்ஷத்து 67-ஆயிரத்துச் சொச்சம் ரூபாய்க்குத் தருவிக்கப்பட்டன. இந்த அம்சத்தில்மண்வெட்டி, களைவாரி முதலிய ஸாமான்கள் தான் அதிகம் இறக்குமதியாயிருக்கின்றன. நமதுநாட்டுக்கொல்லர்கள் செய்து கொடுக்கக்கூடிய இந்தஸாமான்கள் அயல் நாடுகளிலிருந்து ரொம்பவும் வருவது மிகவும் விஸனிக்கத்தக்கதே.

மற்றக் கருவிகளும் ஆயுதங்களும் 1911-12-ம் வருஷத்தில் கிட்டத்தட்ட 3-லக்ஷம் ரூபாய்க்கும், 1912-13-ம் வருஷம் 4-லக்ஷத்து 14-ஆயிரத்துச் சொச்சம் ரூபாய்க்கும் தருவிக்கப்பட்டன.

### Import of Machinery.

யந்த்ரங்களின் இறக்குமதி.—சென்னை ராஜதானியில் யந்த்ரங்களின் இறக்குமதி அதிகமாய்க்கொண்டு வருகிறதென்று தெரியவருகிறது. 1910-11-ம் வருஷம் இந்தியா முழுமைக்கும் இறக்குமதியான யந்த்ரங்களின் மதிப்பு 460,61,000 ரூபாய் ஆகும். 1912 13-ம் வருஷத்திலோ 483,62,000 ரூபாய்க்கு யந்த்ரங்கள் தருவிக்கப்பட்டன. இதனால் இந்தியாமுழுமைக்கும் 1910-11-ம் வருஷத்தை விட 1912-13-ம் வருஷத்தில் மதிப்பில் 100-க்கு 5-பங்கு அதிகமாக யந்த்ரங்கள் தருவிக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிகிறது.

ஆனால் சென்னை ராஜதானியில் மாத்ரம்,

| | | ரூ. |
|---|---|---|
| 1910-11 | வருஷத்தில் | 43.26 லக்ஷம். |
| 1911-12 | ... | 49.32 ,, |
| 1912-13 | ... | 58.06 ,, |

ரூபாய்க்கும் யந்த்ரங்கள் தருவிக்கப்பட்டிருக்கின்றன. அதாவது 1910-11-ம் வருஷத்தைவிட 1912-13-ம் வருஷத்தில் மதிப்பில் 100-க்கு 34-பாகம் அதிகமாக யந்த்ரங்கள் தருவிக்கப்பட்டிருக்கின்றன.

இப்படி யந்த்ரங்களின் இறக்குமதி அதிகமாகியிருப்பதற்குக் காரணம் இரண்டொரு கம்பெனிகள் விலை உயர்ந்த யந்த்ரங்களை வாங்கியிருக்கக்கூடுமென்று சொல்லலாம். ஆனால் உண்மையில் குறைந்த விலையுள்ள யந்த்ரங்கள் அதிகமாகத் தருவிக்கப்பட்டதே இதற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. அநேக இஞ்ஜினியரிங் கம்பெனிகளும், இஞ்ஜினியரிங் ஏஜென்ஸிகளும் சென்னையில் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதே இதற்குப் போதுமான ஸாக்ஷ்யமாகுமென்றும் சொல்லப்படுகிறது.

யந்த்ரங்களில் நெசவு தொழிலுக்கு வேண்டிய யந்த்ரங்கள்தான் அதிகமாக இறக்குமதி செய்யப்பட்டன. சென்ற 1912-13-ம் வருஷத்தில் 16·60-லக்ஷம் ரூபாய்க்கு இந்த யந்த்ரங்கள் தருவிக்கப்பட்டன. இந்தத் தொகை 1911-12-ம் வருஷத்தியதை விட 7·89-லக்ஷம் ரூபாய் அதிகமாக இருக்கிறது. மதுரையிலும் கோயமபுத்தூரிலும் மில்லுகள் புதியனவாகப் ஸ்தாபிக்கப்பட்டபடியால் அவைகளுக்காக அதிகப்படியாக நெசவு தொழிலுக்கு வேண்டிய யந்த்ரங்கள் தருவிக்க நேர்ந்தது.

மின்ஸார யந்த்ரங்களின் இறக்குமதியின் மதிப்பு சென்றவருஷத்தில் 1·19-லக்ஷம் ரூபாய் அதிகமாயிருக்கிறது. சுரங்க வேலைக்கு வேண்டிய யந்த்ரங்களும், தையல் யந்த்ரங்களும்குறைவாகவே இறக்குமதியாயின.

யந்த்ரங்களின் மதிப்பில் நூற்றுக்கு 89-பாகம் இங்கலண்டிலிருந்து தருவிக்கப்பட்டவையின் மதிப்பாகும். யந்த்ரங்கள் நமதுதேசத்துக்கு அதிகமாக இறக்குமதியாவது நமது தேசத்தின பொருளாதார நிலைமைக்கு மிகவும் ஸாதகமானதென்று சொல்லவேண்டும்.

### A Glass Bottomed Ship.

அடியில் கண்ணாடியுள்ள கப்பல்.—ஸமுத்ரத்திலுள்ள ஜீவராசிகளையும், ஸமுத்ரத்தில் ரொமப ஆழமான இடங்களையும் ஆராய்சசி செய்வதற்கு உபயோகப்படக்கூடியதாய் நூதன கப்பல் ஒன்று கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அந்தக்கப்பல் 60 அடி நீளமுள்ளது. அதன் அடிப்புறம் ரொம்ப தெளிவான கண்ணாடித் தகட்டால் செய்யப்படும். ஜலத்தில் அமிழ்ந்தும் வெளிச்சம் கொடுக்க கூடியதான விளக்குக்கள் அந்தக் கப்பலில் கொண்டு போவார்கள். இந்த விளக்குகளைக் கொண்டு ஜலத்திலுள்ள ஜீவராசிகளின தன்மைகளையும், ஸமுத்ரத்தில் உடைந்து அல்லது அமிழ்ந்துபோன கப்பல்களின் நிலைமையையும் சோதிப்பார்களாம்.

# LAW.

## சட்டம்.

### Right to Levy Land-tax.

நிலந்தீர்வை போடும் ஸ்வதந்த்ரம்.—ஒரு நிலத்தின் மேலே எத்தனை தீர்வை வேண்டுமானாலும் கவர்ன்மெண்டார் விதிக்கலாம் என்றும், இது ஸம்பந்தமாக ஸிவில் வ்யாஜ்யம் செல்லாதென்றும் ஸமீபத்தில் ஹைகோர்ட்டில் ஒரு தீர்மானமாயிற்று.

ஒரு நஞ்சை நிலத்தின்மேல் விதித்திருந்த தீர்வையை ஸொந்தக் காரரிடமிருந்து ஸர்க்கார் வஸூல் செய்து விட்டார்கள். அந்த வருஷம் போதுமான ஜல ஸௌகர்யமில்லாதுபோனதால், அநத நிலம் ஸாகுபடியாகவில்லை. நில ஸொந்தக்காரர் தீர்வையைச் செலுத்தினபின் கவர்ன் மெண்டார் அதைத் தமக்குத் திருப்பிக்கொடுத்து விடவேண்டுமென்று ஸிவில் கோர்ட்டில் வ்யாஜ்யம் செய்தார். எப்பொழுது கவர்ன் மெண்டார் நன்செய் தீர்வை போடுகிறார்களோ, அப்பொழுதே அவர்கள் நிலத்தைப் பயிர் செய்வதற்கு வேண்டிய ஜல வஸதிகளைச் செய்து கொடுப்பதாக ஒப்பந்தம் செய்தது போலாகிறதென்றும், ப்ரஸ்தாபக் கேஸில் ஜலவஸதிக் குறைவால ஸாகுபடி செய்ய முடியாமற் போயிற்றென்றும், ஒப்பந்தப்படி கவர்ன் மெண்டார் நடந்து கொள்ளாததால் அவரிடமிருந்து வஸூல்செய்த தீர்வையைத் திருப்பிக்கொடுத்துவிட வேண்டுமென்றும் வாதிக்கப்பட்டது. இந்த வாதத்தை கீழிரண்டு கோர்ட்டார்களும் அங்கீகரித்தார்கள். ஆனால் வாதி செலுத்தியதீர்வையில் ஒரு பாகத்தை மட்டும் அவருக்கு கவர்ன்மெண்டார் திரும்பிக் கொடுத்துவிட வேண்டுமென்று தீர்மானம் சொன்னார்கள். ஆனாலும் கவர்ன்மெண்டார் இந்தத்தீர்ப்பில் த்ருப்தியடையாமல் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்கள்.

வாதி வாப்ஸ் செய்யக்கேட்டது நிலத்தீர்வையேயென்றும், அந்த நிலத்தீர்வை யிவ்வளவென்று தீர்மானிப்பது கவர்ன்மெண்டார் இஷ்டமென்றும், வாதிக்கும் கவர்ன்மெண்டாருக்கும் ஏதோ உடன்படிக்கையுள்ளதென்று கீழ்க்கோர்ட்டார் அனுமானித்தது ஸரியல்ல வென்றும், ஹைகோர்ட் ஜட்ஜ்கள் அபிப்ராயப்பட்டார்கள். மேலும், வாதி தீர்வை அதிகமானதென்று நினைத்தால் அவர் கவர்ன்மெண்டுக்கு அப்பீல் செய்துதான் நிவர்த்தி தேடிக்கொள்ள வேண்டுமென்றும், 1864-வருஷம் 11-வது ஆக்ட் 58-ஸெக்ஷன்படி நிலத்தீர்வை விஷயமாக கேஸுகளை அங்கீகரித்து விசாரிக்க ஸிவில் கோர்ட்டுக்கு அதிகாரமில்லை யென்றும் சொன்னார்கள். முடிவில் கீழ்க்கோர்ட் தீர்மானங்களை ரத்துசெய்து வாதியைக் கவர்ன்மெண்டுக்கு இந்தக கேஸால் உண்டான செலவைக்கொடுக்கும்படி தீர்மானித்தார்கள்.

### Suits Against the Government.

கவர்ன்மெண்டின்மேல் வ்யாஜ்யம்.—ஒருவர் கவர்ன் மெண்டின்மேல் வ்யாஜ்யம் செய்தால் அது விஷயமாய் கவர்ன்மெண்டு அதிகாரிகள் என்ன செய்யவேண்டும் என்பதை பற்றி ஒரு ஆர்டர் கொஞ்சகாலத்துக்குமுன் வெளியிடப்பட்டது.

ஒருவர்மேல் கவர்ன்மெண்டு வ்யாஜ்யம் தொடங்குவதாயிருந்தாலும் ஸரி, அல்லது ஒருவர் கவர்ன்மெண்டின்மேல் கொண்டுவந்த வ்யாஜ்யத்தில் ப்ரதிவாதம் செய்வதாயிருந்தாலும் ஸரி, அப்படிச் செய்வதற்கு முன்னால் ஒரு வக்கீலோடு யோசனை கேட்கவேண்டுமென்று ஒரு பொது ரூலும் இதுவரையில் கிடையாது. இப்படி கவர்ன்மெண்டு பக்கம் வ்யாஜ்யம் தொடங்குவதற்கும், அல்லது கவர்ன்மெண்டின் மேல் ஒருவர் கொண்டுவந்த வ்யாஜ்யத்தில் ப்ரதிவாதம் செய்வதற்கும் சட்ட ஸம்பந்தமான யோசனை கேட்டுச் செய்வது நல்லதென்று கவர்ன்மெண்டார் அபிப்ராயப் படுகிறார்கள்.

ஒருவர் கவர்ன்மெண்டிமேல் நோடீஸ் கொண்டுவந்து அதற்காக ஸிவில் ப்ரொஸீஜர் கோடு 80-வது ஸெக்ஷன்படி கவர்ன்மெண்டுக்கு நோடீஸ் கொடுத்ததனாலேயே, வக்கீலிடம் யோசனை கேட்கவேண்டுமென்பதில்லை. ஆனால் முக்யமான கேஸுகளில், அந்த நோடீஸைப் பெறும் உத்யோகஸ்தர் வக்கீலிடம் யோசனை கேட்பது நல்லது. ஒரு வ்யாஜத்தில் கவர்ன்மெண்டு பக்கம் ப்ரதிவாதம் செய்யும்படி ஸாங்க்ஷன் செய்ய அதிகாரமுள்ளவர்கள் வக்கீல் யோசனையின்படியே நடக்கவேண்டுமென்பதும் இல்லை. ஆனால் வக்கீல்யோசனையை எடுத்துக்கொள்ளாவிட்டால் அப்படி எடுத்துக்கொள்ளாததற்குக் காரணங்களை எழுதிவைக்கவேண்டுவது அவசயம். ஒவ்வொரு ஆபீஸரும், ஒரு வ்யாஜ்யம் அல்லது அப்பீலைத் தொடங்கும்போதும, அல்லது அவைகளில் ப்ரதிவாதம் (டிபென்ஸ்) செய்யும்போதும், மேலேசொன்ன நிபந்தனைகளுக்கு இணங்கத் தகுந்த வக்கீலிடம் அந்த வ்யாஜ்யம் அல்லது, அப்பீல ஜயிக்குமா என்பதைப் பற்றி யோசனை கேட்கவேண்டியது அவச்யம். கலெக்டர்கள் அல்லது ஜில்லாவிலுள்ள மற்ற ஆபீஸர்கள் கவர்ன்மெண்ட் ப்ளீடரை வ்யாஜ்யம் ஸம்பந்தமாய் யோசனைகேட்கவேண்டும். அந்த ஆபிஸர்கள் மேலதிகாரிக்கு இது விஷயமாய் ரிபோர்ட் செய்யும்போது வக்கீலிடம யோசனை கேட்டதாக ரிபோர்ட்டில் தெரிவிக்கவேண்டும். போர்ட் அப் ரெவின்யூவும், மற்ற டிபார்ட்மெண்ட் தலைவர்களும், வெளியூர் வ்யாஜ்யங்கள் ஸம்பந்தமாக சென்னை கவர்ன்மெண்ட் ப்ளீடரையும், சென்னையில் நடக்கும் வ்யாஜ்யங்கள் ஸம்பந்தமாக கவர்ன்மெண்ட் ஸொலிஸிடரையும் ஆலோசனை கேட்கவேண்டும். டிபார்ட்மெணடின் தலைவர்கள் அட்வோகேட் ஜெனரலிடமும் ஆலோசனை கேட்க அதிகாரம் உண்டு. ஆனால் ரொம்ப முக்யமான கேஸுகளிலதான் அவரை ஆலோசனை கேட்கவேண்டியது.

# MEDICINE.

## வைத்யம்.

### An Ayurvedic College in Delhi.

டெல்லியில் ஒரு ஆயுர்வேதக் காலேஜ்.—இந்த்யாவின் தலைமைப் பட்டணமாகிய டில்லியில் ஆயுர்வேதம், யூனனி முறைகளில் வைத்ய வித்தையைக் கற்றுக்கொடுக்க ஒரு காலேஜ் ஏற்படுத்தவேண்டுமென்ற முயற்சி பலமாயிருக்கிறது. 25 ஆயிரம் ரூபாய் வரையில் கையொப்பங்களாயிருக்கின்றன. பாடியாலா மஹாராஜா மாதமொன்றுக்கு 150 ரூ கொடுப்பதாக ஒத்துக்கொண்டிருக்கிறார். ஜஸ்டிஸ் மிஸ்டர் ஷாதீன் 1000 ரூ கொடுத்திருக்கிறார்.

### Evil Effects of Soap.

ஸோப்பின் கெடுதிகள்:—ஸோப்பின் கெடுதிகளைப்பற்றி ஒருவர் ஒரு இங்க்லீஷ் பத்ரிகைக்குப்பின் வருமாறு எழுதுகிறார்.

(1) எல்லா ஸோப்புகளும் தேகத்தில் எரிச்சலை யுண்டாக்கும் குணமுடையன.

(2) பால்யர்களுக்கும் வ்ருத்தாப்பியர்களுக்கும் ஸோப்பால் உடம்பெரிச்சல் யவனர்களைவிட அதிகம்.

(3) விலை ஸரஸமான ஸோப்புகள் பருத்திக்கொட்டை எண்ணெயும் அழுகின கொழுப்பும் சேர்த்து செய்யப்படுவதால், அவைகளால் உடம்புக்கு எரிச்சலதிகம்.

(4) ஸோப்புகளுக்கு பாக்டீரியாக்களைக் கொல்லும் சக்தியில்லை. ஒரு வேளை இந்த சக்தியுள்ள சரக்கைச் சேர்த்து ஸோப செய்தாலும், ஸோப்புக்கு இந்தசக்தி யுண்டாவதில்லை.

(5) நரம்புகளுக்கும் ரத்தக்குழாய்களுக்கும் நன்மை யுண்டாகும் பொருட்டு கந்தகத்தை சேர்க்கிறார்கள். ஆனால் எந்த கார்பாலிக் ஆஸிட்டாகட்டும், மற்றெந்த வஸ்துவாகட்டும் எரிச்சலை அதிகப்படுத்துகிறது.

(6) குக்கில்யத்தால் ஸோப்புக்கு அவ்வளவு கெடுதி கிடையாது. அழுக்குப் போக்குவதற்காக, ஸோப்போடு சேர்க்கப்படும் பேரபீன், பென்ஸீன் ஆகிய சரக்குகள் ஸோப்பின் கெடுதியை அதிகப்படுத்துகின்றன.

### The Secret of Perpetual Youth.

என்னாளும் பால்யம்.—ஒருவன் ஸரியாய் வாழ்ந்து வருவானானால் ஆயுள்கால முழுமையும் பால்யமாகவே யிருக்கலாம். ஒருவர் என்னாளும் பால்யமாயிருக்க தம் அனுபவத்தில்கைவந்த சில ஸாதனங்களைச்சொல்லுகிறார்:

"எனக்கு வயது தொண்ணூறுக்குக்கிட்டத்தட்டவாயினும், நான் பாலனாய்த்தானிருக்கிறேன். இரகஸ்யம் இதுதான். ஒருவன் மனம்போன போக்கெல்லாம் போகாமலிருந்து நன்றாய்ச் சாப்பிடவேண்டும். மிதமிஞ்சி சாப்பிடக்கூடாது. சிந்தனையுடையவனாயிருக்கவேண்டும். மேலான லக்ஷ்யங்களைக் கொள்ளவேண்டும். மேலோர் கண்டறிந்த விஷயங்களை மனதிலிருத்திக்கொள். அல்ப விஷயங்களில் காலத்தை வீணாக்காதே. உன் யோசனை விசாலமானதாயிருக்கட்டும். பழங்கள், காய்கறிகள், ரொட்டி, வெண்ணெய், முட்டை முதலிய ஆகாரங்களைச் சாப்பிடு. அப்படம் ஒயினையும் பாலையும் குடி. ப்ரதிதினமும் காலையில் ஸ்நானம் செய், தேகத்தை ஒரு துவாலையால் துடை. 24 மணிக்கொருதரம் ஆடையை மாற்று. உன்னை நீ அறி."

### Urinary Defects in Children.

குழைந்தைகளுக்கு நீரிறங்காவிட்டால்சிகித்ஸை. குழந்தை பிறந்து 12-மணி நேரத்திற்குள் நீர் இறங்காவிட்டால் உடனே டாக்டருக்குத் தெரிவித்துத் தகுந்த சிகித்ஸை செய்ய வேண்டும். நீர்க்கடுப்பால் குழந்தை கஷ்டப்படுவதாகத் தெரிந்தால், வாயகன்ற ஒரு பாத்திரத்தில் இளஞ்சூடான வெந்நீர் ஊற்றி குழந்தையை ஐந்து நிமிஷம உட்காரவைத்து எடுக்கவேண்டும். நீர்க்கடுப்பு விட்டுப்போகும். குழந்தைகளுக்கு அஜீரணத்தால் வயிற்றுக் கழிச்சலிருக்கும்பொழுது நீர் கொஞ்சம் மட்டாய்த்தான் இறங்கும். அப்பொழுது பாலிக்கஞ்சியை அதற்குக் கொடுக்கவேண்டும். அஜீரணம் நீங்கின் நீர் தாராளமாய்ப் போகும்.

### Healing Cut Wounds.

கத்தி வெட்டு காயங்களின் சிகித்ஸை.—கத்தி வெட்டு காயங்களுக்கு ஒட்டிக்கொள்ளும் ப்ளாஸ்திரியைப் போடுவது கூடாது. காயங்களிலிருந்து வெளிப்படும் சீழ், ரத்தம் வெளிப்படாமலிருக்கும்பொழுது அவைகளில் க்ருமிகளுண்டாகின்றன. இவைகள் காயங்களிலேயே தங்குவதால் காயங்கள் சீக்ரம் சொஸ்தமாகா. காயங்களை ஐயோடின் போன்ற லோஷனைவிட்டு கழுவிவிட்டு பாண்டேஜ் கட்டினால் காயம் சீக்ரம் ஆறும். சுத்தயான பாண்டேஜ் கட்டுவதற்கு பாண்டேஜ் அகப்படாது போனால், தட்டையான இரும்பைப் பழுக்கக்காய்ச்சி, கைக்குட்டை அல்லது வேறெந்தத்துணிமேலாவது படும்படி 5,6 முறை இழுத்தபின் துணியை பாண்டேஜாக உபயோகிக்கலாம்.

# FUN AND ANECDOTE.
# வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

## Letter Writing.

கடிதமெழுதல்.—ஒருபெண் ஒரு கடிதத்தில் ஏதோ கிறிக்கொண்டிருந்தாள். அதைப்பார்த்த அப்பெண்ணின் தாய், "அம்மா, என்னசெய்கிறாய்?" என்று கேட்டாள். "நான் அம்மங்காருக்கு கடிதம் எழுதுகிறேன்" என்று அப்பெண் பதில் சொன்னதற்கு, தாயார் சிரித்துக்கொண்டு "கண்மணி ! உனக்கு எழுதத்தெரியாதே!" என்றாள். "அதனாலென்ன அம்மா? அம்மங்காருக்குப் படிக்கத்தெரியாது. இரண்டும் ஸரியாய்ப்போயிற்று." என்று பெண்சொன்னாள்.

## Jury's Verdict.

ஜூரிகளின் அபிப்ராயம்.—இங்கிலாந்தைச் சேர்ந்த வேல்ஸ் நாட்டில், க்ரிமினல் கேஸ்களில் ஜட்ஜ்களுக்கு உதவியாய் நியமிக்கப்படும் ஜூரிகள் கேஸைக் கவனித்து அபிப்ராயம் சொல்வதில்லையாம். ஒரு கேஸில் ஜூரிகளின் தலைவரை ஜட்ஜ் அபிப்ராயம் கேட்க, அதற்கு அவர், "பிரபுவே ! யார் வாதியோ, ப்ரதிவாதியோ எங்களுக்குத் தெரியாது. வக்கீல் ஜோன்ஸ் பக்கம் தான் எங்களபிப்ராயம்." என்று சொன்னாராம்.

## I Can't Swim.

எனக்கு நீந்தத் தெரியாது.—ஒருகாலத்தில் ஜெர்மனி தேசத்தில் ஒரு ஊரில் தூக்குமரம் நதிக்கரையில் நடப்பட்டிருந்தது. இரண்டு திருடர்களை இந்த தூக்கில் போடக்கொண்டு வந்தார்கள். தூக்கிடுவோன் ஒருவனைத்தூக்கிட்டு, திருப்பியபொழுது கயிறு அறுந்தது. அவன் நதியில் விழுந்து நீந்தி உயிர் தப்பினான். இதைப்பார்த்துக் கொண்டிருந்த மற்றொரு திருடன், தூக்கிடுபவனைப்பார்த்து, "ஐயா, கயிறு அறுந்து விடப்போகிறது. பத்ரம், எனக்கு நீந்தத்தெரியாது ! "என்று சொன்னான்.

## Performance of Sandyavandanam.

ஸந்த்யா வந்தனம் பண்ணுதல்.—

தகப்பன்:—என்னடா பையா ! ஸந்த்யாவந்தனம் பண்ணினாயா ?

பையன்:—இதென்ன ஸந்த்யாவந்தனமிது ? எப்போ, அப்பா, நான் உங்களாட்டமா ஆவேன் ?

தகப்பன்:—நீ சொல்வது அர்த்தமாகவில்லையே ! ஸந்த்யா வந்தனம் செய்வதற்கும் என்னாட்டம் ஆவதற்கும் என்ன ஸம்பந்தம் ?

பையன்:—உங்களாட்டம் ஆய்விட்டால் அப்புறம் ஒரு பஞ்சபாத்ரம் ஜலத்தை கீழே கொட்டவேண்டியது தானே ஸந்த்யா வந்தனம் செய்வது!

## Looking Like a Lion.

சிங்கம் போலிருக்கிறது.—ஒரு நாள் மாலை அடுப்பண்டை ஒரு பிள்ளையும் அவன் தகப்பனும் உட்கார்ந்திருக்கையில், தகப்பனார் இருந்தபடியே தூங்கிவிட்டார். இதை கவனித்த பிள்ளை, "அப்பா ! உம்மைப் பார்த்தால் சிங்கம் போலிருக்கிறது." என்று கத்தினான். திடுக்கிட்டெழுந்த தந்தை, "சிங்கமா ? நீ கங்கத்தைப் பார்த்திருந்தால் தானே உனக்குத்தெரியும்." என்றார். அதற்குப்பிள்ளை "அப்பா நான் நதிக்கரையில் பார்த்ததில்லையா ?" என்று கேட்டான். "சீ முட்டாள், அவைகள் கழுதைகளல்லவா? சிங்கமல்ல" என்றார். "அப்படியா ? நான் நினைத்துச் சொன்னது அவைகள் தான்." என்று பிள்ளை பதில் சொன்னான்.

## True Courtesy.

உண்மையான உபசாரம்.—அலகாபாத்தில் ஒரு ஸ்திரீ வைத்யசாலையிருக்கிறது. அதன் தலைமை வைத்யச்சிக்கு இரண்டு விநோதக்கடிதங்கள் கிடைத்தனவாம். இவை ஆஸ்பத்ரி ரிபோர்ட்டில் பிரசுரிக்கப்பட்டிருந்தன.

(1) "பிரியமுள்ளவளே ! தமது ஆஸ்பத்ரியில் சிகித்ஸையிலிருந்த என் ஸம்ஸாரம் ஸௌகமடைந்து வீட்டுக்கு வந்து விட்டாள். இன்று மாலை தம்மை தரிசனம் செய்து கௌரவப்படுத்த விரும்புகிறேன். உமக்கு கைம்மாறு ஒன்றும் செய்ய மாட்டேன். அது கடவுள் வேலை."—தாம் கவனிக்கத்தக்க.

(2) ப்ரியதாயே ! தாம் இனி பக்ஷமாய் சிகித்ஸை செய்யும்படி யான அவச்யம் என் மனைவிக்கில்லை யென்று ஸந்தோஷப்படுகிறேன். சென்ற 27தேதி யன்று இரவு அவள் இகலோகம்விட்டு பரலோகம் போய் விட்டாள். இவ்விஷயத்தில் தாம் செய்த உபகாரத்தை நான் என்றும் மறவேன்.

தமது வணக்கமுள்ள,

# CURIOSITIES.
## விநோதங்கள்.

### Rat Crusade.

எலி ஸம்ஹாரம்.—ப்ளேக் வ்யாதியானது எலியால் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்துக்குப் பரவுகிற தென்பது வைத்யர்களின் அபிப்ராயமாயிருந்து வருகிறது. ஆகையால் ப்ளேக்கிருக்கும் ஊர்களிலுள்ள எலிகளைக் கொன்று வ்யாதியைத் தடுக்க கவர்ன்மெண்டார் முயன்று வருகிறார்கள். இந்த ஊர்களில் செத்த எலிகளைக்கொண்டு வருகிறவர்களுக்கு எலி யொன்றுக்கு ஒரு பைஸா முன்விபாலிடியார் கொடுக்கிறார்கள். எலிகளை ஸம்ஹரிக்கும் விஷயத்தில்எது ஸுலபமானமார்க்கம் என்பதைப்பற்றி வைத்யர்கள் பரீக்ஷைசெய்து கொண்டேயிருக்கிறார்கள். இந்தப்பரிக்ஷைகளால் சில விஷயங்கள் ருசுவாயிருக்கின்றன. எலிகளுக்கு ஆகாரமிருந்தால் மட்டும்போதும், குடிக்க ஜலம் வேண்டுவதென்பது அவச்யமேயில்லை. அவைகள் வெகுகாலம் ஜீவித்திருக்கும். மூன்றுஎலிகளுக்கு ரொட்டி, மாம்ஸம், வெண்ணை ஆகிய ஆகாரங்கள் மட்டும் இரண்டுமாதகாலம் கொடுக்கப்பட்டன. 15-ஆம் நாள் ஒன்றுக்கு ஜலம் குடிக்க வைக்க அது குடிக்கவேயில்லை. மூன்று எலிகளும் 60 நாளும் ஸுகமாகவே யிருந்தன, ஒருஎலிக்கு ஆகாரமேயில்லாமல் ஜலம்மட்டும் குடிக்க வைத்ததில் மூன்று நாளில் இறந்து போயிற்று. மற்றும் ஆறு எலிகளை ஆகாரமும் ஜலமும் இல்லாமல் வைத்திருக்க இரண்டாம் நாளிலிருந்து ஐந்து நாள்களுக்குள் எல்லாம் செத்துப்போயின.

### Using Distilled Seawater.

ஸமுத்ர ஜலத்தை சுத்திசெய்து உபயோகித்தல்.—அமெரிக்கா ஐக்ய நாடுகளிலுள்ள ஸான்ப்ரான்ஸிஸ்கோ என்ற பெரிய துறைமுகப் பட்டணத்தில் ஜலவஸதியைப் பற்றியதோர் நூதன ஏற்பாடு யோசனையிலிருக்கிறது. அங்கே ஜலக்கஷ்டம் அதிகம். ஆகையால் ஸமுத்ர ஜலத்தை எடுத்து நன்றாய்க் காய்ச்சுவதால் உண்டாகும் நீராவியைப் பிடித்து வைத்து அந்த ஆவியைக் குளிரச் செய்தால் அது சுத்தமான ஜலமாகும்; இவ்விதமாக ஸமுத்ர ஜலத்தை சுத்தம்செய்து வீடுகளில் உபயோகிக்கலாமென்று அந்த நகரத்தார் உத்தேசிக்கிறார்கள். அவ்விதம் எடுக்கப்படும் ஜலம் மிகவும் பரிசுத்தமானது. ஆனால், ஜலத்தை நீராவியாகச் செய்து அந்த ஆவியை ஜலமாக்குவதற்கு அதிக செலவு பிடிக்குமாதலால், உயர்ந்த மருந்து ஷாப்புகளிலும், ரஸாயன சாஸ்த்ர சாலைகளிலுந்தான் அவ்வித ஜலத்தை உபயோகிக்கிறார்கள். ஆனால் அந்த நகரத்தார் அதிக செலவில்லாமலே ஜலத்தைச் சுத்தி செய்யப்போகிறார்களாம். அந்த நகரத்துக்கு அநேக மைல்களுக்கப்பால் ஒரு எரிமலை இருக்கிறது. அதை அடுப்பாக உபயோகிக்கப் போகிறார்கள். ஸமுத்ர ஜலத்தை (∩) இந்த வடிவமுள்ள குழாயால் ஸமுத்ரத்திலிருந்து அந்த மலைக்குள்ளே கொண்டுபோய் விடப்போகிறார்கள்; அந்த எரிமலைக்குள்ளே அதிக உஷ்ணமா யிருப்பதால் செலவில்லாமலே ஜலத்தைக் காய்ச்சிவிடலாம். மேலும், இந்த நீராவிசக்தியைக் கொண்டே மின்ஸாரம் உண்டாக்கி நகரத்தில் விளக்குப் போடலாமென்றும் சில இஞ்சினீயர்கள் எண்ணுகிறார்களாம்.

### Trousers for Horses.

குதிரைகளுக்கு ட்ரௌஸர்கள்.—குதிரைகளின் முதுகின்மேல் துணிகளை விரித்துப்போட்டு அவைகளின் தேகத்தை மூடிவைக்கும் வழக்கத்தை நாம் பார்த்தும் கேட்டுமிருக்கிறோம். மாடுகளிலும் பெருமாள்மாடு என்று சிலவற்றைப் பழக்கி அவைகளின் முதுகிலும் துணிகளைப்போட்டு மூடுவதும் உண்டு. ஆனால் குதிரைகளின் காலுக்கு ட்ரௌஸர்கள் போடும் வழக்கத்தை இதுவரையில் கேட்டதில்லை. அமெரிக்காவில் கான்ஸாஸ் மகாணத்தில் மெடோரா என்னும் ஊருக்குப் பக்கத்தில் வஸிக்கும் ஒரு விவஸாயி தம்முடைய குதிரைகளுக்கெல்லாம் காலுக்குட்ரௌஸர்கள் போட்டிருக்கிறாராம். அவரைப்பார்த்துப்பலர் சிரித்துக் கேலிசெய்கிறார்களாம். "ஜனங்கள் என்னைப்பார்த்து சிரித்தாலும் சிரிக்கட்டும். அவைகளுக்கு ட்ரௌஸர்கள் போடாமலிருக்கமாட்டேன்' ஏனென்றால் குதிரைகளுக்கு ட்ரௌஸர்கள் போடுவது ப்ரியமாய் இருக்கிறது. போட்டால் வேலையும் நன்றாய்ச் செய்கின்றன. பார்க்க வேடிக்கையாயிருக்கும். ஆனாலும் பாதகமில்லை. குதிரைகளை ஈக்கள் இனிமேல் தொந்தரவு செய்யமாட்டா.' என்கிறாராம். இந்த ட்ரௌஸர்கள் முரட்டுத் துணியால் செய்யப்பட்டவை. குதிரைகளின் காலுக்கென்று அளவுபார்த்துத் தைக்கப்பட்டவை. அவைகள் நழுவிவிழாதபடி குதிரையின் முதுகிலும், கழுத்திலும், வார்களால் இழுத்துக்கட்டப்படுகின்றன. நமக்கும் இது விநோதமாகத்தான் இருக்கிறது. ஆனால் இதை அநேகம் பேர் உபயோகத்தில் கொண்டுவந்துவிட்டால் அப்புறம் ஸாதாரணமாகிவிடும்.

# HINTS AND RECIPES.
## யுக்திகளும் முறைகளும்.

### Flavour of Vegetables.

காய்கறிகளின் ருசி.—ஸாதாரண ஜலத்தில் ஒரு டீ ஸ்பூனளவு சர்க்கரை போட்டுவிட்டு, இதில் காய்கறிகளை வேகவைத்தால், அவைகளுக்கு நல்ல மணமும் அதிக ருசியுமுண்டாகுமாம்.

### Rusting of Tin-ware.

தகரஸாமான்கள் துருப்பிடித்தல்.—தகரஸாமான்கள் துருப்பிடித்து, கெட்டும் ஒட்டையாயும் போய் விடுகின்றன. புதிதாய் தகரஸாமான் வாங்கினதும், அதன்மேலே பெல்லாம் பன்றிக்கொழுப்பைத் தடவி, நெருப்பில் காய்ச்சிவிட்டால் அது கெடாமல் வெகுகாலமிருக்குமாம். இது வாஸ்தவமானாலும் இந்தியாவில் எத்தனைபேர் பன்றிக்கொழுப்பைத் தொட்டுத்தடவுவார்கள்?

### A Simple Milk Test.

பாலைப் பரிக்ஷிக்க ஸுலபமானவழி.—அப்படம் பாலா, அல்லது ஜலம் கலந்த பாலா என்பதை ஸுலபமாய்க் கண்டுபிடித்து விடலாம். ஒரு துளிபாலை விரல் நகத்தின்மேல் வைத்தால், நல்லபாலாயிருந்தால் அப்படியே பொட்டாயிருக்கும்; கலப்பானதானல் வழிந்துபோகும்.

### Adulterated Milk.

கலப்படம் செய்யப்பட்ட பால்.—பால்காரர்கள் செய்யும் மோசம் பலவிதம். சிலர் பாலுக்கு ஜலத்தை எதேஷ்டமாய் ஊற்றி விற்கிறார்கள். சிலர் பாலைக் கடைந்து வெண்ணெய் யெடுத்துக் கொண்டு மிகுதியைப் பாலாக விற்கிறார்கள். மற்றும் சிலர் மாவைப் பாலில் கரைத்து அது குழம்பாயிருக்கும்படி செய்து விற்பதைத்தான் பெருத்த மோசமென்று சொல்ல வேண்டும். மாக்கரைத்த பாலை ஸுலபமாய்க் கண்டு பிடித்து விடலாம். இந்தப்பாலில் கொஞ்சமெடுத்து இதற்கு ஐயோடின் ஸொல்யூஷனைச் சேர்த்தால் நீலமாய்விடும். இது ஸுலபமான ஒரு பரீக்ஷை.

### Ink Faded Manuscripts.

எழுத்து மங்கிப்போன கையெழுத்து ப்ரதிகள்.- கையெழுத்து ப்ரதிகளும், கடிதங்களும் மை மங்கிப் போய் எழுத்துக்களை வாசிக்க முடியாமலிருந்தால் கடுக்காய்க் கஷாயத்தை ப்ரஷினுலாவது, இறகினுலாவது எடுத்து எழுத்துக்களின் மேல் தடவவும். எழுத்துக்களை ஸுலபமாய் வாசிக்கலாம். புதிதாய் எழுதினவை போலத்தோன்றும்.

### Cleaning off Greasy Hands.

எண்ணெய்க் கறைகளைப் போக்குதல்.—எண்ணெய்க் கசண்டுகளைத் தொடுவதால் கையில் பிடித்துக் கொள்ளும் கருப்புக்கறையை ஸோப்நுரையையும் மரத்தூளையும் கலந்து தேய்த்தால் கறை பளிச்சென்று விட்டுப்போகும்.

### Mending Lead Pencils.

காயிதப் பென்ஸில்களைச் சீவுதல்.—பென்ஸில்களைச் சீவுவதற்கு மிகவும் கூர்மையான கத்தியை உபயோகிக்கக்கூடாது. ஏனெனில் அது மரத்தையும் பென்ஸிலையும் ஒரே அடியாய் சீவிவிடும். பென்ஸிலை இடது கையில் பிடித்துக் கொண்டு வலக்கையில் கத்தி பிடித்துச் சீவவேண்டும். அப்போது பென்ஸிலின் நுனி நம்முடைய பக்கம் பார்த்திராமல் வெளிப்புறம் பார்த்திருக்கும்படி பிடித்துச் சீவவேண்டும்.

### Mildew Stains on Linen.

லினன் துணிக்குப் பிடிக்கும் பூஞ்சாளம்.—எலுமிச்சம் பழரஸத்தில் கஞ்சிப் பசையையும் உப்பையும் போட்டு அதில் கொஞ்சம் உடம்பு தேய்த்துக் கொள்ளும் ஸோப்பைக் கரைத்து வைத்துக்கொள்ள வேண்டும். இதை ப்ரஷில் எடுத்து லினன் துணியில் பூஞ்சாளம் பிடித்திருக்கும் இடங்களில் இருபக்கமும் துடைத்து புல் தரையில் உலரப் போட்டுவிட வேண்டும். ஒரு இரவும் ஒருபகலும் அப்படியே கிடந்தால் பூஞ்சாளக் கறைகள் போய் விடும். பிறகு துணியைத் துவைத்து விடலாம்.

### Cracks in Floors and Walls.

தரையிலும் சுவரிலுமுண்டாகும் வெடிப்புகள்.- கட்டிடங்களிலுள்ள தரைகளிலும் சுவரிலும் வெடிப்புகளுண்டானல், ஆளிவிதைஎண்ணெயையும் கோதுமை மாவையும் குழைத்து வெடிப்புகளை அடைத்துவிட்டு வர்ணம் பூசிவிட்டால் நன்றாய்ப் போகும். வர்ணம் பூசுவதற்கு முன் மெழுகை ஸமமாய் இடுக்குகளில் நன்றாய்ப்புகும்படி தடவி உலரவிடவேண்டும்.

# TAMIL LITERATURE.
## தமிழ்க் கல்வி.

### Female Education.

பெண் கல்வி (கோம்மி.)

1. தங்கமே சண்பக மங்களமே நல்ல
சந்தோஷ ராகத் தமிழ்ப்பாடி
இங்குநா மெல்லோருங் கொம்மி யடிக்கலா
மிங்கித மான சபை கூடி.

2. குங்கும சுந்தரி கோகில மம்புஜங்
குஞ்சரங் கிஞ்சுக ரஞ்சிதமே
மங்கள மாகநா மிங்கெல்லோருங் கூடி
வட்ட மிட்டுக் கொம்மி சொட்டிடலாம்.

3. பெண் பாடசாலை பிரபல மாகவும்
பேர்நல்ல தாகப் பிடி படவும்
பாண்பார் கவர்ன்மெண்டிற் பண்ணுஞ் சகாயத்
பாரடி யிது நம் பாக்கியமே! [தைப்

4. கல்விக் கதிகாரி வாணி சரஸ்வதி
கண்மணி பெண்மணி காப்பிருக்க
அவளருங் குழற் பெண்கள் கற்குங்கல்வி
ஆகாதென்று சொன்ன தாரடியே?

5. துங்க விலக்கணம் பூகோளஞ் சொல்லத்
துணிந்து கொண்டோ நாமிப்போதே;
அங்க கணிதம் நூலாதாரம் நம்ம
அத்தை யாருக்குந் தெரியாதே!

6. பண்டுசேர சோழ பாண்டியர் காலத்தும்
உண்டு பெண்கல்வி யென் றோதுகின்றார்.
கொண்டு கூட்டும் பள்ளிக்கூடம்பெண்களுக்குக்
கண்ட துண்டோ விந்தக் காலம்போலே?

7. பள்ளிக்கூடம் விட்டும் பாடம் விடாமல்
படித்துத் தினந் தோறும் பார்த்திடவே,
துள்ளிக் கொண்டாடுஞ் சுகங் கண்டோமே;
சொல்லு மிக்கல்வி மறப் போமோ? [இனிச்

8. மார்க்க முள்ள மணவாளர் கடிதங்கள்
வந்தால்வா சிக்கத் தெரிந்து கொண்டோம்.
ஏற்கவே ஊர்க்குத் தபாற் கடிதங்க
ளெழுதவுங் கூடும் பிழை யறவே.

9. மாதர்பலர் கற்ற வண்மை யினாலேதான்
மார்க் கப்பிச கென்று வாயடிப்பார்.
ஆதரவின் கல்வி காரண மல்லடி
அக்கல்வி வேறே யறிவு வேறே.

10. மாமிசம் விற்றுயிர் வாழ்பவ னீன்றவோர்
மாமகன் சைவம் மறுப்பவர் யார்?
காமிய வேசி மகளானா லென்ன,
கற்புக் கொண்டாலது தப்பிதமோ?

11. கொக்கென் றிருந்தாயோ கொங்கணனே எனக்
கோதை யொருத்திமுன் கூறி னின்றாள்;
அக்கினி மூழ்கி யயோத்தியிலே ஒரு
சற்குணி கற்புக்குச் சாக்ஷி வைத்தாள்.

12. வெங்கலி யாலேக லங்கியமா நள
வேந்தன் மனைவிமுன் வேடனைத்தான்
அங்கண் விழித்தெரித் தாளென்று சொல்வது
பங்க மல்ல வொப்பும் பான்மையதே.

13. சூரியன் கீழ்த்திசை தோன்றுமமற் போகென்று
தோகை யொருத்தி முன் சாபமிட்டாள்.
சாரியங்க ளெல்லாங் சற்பினா லல்லவோ,
கைக்கொம்மி கொட்டுங் கலாபப் பெண்ணே!

14. மூதுரை நல்வழி யோது மாத்திசூடி
ஈதெல்லாம் பாடி யினிது தந்த
ஆதியிசை கொண்ட அவ்வையார் தாமும்பெண்
ணாகப் பிறந்த வளா மல்லவோ?

15. நம்புந் தமிழறியும் பெருமாளொரு
நாரி சரித்திரம் நாடு சொல்லும்
சம்பனி நீலாய தாக்ஷி யுலாமடல்
அப்புவி யிற்பிர பந்த மன்றோ?

—பெண்கல்வி

### Kuchavati.

குசாவதி.—இது மிஸ்டர் வி. எம். ராஜு செட்டியாரால் இயற்றப்பட்டது. இது வாசிக்க இனிமையாயிருக்கிறது. இது பணமே ப்ரதானமாகக்கொண்டு அதைத் தீய வழிகளிலேயே ஸம்பாதித்து வரும் ஒரு வகுப்பைச் சேர்ந்த ஒரு பெண்ணின் சரித்ரமாகும். இது பெதர்வெய்ட் பேபரில் நேர்த்தியாய் அச்சிடப் பட்டிருக்கிறது. 52-பக்கம் கொண்டது. விலை அணா 12. வேண்டுவோர், அதன் ஆசிரியராகிய மிஸ்டர் வி. எம். ராஜு செட்டியாருக்கு (ராஜன்டேல், வால் டாக்ஸ் ரோட், மதராஸ்,) எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

# DIARY OF THE MONTH.

## மாஸ வர்த்தமானம்.

1913ஆ ஆகஸ்டுமீ 1-தேதி.

சீனாவில் கலகம்.—ஜெனரல் லங் சிச்வாங் என்னும் தளகர்த்தர் கலகக்காரர் கைவசமிருந்த ஷின் ஹிங் என்னும் இடத்தைப் பிடித்துவிட்டார். இவரைக்கண்டால் கலக்காரர்களுக்கு ரொம்ப பயமாம்.

2-தேதி.—

கோவாபரேடிவ் ஸங்கம்.—இன்றையதினம் தென்னாற்காடு ஜில்லா விவஸாய ஸங்கத்தார் கூடலூர் கலெக்டர் ஆபீஸில் ஒரு மீட்டிங் கூடினார்கள். ஜில்லா கலெக்டர் அக்ராஸனம் வகித்தார். திவான் பகதூர் எம். ஆதிநாராயணய்யாவும், மிஸ்டர் ஸ்வாமிக்கண்ணுபிள்ளையும், விவஸாய ஸம்பந்தமாக இன்னம் முயற்சியெடுத்து உழைக்கவேண்டும் என்றும், விவஸாய கோவாப ரேடிவ் ஸங்கங்கள் ஸ்தாபிக்க வேண்டும் என்றும் பேசினார்கள்.

3-தேதி.—

அட்ரியானோபிள்.—அட்ரியானோபிளில் உள்ள ஸலிம் மாஸ்கில் அநேகம்பேர் வந்து தொழுதார்கள். ஸுமார் 3000-பேர் கொண்ட ஒரு மீட்டிங்கில் அட்ரியானோபிளை எதிரிகளிடம் விடக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது.

4-தேதி.—

பால்கன் யுத்தம்.—இன்று புகாரஸ்ட் கான்பரென்ஸில், யுத்தம் இன்னம் 3-நாளைக்கு நிறுத்தி வைக்கப்பட்டது.

5-தேதி.—

சீமைத் தபால்.—இங்க்லண்டுக்கும் இந்தியாவுக்கும் வார மொருமுறைக்குப் பதிலாக இரண்டு முறை தபால்போய் வரவேண்டுமென்று சில காலமாய் பத்ரிகைகள் சொல்லிவருகின்றன. இன்று காமன்ஸ் ஸபையில் இதைப்பற்றி ப்ரஸ்தாபம் வந்தபோது, கவர்ன்மெண்டார், இப்போதுள்ள மெயில் காண்ட்ராக்ட் முடிந்தவுடன் இதைப்பற்றி ஆலோசிக்கப்படும் என்று சொன்னார்கள்.

6-தேதி.—

மதுரையில் ஒரு மீட்டிங்.—மதுரையில் கோவாபரேடிவ் ஸங்கத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு மீட்டிங் கூட்டி விவஸாயக் கூட்டுறவு ஸங்கங்கள் ஸ்தாபிப்பதைப்பற்றி ஆலோசித்தார்கள். திவான் பகதூர் எம். ஆதிநாராயணய்யா, அந்த மீட்டிங்கில் செய்த ப்ரஸங்கத்தில் கோவாப ரேடிவ் ஸங்கங்கள் இருக்கும்போது புதியதாய் விவஸாய ஸங்கங்கள் ஸ்தாபிப்பதைவிட கோவாபரேடிவ் ஸங்கமே விவஸாய அபிவ்ருத்தியைப்பற்றி முயற்சிசெய்வது நல்லது என்றும், அது முடியாவிட்டால் விவஸாயத்தில் ஊக்கங்கொண்ட மெம்பர்கள் ஸங்கத்திலேயே ஒரு கமிட்டியாகக்கூடி விவஸாய அபிவ்ருத்திக்காக உழைக்கலாம் என்றும் சொன்னார்.

சீனாவில் கலகம்.—நூஸங் கோட்டையில் கவர்ன்மெண்டுக்குச் சார்பாய் இருந்த ஒரு ரெஜிமெண்டுக்கும் கோட்டையில் இருந்த கலகக்காரர்களுக்கும் யுத்தம் நடந்தது. ரெஜிமெண்டு நிர்மூலமாக்கப்பட்டது.

7-தேதி.—

இந்திய பட்ஜட்.—இன்று காமன்ஸ் ஸபையில் மிஸ்டர் மாண்டேகு இந்திய கவர்ன்மெண்டின் வரவு செலவு கணக்கு திட்டத்தை ஸபையில்வைத்து அதை அங்கீகரிக்கும்படி கேட்டுக்கொண்டார். அவர் தமது ப்ரஸங்கத்தில், ராஜாங்க பாங்கி, ஆகாயவிமான பாடசாலை, உயர்தரக்கல்வி, பப்ளிக் ஸர்விஸ் கமிஷன், ஸ்தலஸ்வய ஆட்சிமுதலியவைகளைப்பற்றி விஸ்தாரமாய்ப் பேசினார். பட்ஜட் ஒப்புக்கொள்ளப்பட்டது.

9-தேதி.—

இந்திய ஸங்கீத ஸங்கம்.—தஞ்சாவூரில் ராவ் ஸாகிப் எம். அப்ரகாம் பண்டிதரால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் இந்திய ஸங்கீத ஸங்கத்தின் வருஷாந்தரக் கொண்டாட்டம் இன்று நடைபெற்றது. மிஸ்டர் வி. பி. மாதவராவ் ஸி.ஐ.இ., அக்ராஸனம்வகித்தார். அநேக ஸங்கீதவித்வான்கள் வந்திருந்தார்கள். சிலவ்யாஸங்கள் வாசிக்கப்பட்டன. ப்ரெஸிடெண்டவர்கள் தமது ப்ரஸங்கத்தில், ஸங்கீதம் தகுந்த ஆதரிப்பு இல்லாமல் இருப்பதைப்பற்றியும், ராவ் ஸாகிப் அப்ரகாம் பண்டிதர் ஸங்கீதவிஷயமாய்ப் பாடுபடுவதைப்பற்றியும் பேசினார்.

ஒரு பெரிய நன்கொடை.—கல்கத்தாவில் ப்ரபல வக்கீலாகிய டாக்டர் ராஷ் பிகாரி கோஷ் கல்கத்தா

யூனிவர்விட்டியார் ஸ்தாபிக்கப்போகும் ஸயன்ஸ் காலேஜுக்கு 10 லக்ஷம் ரூபாயை நன்கொடையாகக் கொடுத்திருக்கிறார்.

பர்ட்வானில் வெள்ளம்.—பர்ட்வான்பக்கம் ஓடும் தாமோதார்நதியில் வெள்ளம் அதிகமாய் வந்து எங்கு பார்த்தாலும் ஒரே ஜலமயமா யிருக்கிறது. அநேக க்ராமங்கள் வெள்ளத்தால் அழிந்து போய் விட்டன.

விவஸாய கோவாபரேஷன்.—கும்பகோணம் ஸப்டிவிஷன் விவஸாய ஸங்கத்தார் இன்றையதினம் பாபநாசத்தில் கூடி ஒரு விவஸாய கோவாபரேடிவ் ஸங்கம் ஏற்படுத்தினார்கள். வந்திருந்த மெம்பர்களில் அநேகர் ஷை விவஸாய ஸம்பந்தமான கோவாபரேடிவ் ஸங்கத்தில் மெம்பர்களாகச் சேர்ந்து பங்குகளும் எடுத்துக் கொண்டார்கள்.

பால்கன் நிலைமை.—புகாரஸ்டில் கூடியிருக்கும் ஸமாதானக்கான்பரென்ஸ் இன்றையதினம் முடிவடைந்தது. இன்றிரவு டெலிகேட்டுகளுக்கு ஒரு விருந்து நடந்தது.

10-தேதி.—

பால்கன் யுத்தம்.—இன்றையதினம் காலையில் டெலிகேட்டுகள் ஸமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட்டார்கள். ரொமானிய அரசர் டெலிகேட்டுகளுக்கு பட்டங்கள் அளித்தார்.

11-தேதி.—

வெள்ளம்.—வங்காளத்தில் பர்த்வான் ப்ரதேசத்தில் நேர்ந்த வெள்ளத்தால் 300 க்ராமங்கள் அழிந்து போயினவென்று தெரிகிறது.

வெள்ளத்தால் கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவி செய்வதற்காக பர்த்வான் மகாராஜா முதலியவர்கள் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

12-தேதி.—

சீனாவில் கலகம்.—கலகக்காரர்களின் தலைவர்களில் ஒருவராகிய டாக்டர் ஸன்-யாட்-ஸன் ஜப்பானுக்கு ஓடிவிட்டார். அவர் அங்கே பணம் சேகரித்து யு-வான்-ஷிகேயுக்கு விரோதமாக வேலைசெய்வார்.

ஸர் ராபர்ட் சாமர்ஸ்.—ஸிலோனுக்கு கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கும் ஸர் ராபர்ட் சாமர்ஸ் இன்றையதினம் அரசரைக்கண்டு கொண்டார்.

13-தேதி.—

சீனாவில் கலகம்.—ஷாங்ஹேயுக்கு ஸமீபத்தில் கவர்ன்மெண்டு துருப்புகளுக்கும், கலகக்காரர்களுக்கும் யுத்தம் நடந்தது. கலகக்காரர்கள் தோல்வியடைந்தார்கள். வூஸங் கோட்டைகளில் இருந்த கலகக்காரர்கள் அந்தக் கோட்டைகளை கவர்ன்மெண்டார் கைப்பற்றும்படி விட்டுவிட்டுப்போய் விட்டார்கள். கலகக்காரர்கள் நான்கிங்கைப் பிடித்து விட்டார்கள்.

பால்கன் நிலைமை. யுத்த ஸமாதானம் ஏற்பட்டும் சண்டை ஓயவில்லை. ஸெர்வியர்களுக்கும் அல்பானியர்களுக்கும் பலமான சண்டை நடந்து வருகிறதென்று தெரிய வருகிறது. ரொமானிய அரசர் பால்கன்யுத்தம் முடிவடைவதற்கு ஸாதகமாயிருந்ததற்காக ஆஸ்ட்ரியா அரசர் அவருக்கு உபசாரவார்த்தைகள் சொல்லியனுப்பினார். ரொமானிய அரசரும் ஆஸ்ட்ரியாவின் ஸ்நேகிதத்தை மெச்சி பதிலளித்தார்.

14-தேதி.—

ஸர் ஒ மூர் க்ரே.—இந்திய ஸைன்யங்களின் தலைவகிய எச். இ. ஜெனரல் ஸர் ஒமூர் க்ரே அடுத்தமார்ச்சு மாஸத்தில் தமது உத்யோகத்தைக் காலிசெய்வார் என்று சொல்லப்படுகிறது.

16-தேதி.—

பால்கன் நிலைமை.—பல்கேரியா தனது ஸைன்யத்தைக் கலைத்து விட்டது. யுத்தவீரர்கள் தங்கள் ஊருக்குச் செல்லுகிறார்கள். வீரர்கள் எல்லாரும் தோற்கடிக்கப்பட்டதாகக் காணப்படவில்லை. புகாரஸ்டில் ஸமாதானப்பேச்சுகள் நடைபெற்றதால் பல்கேரியர்கள் க்ரேக்கர்களோடு யுத்தம் செய்யமுடியாமல் போயிற்றென்றும், இல்லாவிட்டால் பல்கேரியர்கள் க்ரேக்கர்களை தோற்கடித் திருப்பார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

சீனாவில்கலகம்.—ஹுவாங்மிங் என்னும் சீனா கலகக்காரர் டோகியோவுக்கு வந்தார். வந்ததும் மோடார்காரில் ஏறி பட்டணத்திற்குள் சென்று தம்மிருப்பிடம் தெரியாதபடி மறைந்து விட்டார்.

ஒரு ப்ரஸங்கம்.—சென்னை எழும்பூரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கவர்ன்மெண்ட் ப்ராமண விதவாச்ரம் ஸூபரிண்டெண்டாகிய ஸகோதரி ஆர். எஸ். ஸுப்புலக்ஷ்மி கும்பகோணம் ப்ரம வித்யா லாட்ஜில் விதவாச்ரமத்தைப்பற்றி ப்ரஸங்கம் செய்தார். ஸ்கூல் இன்ஸ்பெக்ட்ரஸ்ஸ் மிஸ் லிஞ்ச் அக்ராஸனம் வகித்தார். ஸுப்புலக்ஷ்மி தான் இவ்வளவுதூரம் படித்ததற்கு தன் பெற்றோர்கள் தூண்டுதலா யிருந்

தார்களென்று சொன்னார். தானும் தன் அத்தையும் கைம்பெண்களுக்குப் படிப்புக்கற்றுக் கொடுத்து அவர்கள் சாப்பாட்டுக்கும் துணிமணிச்கும் பிறர் உதவியை எதிர்பாராமல் ஸ்வய ஜீவனம் செய்ய உழைத்துவருவதாக சொன்னார். மிஸ் லிஞ்ச், ஸூப்பு லக்ஷ்மி தான் கைம்பெண் அபிவ்ருத்திக்காக உழைப்பது தேசோபகார மென்று சொன்னதை ஏற்றுக் கொண்டு அப்படியே நடந்து வருவதைப்பற்றி ஸந்தோஷப்பட்டார். இந்த ஆச்ரமத்துக்கு 50-ரூபா மிஸ்டர் ஆ. ஸூப்ரமண்ய ஐயர் கொடுத்தார்.

ராஷ் விகாரி கோஷ்.—கல்கத்தா யுனிவர்ஸிடி ஸெனெட் மீட்டிங்கில், டாக்டர் ராஷ் பிஹாரி கோஷ் யுனிவர்ஸிடி வ்ருத்திக்கு நன்கொடையாக சொடுத்த 10-லக்ஷம் ரூபாயை வந்தனத்துடன் அங்கீகரித்துக் கொள்வதென்று தீர்மானமாயிற்று.

17-தேதி.—

துருக்கி பால்கன் யுத்தம்.—பல்கேரியா வல்லரசுகளுக்கு ஒரு அறிக்கைப்பத்ரம் எழுதியனுப்பி யிருக்கிறது. அதில், துருக்கியர்கள் பல்கேரியாவுக்குள் ப்ரவேசித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும், புகாரஸ்ட் உடன்படிக்கைப்படி பல்கேரியா தனது ஸைன்யங்களைக் கலைத்துக் கொண்டிருக்க துருக்கி லண்டன் உடன்படிக்கைக்கு விரோதமாக நடந்து வருகிறதென்றும், வல்லரசுகள் துருக்கியை அடக்கவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறது.

18-தேதி.—

பால்கன் யுத்த விஷயம்.—லண்டன் உடன்படிக்கைக்கு ஸம்மதிக்கும்படி வல்லரசுகள் துருக்கியைக் கட்டாயப்படுத்தப் போகிறதாக சொல்லப்படுகிறது.

20-தேதி.—

சீனாவில் கலகம்.—இன்றுமாலை நாங்சாங் பட்டணம் கவர்ன்மெண்ட் படைவசமாயிற்று. அங்கே யிருந்த கலகத்தலைவர் தம் 1000-துருப்புகளோடுதென் கிழக்கை நோக்கி ஓடுகிறார். அவரை கவர்ன்மெண்ட் படை துரத்திக்கொண்டு செல்கிறது.

கோவாபரேடிவ் கான்பரேன்ஸ்.—பர்மா மாகாண விவஸாய கோவாபரேடிவ் இரண்டாவது கான்பரென்ஸ் மாண்டலே அரண்மனையிலுள்ள தர்பார் ஹாலில் கூடிற்று. சென்ற வருஷத்தை விட இந்தவருஷம் கோவாபரேடிவ் ஸங்கங்கள் இரட்டித்து விட்டன.

21-தேதி.—

துருக்கி யுத்தம்.—மாரிட்ஸா நதியைக்கடந்து துருக்கியர் சென்றிருப்பதைக் குறித்து ருஷியதூதர் துருக்கி முதன் மந்த்ரியைக்கண்டு பேசினார். அந்தப் பேச்சிலிருந்து துருக்கிக்கு அந்த ப்ரதேசங்களைப் பிடிக்க உத்தேசமில்லையென்று தெரகிறது. மேலும் ஸைன்யம் திரும்பி வந்துவிடும்படி மந்த்ரி உத்தரவு செய்தார்.

பஞ்சமர் படிப்பு.—கும்பகோணம் ப்ரமவித்யா பஞ்சம பாடசாலையின் பரிசளிப்புக் கொண்டாட்டம் நடந்தது. சென்னை ஹைகோர்ட் ஜட்ஜ்களி லொருவராகிய திவான் பஹதூர் டி. ஸதாசிவஐயர் அக்ராஸனாதிபதியாயிருந்து பஞ்சமர்கள் முன்னுக்கு வரவேண்டிய வழிகளைப் பற்றிப்பேசினார்.

22-தேதி—

ஒரு மீட்டிங்.—வங்காளத்தில் மழை பெய்த வெள்ளத்தால் உண்டான நஷ்டத்தால் கஷ்டப்படுகிறவர்களுக்கு ஸஹாயம்செய்வதற்காக கல்கத்தா டவுன்ஹாலில் ஒரு பொதுக்கூட்டம் கூடிற்று. பணம் வஸூல் செய்ய கமிட்டி ஏற்பாடாயிற்று. 33 ஆயிரம் ரூபாய்க்குக் கையொப்பமாயிருக்கிறது.

பம்பாயில்கோவாபரேஷன்.—ஹடப்ஸார் என்ற க்ராமம் பூனாவுக்கு ஐந்தாவது மைலிலிருக்கிறது. 1910-ஆம் வருஷத்தில் 4000 ரூ முதலுடனும் 30 மெம்பர் களுடனும் கோவாபரேடிவ் ஸங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. இந்த ஸங்கத்தின் மூன்றாவது வருஷ மீட்டிங் இன்று ஸர் ரிச்சர்ட் லாம்பின் அக்ராஸனத்தின் கீழ் கூடியது. ஸங்கத்தின் மெம்பர்கள் 165 பேர்களென்றும், இதில் 17 பேர் விவஸாயஸ்த்ரீகளென்றும், முதல் 30 ஆயிரமாய்ப் பெருகியிருக்கிறதென்றும் தெரிகிறது.

22-தேதி.—

தஞ்சாவூர் ஜில்லா ஸோஷ்யல் கான்பரேன்ஸ்:- தஞ்சாவூர் ஜில்லா ஸோஷ்யல் கான்பரென்ஸ் இன்று கூடிற்று. சென்னை டாக்டர் லக்ஷ்மீபதி அவர்கள் ப்ரெஸிடெண்டாக இருந்தார். அவர் தமது ப்ரஸங்கத்தில் பெண் கல்வி, பால்ய விவாகம், ருதுமதியான பின் விவாகம் செய்வது, கீழான ஜாதியார்களின்

நிலைமையை உயர்த்துவது, அன்ய தேசயாத்ரை செய்வது முதலியவைகளைப் பற்றிப் பேசினர். பெண் கல்வி, தாழ்ந்த ஜாதியாரை உயர்த்தல், ஸமுத்ரயாத்ரை ஆகிய இவைகளைப் பற்றித் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

காங்க்ரெஸ் ப்ரெஸிடெண்ட்.—காங்க்ரஸ் உபசரணைச்கமிட்டியார் இவ்வருஷமுடிவில் காரச்சியில் நடக்கப்போகும் காங்க்ரஸுக்கு ஆனரபிள் நவாப்ஸயித் மகம்மத் பகதூரை ப்ரெஸிடெண்டாகத் தெரிந்தெடுத்தார்கள்.

23-தேதி.—

தஞ்சாவூர்ஜில்லா கான்பரென்ஸ்.—சீர்காழியில் தஞ்சை ஜில்லா கான்பரென்ஸ் இன்று காலை 7. 15 மணிக்குக் கூடிற்று. மைஸூர்மாஜி திவான் வி. பி. மாதவராவ் ஸி. ஐ. இ அக்ராஸனம் வகித்தார்.

மிஸ்டர் வி-பி-மாதவராவ் தமது ப்ரஸங்கத்தில் ப்ரிட்டிஷ் ஆட்சியைப் பற்றியும் பப்ளிக்ஸர்விஸ் கமிஷனைப்பற்றியும், ஸ்தலஸ்வய ஆட்சியைப் பற்றியும் பேசினர். விவஸாயத்தைப் பற்றிப் பேசுகையில், நமது தேசத்தின் முக்யமான தொழில் விவஸாயமென்றும், கைத்தொழில் ப்ரதானமாயுள்ள தேசமாகிய இங்கிலண்டிலேயே கவர்ன்மெண்டார் விவஸாயத்தைப் பற்றி ரொம்பவும் கவனிக்கும் போது, நூற்றுக்கு 80 பாக ஜனங்கள் விவஸாயத்தையே நம்பியிருக்கும் இந்த தேசத்தில் விவஸாயம் பழைய நாளைய முறையில் நடந்து வரும்படி விடுவது ஸரியல்லவென்று சொன்னர். இன்னம், ஐயர்லண்டில் விவஸாய ஸம்பந்தமாகச் செய்து வரும் முயற்சிகளைப் பற்றியும், கோவாபரேஷனைப்பற்றியும், நிலஸம்பந்தமாய் கவர்ன்மெண்டு அனுஷ்டித்துவரும் கொள்கைகளைப் பற்றியும் மற்ற விஷயங்களைப் பற்றியும் விஸ்தாரமாய்ப் பேசினர்.

ஒரு மீட்டிங்.—திருச்சிஜில்லா ஸங்கத்து மெம்பர்கள் திருச்சி டவுன் ஹாலில் மீட்டிங் கூடினர்கள். திருச்சி ஜில்லாக் கான்பரென்ஸை வரும் டிஸம்பர்ஸ்ரீ 20, 21 தேதிகளில் குளித்தலையில் கூட்டுவது என்று தீர்மான மாயிற்று.

24-தேதி.—

தஞ்சாவூர் ஜில்லா கான்பரென்ஸ்.—இன்று தஞ்சாவூர் ஜில்லா கான்பரென்ஸ்கூடி க்ராம நிர்வாகம், முனிஸிபல் நிர்வாகம், ரெவின்யூ ஸெட்டில்மெண்ட், காவேரி ஸ்கீம், கல்வி, நீதி நிர்வாகப்பிரிவினை, லாண்ட் ரெவின்யூ விஷயங்கள், ஜமாபந்தி முதலிய பல விஷயங்களைப் பற்றித் தீர்மானம் செய்தது.

தஞ்சாவூர் ஜில்லா ஸோஷ்யல் கான்பரென்ஸ்:- இன்று ஸோஷ்யல் கான்பரென்ஸ்கூடி, அன்ய மதத்தில் சேர்ந்தவர்களை ஹிந்து மதத்தில் சேர்த்துக் கொள்வது, கல்யாண விஷயமான சீர் திருத்தங்கள் ஆகிய இவைகளைப் பற்றித் தீர்மானங்கள் செய்தது.

25-தேதி.

இந்திரா ராஜகுமாரி—பரோடா மகாராஜவாகிய கெய்க்வார் தமது புத்ரியாகிய இந்திராவை ஜிதீந்த்ர நாராயண ராஜ குமாரருக்குக் கல்யாணம் செய்து கொடுக்க ஸம்மதப்படாமல் தமது பெண்ணை இங்கிலண்டுக்கு அழைத்துப்போனரென்றும், ஜிதீந்தர் இங்கிலண்டுக்குப் போய் மறுபடியும் கல்யாண விஷயமாய் ப்ரயத்தனப்படுவார் என்றும் வைகாசிமாஸத்து ஸஞ்சிகையில் குறிப்பிட்டிருந்தோம். ஜிதீந்த்ரருக்கும் இந்திராவுக்கும் கல்யாணம் நடப்பதாக ஏற்பாடாகி கல்யாணம் இன்று லண்டனில் பக்கிங்ஹாம் பாலஸ் ஹோட்டலில் நடைபெற்றது. இந்திரா ராஜகுமாரி முதலில் ப்ரும்ம ஸமாஜ மதத்தில் சேர்ந்து கொண்ட பிறகு இருவரும் ஒரு ரெஜிஸ்ட்ரார் ஆபீஸிற்குப் போய் கல்யாணம் செய்து கொண்டதாக ரெஜிஸ்டர் செய்து கொண்டார்கள். பிறகு ஹோட்டலில் ப்ரம்ம ஸமாஜத்து விதிப்படி கல்யாணச் சடங்குகள் நடைபெற்றன.

தலாத்பே.—துருக்கியின் உள்நாட்டு மந்த்ரியாகிய தலாத்பே அட்ரியாநோபிள் விஷயமாக பல்கேரியருடன் கலந்து பேச அட்ரியாநோபிளுக்குப் போயிருக்கிறர்.

26-தேதி.—

சீனக்கலகம்.—நாங்கிங் பட்டணம் முற்றுகை போட்டிருந்த சீனக்கவர்ன்மெண்ட் ஸேனையின் ஸ்வாதீனமாய்விட்டது.

28-தேதி.—

துருக்கி விஷயம்.—எல்லைத்தகராரைத் தீர்ப்பதற்காக முடிவான ப்ரேரணைகளை துருக்கி சீக்ரத்தில் வல்லரசுகளுக்கும் பல்கேரியாவுக்கும் தெரியப்படுத்

தும். அட்ரியா நோபிளையும் சர்க்கிலியேஸையும் தன் வச மிருக்கவேண்டு மென்று துருக்கி பிடிவாதம் செய்யும். ஆனால் வேறு சில விஷயங்களில் இணங்கிக்கொடுக்கும். இந்த இணக்கங்கள் பல்கேரியாவுக்கு ஸம்மத மாயிருக்குமென்று நம்பப்படுகிறது.

சீனக்கலகம்.—யாங்க்ட்ஸிநதி வழியாய் கலகக்காரர்களுக்குப் போகும் உணவுகளை கவர்ன்மெண்ட் துருப்புகள் தடுத்துவிடுகின்றன.

கலகக்காரர்கள் வ்யாபாரிகளை அவர்கள் ஸொத்தில் ஒரு பங்கை தங்களுக்குக் கொடுக்கும்படி நிர்ப்பந்தம் செய்கிறார்கள். ஒரு பட்டு வ்யாபாரியிடம் நிர்ப்பந்தம் செய்து 20 ஆயிரம் டாலர் வாங்கி விட்டார்கள்.

ஸப்ரேஜட்களின் விஷமம்.—இங்க்லண்ட் மந்த்ரியாகிய ஆஸ்குவித் கோல்ப் விளையாடிக் கொண்டிருக்கும் பொழுது அவரை இரண்டு ஸப்ரேஜெட்கள் பிடித்து இழுத்து அவர் தொப்பியைக் கீழே வீழ்த்தி விட்டார்கள். ஆஸ்குவித்தின் புத்ரி தந்தை உதவிக்கு வந்தாள். இரண்டு ஸப்ரேஜெட்கள் டிடக்டிவ்களால் கைது செய்யப் பட்டார்கள். அவர்கள் பெயரையாவது விலாஸத்தையாவது சொல்லமாட்டோமென்று சொல்லிவிட்டார்கள்.

ஆஷின் ஞாபகச் சின்னம்.—திருநெல்வேலி கலெக்ட்டராயிருந்து சுட்டுக்கொல்லப்பட்ட மிஸ்டர் ஆஷின் ஞாபகார்த்தமாக அஷ்டகோணமண்டபமொன்றும், தண்ணீர்த் தொட்டியும் தண்ணீர்ச்சுழாயும் கட்டி முடிந்ததை கலெக்ட்டர் மிஸ்டர் மலோனி திறந்துவைத்தார்.

30-தேதி.—

ஒரு மீட்டிங்.—இன்று மாலை 5 மணிக்கு சென்னை விக்டோரியா ஹாலில் மஹாஜன கூட்டம் கூடிற்று. நீதிநிர்வாக உத்யோகங்களைப் பிரிப்பதைப்பற்றியும், தென்னாப்பிரிக்கா இந்தியர்கள் விஷயத்தைப்பற்றியும், இந்தியா மந்திரி ஆலோசனை ஸபையின் திருத்த அமைப்பைப்பற்றியும் தீர்மானங்கள் செய்யப்பட்டன. மைஸூர் மாஜி திவான் வி. பி. மாதவராவ் அக்ராஸனம் வகித்தார்.

31-தேதி.—

துருக்கி விஷயம்.—துருக்கியுடன் அட்ரியா நோபிள் விஷயமாய்ப்பேசி முடிக்க பல்கேரிய டெலிகேட்டுகள் கான்ஸ்டான்டிநோபிளுக்குப் போகிறார்கள். அவர்கள் ரயில் ப்ரயாணம் ஸௌகர்யமாய்ச் செய்யும் பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

பல்கேரியர் கிர்டாஜ்லியை ஸ்வாதீன மாக்கித் தங்குவதைத்தடுக்க கிர்டாஜ்லிக் குடிகள் தடுத்தார்கள். போர் நடந்தது.

# SEASON.

## காலஸ்திதி.

### Rainfall.

மழை.—1913ஆ ஏப்ரல்மீ 1உயிலிருந்து 1913ஆ ஸெப்டம்பர்மீ 1உவரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்கவேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம் ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 25·95 | 23·66 |
| வால்டேர் | 18 06 | 17·54 |
| காக்கினாடா | 16·46 | 18·20 |
| மசூலிப்பட்டணம் | 8·30 | 19·53 |
| நெல்லூர் | 7·76 | 8·67 |
| மதராஸ் | 6·12 | 12·80 |
| கூடலூர் | 7·71 | 11·39 |
| நாகப்பட்டணம் | 7·4[illegible] | 9·65 |
| பாம்பன் | 3·05 | 4·14 |
| கொழும்பு | 31·80 | 37 36 |
| திருவநந்தபுரம் | 32·[illegible]9 | 3[illegible]·73 |
| கொச்சி | 76·57 | 80·93 |
| கள்ளிக்கோட்டை | 73·46 | 93·29 |
| மங்களூர் | 82·11 | 106·41 |
| மெர்க்காரா | 92·96 | 103·36 |
| ஐதராபாத் | 15·61 | 19·78 |
| பல்லாரி | 6·16 | 9·10 |
| கர்நூல் | 9 11 | 15·47 |
| கடப்பை | 6 94 | 15·56 |
| ஹாஸ்ஸான் | 18·79 | 21·17 |
| பெங்களூர் | 11·36 | 18·39 |
| கொடைக்கானல் | 20 83 | 26·73 |
| உதகமண்டலம் | 26·09 | 32·20 |
| கோயம்புத்தூர் | 5·52 | 8·35 |
| வேலூர் | 8·98 | 19·80 |
| சேலம் | 15·80 | 21·36 |
| திருச்சினாப்பள்ளி | 9·33 | 12·21 |
| புதுக்கோட்டை | 8·04 | 15·02 |
| மதுரை | 7 12 | 12·79 |
| திருநெல்வேலி | 3·15 | 5·97 |

# Calendar—பஞ்சாங்கம்.

| அம்ருதாதி | லக்னபாக்கி | அகசு | துலு | இங் | தமி | வா | 47-ப்ரமாதீசஹூ புரட்டாசிமூ தக்ஷிணயனம்-வருஷருது } கொல்லம்-1089 பஸலி-1323 \| இங்கிலீஷ்- 1913ஹூ செப்டம்பர்-அக்டோபர்மீ \| ஹிஜரி-1331 ரம்ஜான் ஷவ்வால் |
|---|---|---|---|---|---|---|---|
| யோகம். | நா வி | நா வி | ௳ | ௳ | ௳ | | பகுள, இஷ்டி, மகாளயபக்ஷாரம்ப, சூன்யார்க்கம். |
| அசி | 4 59 | 30 11 | 14 | 16 | 1 | செ | ப்ர 36-59, உட் 57-17, கண் 37-9, பால 3-45, தி 16-39, கண்யாசூன்யதி, ஷடசீதிபுண்யகால பாத்ரபத |
| உ | 49 | 10 | 15 | 17 | 2 | பு | த்வி 43-14, ரே 60-0, விரு 39-24, கவு 10-0, ரா 0-46, அசூன்யசயனவிரு, கன்யாத்விதீயாதி |
| சிஅ | 40 | 8 | 16 | 18 | 3 | வி | த்ரி 48-55, ரே 4-42, துரு 41-24, வணி 16-10, [மகாபரணீ } |
| அசி | 30 | 6 | 17 | 19 | 4 | வெ | சது 53-44, அசு 11-28, வியா 42-45, பவ 21-27, தி 0-24, ரா 7-49, சங்கடசதுர்தீ } |
| சிஅ | 20 (கன்னி) | 5 | 18 | 20 (கன்யாமீ) | 5 | ச | பஞ் 57-23, பர 17-18, ஹர் 43-16, கவு 25-43, ரா 19-21, கிருத்திகை |
| சி | 10 | 3 | 19 | 21 | 6 | ஞா | ஷஷ் 59-37, கிரு 21-5, வஜ் 42-43, கர 28-42, தி 4-11 |
| அ | 0 | 2 | 20 | 22 | 7 | தி | ஸப் 60-0, ரோ 25-3, வித் 40-56, பத் 30-7, ரா 9-31, திரிதினஸ்பிருக் |
| சிம | 3 50 | 1 | 21 | 23 | 8 | செ | ஸப் 0-12, உப 58-50, மிரு 26-33, விய 37-47, பால 29-50, ரா 17-39, துலாயன |
| | | | | | | | 37-54, மத்யாஷ்டமி வியதிபாதமகாளய, காலாஷ்டமீ மகாலக்ஷ்மீ விரு |
| சி | 41 | 29 59 | 22 | 24 | 9 | பு | நவ 56-6 திரு 26-18, வரி 33-14, தை 27-48, ரா 25-5, அவிதவாநவமீ, இராமா |
| அ | 31 | 58 | 23 | 25 | 10 | வி | தச 51-26, புன 24-18, பரி 27-16, வணி 23-58, ரா 13-18, திவாமா |
| உம | 21 | 56 | 24 | 26 | 11 | வெ | ஏகா 45-14, பூச 20-41, சிவ 19-50, பவ 18-31, ரா 20-13, ஸர்வஏகா |
| மஅ | 11 | 54 | 25 | 27 | 12 | ச | த்வா 37-45, ஆயி 15-39, சித் 11-30, கவு 11-38, ரா 12-33, யதிமகாளய |
| மசி | 1 | 53 | 26 | 28 | 13 | ஞா | த்ர 29-18, மக 9-30, சாத் 1-29, உப 50-33, கர 3-37, உப 54-52, தி 27-15, திரயோதசீதி, மகாத்ரயோ |
| | | | | | | | தசீ, கஜச்சாயை, பிரதோஷம், மாஸசிவரா, கலியுகாதி [சஸ்திரஹதமகாளய } |
| சி | 2 51 | 52 | 27 | 29 | 14 | தி | சசி 20-15, பூர 2-35, உப 52-55, சுப் 41-36, சது 45-37, தி 18-29 திதிதவயம், ஸர்வமகாளயஅமா, } |
| சி | 42 | 50 | 28 | 30 | 15 | செ | ● 10-59, * ஹஸ் 48-7, பிரா 31-9, கிம் 36-23, தி 13-55, பிரதமாதி, இஷ்டி, நவராத்ராரம்ப, தௌஹித் |
| | | | | | | | ர பிரதிபத் பிண்டபிதிரு புஷ்களா, [சந்திரதர்சன அவம, கரிநாள் } |
| சி | 32 | 48 | 29 | 1 | 16 | பு | ப்ர 1-52, உப 51-31, சித் 41-25, மா 20-57, பால 27-31, தி 5-48, ரா 24-9, ஆசுவினசுத்த வைசிரா, } |
| அசி | 22 | 47 | 1 | 2 | 17 | வி | த்ரி 45-54, சுவா 35-38, வை 11-23, கவு 19-30, ரா 18-40, நீராஜனாரம்பம் |
| சி | 12 | 46 | 2 | 3 | 18 | வெ | சது 39-48, விசா 31-9, விஷ் 2-45, உப 52-36, வணி 12-39, ரா 10-47, சதுர்த்தீவிரு |
| சி | 2 | 44 | 3 | 4 | 19 | ச | பஞ் 35-24, அனு 28-18, ஆயு 49-22, பவ 7-22, ரா 12-10 உபாங்கலளிதாவிரு |
| மஅ | 1 52 | 43 | 4 (ஷவ்வால்) | 5 (அக்டோபர்) | 20 | ஞா | ஷஷ் 32-55, கே 27-20, ஸவு 44-57, கவு 3-54, ரா 17-45, ஷஷ்டியுபவா |
| சிஉ | 43 | 41 | 5 | 6 | 21 | தி | ஸப் 32-35, மூல 28-23, சோ 42-11, கர 2-31, தி 24-15, ரா 23-39, பத்ரிகாபூஜாதி |
| சிபி | 33 | 39 | 6 | 7 | 22 | செ | அஷ் 34-5, பூரா 31-22, அதி 40-56, பத் 3-56, ரா 23-7, மஹாஷ்டமீ |
| அசி | 23 | 38 | 7 | 8 | 23 | பு | நவ 37-29, உரா 36-8 சுக 41-4, பால 5-34, ரா 17-26, மகாநவமீ ஸரஸ்வதீபூஜை, மன்வாதி, பலிதானம் |
| | | | | | | | ஸரஸ்வதீ விஸர்ஜனம் இரவு முதல் யாமமுடிவு 37-13 [யாத்திரை பட்டாபிஷேகம்,பௌத்தஜயந்தி |
| சி | 13 | 37 | 8 | 9 | 24 | வி | தச 42-23, சிர 42-20, திரு 42-17, கவி 9-46, ரா 23-51, விஜயதசமீ, சிரவணதீப, ஷி உபவாச, விஜய |
| சி | 3 | 35 | 9 | 10 | 25 | வெ | ஏகா 48-19, அவி 49-31, சூல 44-18, வணி 15-14, ஸர்வஏகா |
| அம | 0 53 | 34 | 10 | 11 | 26 | ச | த்வா 54-51, சத 57-16, கண் 46-46, பவ 21-33, தி 9-49, இராமா |
| சி | 44 | 32 | 11 | 12 | 27 | ஞா | த்ர 60-0, பூட் 60-0, விரு 49-23, கவு 28-12, தி 15-22, பிரதோஷ திரிதினஸ்பிருக், திவாமா |
| சி | 34 | 31 | 12 | 13 | 28 | தி | த்ர 1-33, பூட் 5-9, துரு 51-53, கர 34-51, ரா 2-42 |
| அசி | 24 | 29 | 13 | 14 | 29 | செ | சசி 1-0, உட் 12-45, வியா 54-0, பத் 41-1, ரா 16-52, கோஜாகரவிரு, கரிநாள் |
| உம | 0 14 | 29 28 | 14 | 15 | 30 | பு | ○ 13-53, ரே 16-50, ஹர் 55-34, பால 46-33, கன்யாபிரதமாதி, கார்த்திக ஸ்நானாரம்பம். |

| ரா | | ச | செ |
|---|---|---|---|
| | 1-கன், பு<br>5-சிம்-சு<br>19 துலா-பு<br>30-கன்-சு | | சு |
| குரு | | | ரா-பு<br>கே |

* அபராணணத்தில ஆசுவனமாதலால் இங்கு ஸாம்மாபாகர்ம இலலே.

# சாஸ்திரீய உரங்கள்.

எங்கள் ராணிப்பேட்டை உரக்கிடங்கு.

## விசேஷ உரங்களின் சில நற்சாட்சிப் பத்திரங்கள்.

சென்ற வருஷம் தங்களிடத்திலிருந்து நான் வாங்கிய உரத்தினுல் எனக்கு மிகவும் நல்ல பலன் கிடைத்தது.

சந்தவேரி, பேலூர். } ஈ. பி. பாய்ட்.

தங்களுடைய கம்பெனியிலிருந்து நான் பெற்றுக்கொண்ட எல்லா உரங்களும் முற்றிலும் திருப்திகரமாகவேயிருந்தன என்று சொல்வதில் எனக்கு மெத்த சந்தோஷம். இந்தக் கடிதத்தைத் தங்கள் இஷ்டம்போல் உபயோகித்துக்கொள்ளலாம்.

சிக்கன்ஹள்ளி பேலூர், ஹஸ்ஸன் ஜில்லா. 1908, ஆகஸ்டு 11உ. } பிரான்ஸிஸ் எம். ஹாமில்ட்டன்.

நல்ல பைகளில் பர்த்தி செய்யப்பட்டு தங்களிட மிருந்துவந்த, தங்களுடைய காபி உரத்தை நான் மூன்று பருவங்கள் உபயோகித்ததன்மேல் நல்ல உரமென்று நான் கண்டு என் இஷ்டத்தை வெளியிட விரும்புகிறேன். சாதாரண ஏழைத் தோட்டக்காரனுக்கு நான் சொல்வது: 4 அல்லது 5 அந்தர் உரத்தை உபயோகித்துப்பார், அது அவ்வளவு "கிராக்கியான உரம்" மல்ல என்று காண்பாய்.

கிரி, சிக்கமொகுளூர், 1908, ஆகஸ்டு 11உ } எச். டபிள்யு. ரேக்ஸ்.

(இன்னும் வரும்.)

**The Presidency Manure Works, Ltd.,**
**Ranipet.**

***Managing Agents: Parry & Co., Madras.***

**இராஜதானி ரஸாயன உரக்கிடங்கு, இராணிப்பேட்டை.**

மானேஜிங் ஏஜண்டுகள்:—


பாரி அண்டு கம்பெனி,

மதராஸ்.

# KHADER AND YOUSUFF BROS

Watch Dealers, P. L., MADRAS, E. C.

## "ஸர்தார்"



இது மேல் சாவியுள்ளதும், கனத்த கண்ணாடியால் மூடிபோட்டதும் மிகவும் சரியான காலத்தைக் காட்டக் கூடியதும் வெகு நாளைக்கு ஓடக்கூடியதுமான வெகு நேர்த்தியான கை கடியாரம். தென் இந்தியா ரயில்வே உத்தியோகஸ்தர்களுக்கு ஸப்ளை செய்யப்படுகிறது. மிகவும் சிறந்த "லீவர்" கடியாரம்.

விலை ரு. 12.


## "உத்தியோகஸ்தர்"



இது உத்யோகஸ்தர்களுக்கு ஸ்பெஷலாக செய்யப்பட்ட கடியாரம். மேல்சாவியுள்ளது. ஒருபக்கம் கனத்த கண்ணாடியால் மூடியுள்ளது. சரியான காலம் காட்டும். முரட்டுத்தனமாயுபயோகித்தாலும் கெட்டுப்போகாது. கொஞ்சம் சிறிய சயிஸ். அழகாயும் திருப்திகரமாயுமிருக்கும்.

தபாற்கூலியுள்பட விலை ரு. 10

## கோல்ட் மெடல் "யாங்கீ" ஸர்க்யூட் கட்டில்.



இது மிகவும் சிறந்த அமெரிக்கன் மரத்தினால் செய்யப்பட்டு, வெளியே போகிறவர்களுக்கு மிகவும் உபயோகமானது. இது $6\frac{1}{2}$ அடி நீளம் $2\frac{1}{2}$ அடி அகலம் $1\frac{1}{2}$ அடி உயரம். அதனுடைய நிறை 15 பவுண்டுதான். 1000 பவுண்டு எடை தாங்கும், கோடை காலத்தில் நிலா வெளிச்சத்தில் மிகவும் லகுவாய்த் தூக்கிக்கொண்டுபோய், வேண்டுமான இடத்தில் போட்டுக்கொண்டு தூங்கலாம். கொசுவலை யுள்பட ரு. 20 இதற்கு எழுதும்போது, சமீபத்திலுள்ள ரயில் ஸ்டேஷனை எழுதுவதுடன் ரூ.5 அட்வான்ஸ் அனுப்பவேணும்.

## காதர் அண்டு யூஸப் பிரதர்ஸ்,

கடியார வர்த்தகர்கள், கவர்மெண்டு ஸப்ளையர்கள்,

பி. எல். சென்னை, E. C.



MADRAS: Printed by Thompson & Co. at the Minerva Press

Published by G. A. VAIDYARAMAN & Co., Sunkurama Chetty Street, Georgetown, Madras.